# சச்சிதானந்தம்



ஈசுர ஆண்டு தியானநிலைய திறப்புவிழா
தைத்திங்கள் (9-2-1998)
சிறப்புமலர்

வெளியீடு:- ஸ்ரீசச்சிதானந்த ஆசிரமம், ஆனந்தநகர்-கைதடி. இலங்கை.

# சச்சிதானந்தம்

## தியான நிலையத் திறப்பு விழா
## சிறப்பிதழ்

**09-02-98**

வெளியீடு:

ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம்
ஆனந்த நகர்,
கைதடி.



ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் குருபீடமுதல்வர் சச்சிதானந்த செல்லம்மா அம்மையார் ஆசிரமக் கொடியேற்றி ஆரம்பித்து வைக்கின்றார். தற்போதைய தலைவர் ஆன்மீகச் செம்மல் இ. குழந்தைவடிவேலுவும் காணப்படுகிறார்.



ஆசிரம தியானநிலைய கால்கோள் விழாவின் போது கைதடி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள் அருளாசியுரை வழங்குவதையும், சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருகருகே இருப்பதையும் படத்தில் காண்க.

# இதயம் மலர்ந்த வணக்கம்!



என் உயிருக்குயிராய் நின்று என்னை ஆளும் குருமணிக்கு இதயம் மலர்ந்த வணக்கம்.

1958ம் ஆண்டு இக் காணியை சுவாமிக்கு தருமசாதனமாக சோ. தங்கம்மா அவர்கள் வழங்கினார். சுவாமியின் அன்பரான வைத்திய கலாநிதி வ. சின்னப்பு அவர்கள் ஒரு சிறு குடிசை அமைத்துத் தந்தார். காணி தருமம் செய்த அன்னைக்கும், குடிசை அமைத்துத் தந்த அன்பருக்கும் சுவாமியின் கருணை என்றும் உரித்தாகுக.

எந் நேரமும் அவ் வள்ளல் குருமணி கண்மூடியபடியே தியானத்தில் இருப்பார். குனிந்து செல்லும் ஒரு சிறு குடிசை தான் தவசீலன் இருந்த இடம். அவ்விடத்தில், அந்த ஞானியை எல்லா மக்களும் அறிய வேண்டுமென்ற பெருங் காதல் கொண்ட தவச்செல்வன் குழந்தைவடிவேலு அவர்கள் தியான மண்டபம் அமைக்க முன்வந்தார். இது அவரின் பூர்வ புண்ணிய உந்தலாகும். அவர் குரு அருளின் கருணையோடும், மக்களின் ஆதரவோடும் இத்தியான மண்டபத்தைக்கட்டினார். "அன்பர் பணியாம் அறமது செய்கில் இன்னும் பிறவியும் வேண்டுவனோ" என்பது தாயுமான சுவாமிகளின் திருவாக்கு. எல்லா மக்களும் குருமணியின் அருட்கடாட்ச ஞானதிருஷ்டி பெற்று வாழ்வதாக.

சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையார்
குருபீடம்
ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம்
கைதடி

# அருளாசி

நல்லை

திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர்

**- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமி -**

**சி**வனேயச் செல்வர்களே!

**யா**ழ்ப்பாணம் கைதடி சச்சிதானந்தா ஆசிரமத்தில் தியான மண்டபநிலையத் திறப்பு விழாவையொட்டி மலர் வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். சத்து, சித்து, ஆனந்தமாகியவை மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்க வேண்டிய தர்மமாகும். விஞ்ஞானம் வளர்ந்திருக்கும் இக் காலத்தில் மனிதனால் எதனையும் அழிவுக்குக் கொண்டு வரமுடியுமே தவிர ஆக்க முடியாது. ஒரு பொருளை ஆக்க வேண்டுமாக இருந்தால் இறைவன் கருணையினாலேயே அப்பொருள் ஆகின்றது. அந்நிலையில் தியானம் மனிதனுக்குப் பூரண ஆக்க சக்தியைக் கொடுக்கக் கூடியது. அதற்கு ஓர் இடம், ஒரு சூழல் என்பன அமைய வேண்டியது இன்றியமையாதது. அதனைக் கருத்திற் கொண்டு கைதடி சச்சிதானந்தா ஆசிரமம் அதற்கு ஒரு மண்டபத்தை அமைத்துள்ளது. இம் மண்டபத்தை எல்லா மக்களும் பாவித்து பேரின்பத்தையடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

" என்றும் வேண்டும் இன்ப அன்பு "

**சிவ சிவ**

# அருளாசி

ஞானச்சேரி

## - நெரூர் ஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திரர் -



மனத்தை அடக்குவது அரிது! அது பைத்தியம் பிடித்த குரங்குக்கு ஒப்பானது. பல குரங்குகளுக்கு மத்தியில் அமைதியற்ற ஒரு குரங்குக்கு ஒருவன் கள்ளினைக் குடிக்கக் கொடுத்தான். அக் குரங்கை ஒரு தேளும் கொட்டியது. தேள் கொட்டினால் அதன் வேதனை எப்படி இருக்கும் என்பது தெரியும் தானே. அக் குரங்கு படும் வேதனைகளை எண்ணிப் பாருங்கள்.

மனிதனின் மனமும் அக்குரங்கைப் போன்றதே. ஆசையென்னும் மதுவை அருந்துகிறது. பொறாமை கொள்கிறது. கர்வம் கொள்ளச் செய்கிறது. காமத்திற்கு அடிமையாகிறது. இதனால் மனிதன் எவ்வளவு துன்பமடைகிறான். இத்துன்பத்திலிருந்து விடுபட மனதை நாம் அடக்கி ஆள வேண்டும். அதற்குத் தியானம் ஒன்றே சிறந்தவழி. இது எம் அனுபூதிமான்கள் கண்ட நெறியுமாகும்.

எவ்வுயிரும் இன்புற்று இருக்க
எவ்வுயிருக்கும் அமைதி நிலவுக
எவ்வுயிரும் ஆனந்தம் பெறுக
எத்திசை உயிர்களும் இவற்றைப் பெறுக.

இங்ஙனம் தனிமனித முன்னேற்றத்திற்கும், சமுதாய ஒற்றுமைக்கும் வழிகோலும் கைதடி ~ ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம், தியான மண்டபம் திறப்பதுவும் இறைவனின் பெருங்கருணையே.

நமது சமுதாயத்தினர் வாழ்வில் அன்பு, சாந்தி, இனிமை இருத்தல் வேண்டும். இதனால் எல்லாம் சித்திக்கும். பரம் பொருளின் பேரருள் எல்லோர் மீது இருக்கவும், நீங்கள் எல்லோரும் மோட்ச சாம்ராஜ்யத்தை பிராப்தித்து ஜீவன் முக்தர்களாய்ப் பேரானந்தத்தில் எப்பொழுதும் திளைத்திருப்பீர்களாக.

"சர்வமும் பிரம்ம மயம்"

சதாசிவ பிரும்மேந்திரரின் ஞானச்சேரி டிரஸ்ட்
அருள்மிகு பசுபதீஸ்வரர் சுந்தரவரதராஜ பெருமாள் கோவில்
திருவெளிச்சை, கோடம்பாக்கம், சென்னை.

15, செஸ்ட் சர்குலர் றோட், மந்தைவெளி
சென்னை - 600 028

# ஆசியுரை

இணுவில் காயத்ரி பீட அதிபர்
தர்ம சாஸ்தா குருகுலம்
## - சிவஸ்ரீ. தா. மகாதேவக் குருக்கள் -

**கை**தடி சச்சிதானந்தா ஆசிரமத்தில் புதிய ஒரு தியான மண்டபம் ஒன்று அமைப்பதையிட்டுப் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். மௌனத்தால் வாழ்ந்து முத்தி அடைந்தவர்கள் ஒரு சிலரே தியானம் செய்வதற்கு மௌனமும், புலனடக்கமும் வேண்டும். தியானம் செய்வதற்கு ஏற்ற இடம் பொருத்தமாக இருப்பது தியான வலிமையை மேலும் பெருக்கும்.

சச்சிதானந்தா சுவாமிகளுடைய ஆசிரமச் சூழலில் மௌனமாக இருந்து தியானம் பெறுவது மிகவும் பொருத்தமானதாகும் மனிதனுடைய அன்றாட வாழ்வு துன்பமும், நோயும் நிறைந்ததாக வளர்ந்து வருகிறது. வீண் வாக்குவாதங்களும், மனக்கிலேசங்களும் படர்ந்து வருகின்றன. பகையும், கோபமும் தொடர்ந்து வருகின்றன. இவற்றை ஓரளவாவது குறைத்து, நிறைவான வாழ்வு வாழ, எமக்கு முன் வாழ்ந்து காட்டிய ஆன்மீகப் பெரியார்களை நினைவு கூர்வது மிக அவசியமாகும் அவர்கள் வாழ்ந்த சூழலில் அவர்களுக்கென ஒரு ஆசிரமம் அமைத்து அவ்விடத்தில் நலன் பெருக்கும் தியான மண்டபம் எல்லா மக்களையும் இன்பமடையச் செய்யும் ஒரு சிறந்த பணி எனப் பாராட்டுகின்றேன். இப்பணியில் எல்லா மக்களும் ஈடுபட்டுத் தியானப் பயிற்சி பெற்று நன்மையும் மேன்மையும் அடைய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க.

காயத்திரி பீடம்
இணுவில்



தமிழ் வேதத்திரட்டு வெளியீட்டு விழாவில் வைத்திய கலாநிதி K.T.S. சபாநாதன் சிறப்புரையாற்றுகிறார்.



ஆசிரமத் தலைவர் குலபதி ஆறுமுகம் கந்தையா J.P அவர்கள் சச்சிதானந்த பாலர் பாடசாலைப் பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கின்றார், முன்னிலை தவத்திரு ஆறுமுகம் சுவாமிகள்

# ஆசியுரை

தெல்லிப்பழை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர்
**- செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி -**



சன்மார்க்க நெறியில் வாழ்ந்து சமூக நலனுக்காகத் தம்மை அர்ப்பணித்துப் பணிபுரிகின்ற தவசிரேட்டர்களால் பெருமையடைந்த நாடு நமது நாடு. இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர் கொழும்புத்துறை யோகர் சுவாமிகள். மேலும் சச்சிதானந்த சுவாமி அவர்களும் கைதடியைப் புனித பூமியாகக் கருத்தில் கொண்டு, அங்கு தனது தவ வாழ்க்கையைப் பூரணமாக்கிய மகான் என்பதை நாம் நன்கு அறிவோம். இந்த ஞான தபோதனரின் அருள் வழியிலே தவப்பெரும் செல்லம்மா அம்மையார் கைதடியில் இன்றும் அந்தத் தூய நெறியில் வாழ்ந்து வருவதை நாம் நேரில் காணலாம், சில காலம் மகளிர் இல்லப்பிள்ளைகளும் அடியேனும் அங்கு தங்கியிருக்கும் வாய்ப்பும் பெற்றோம். இது எல்லாம் முன்னைத் தவமேயன்றி வேறில்லை.

இந்தப் புண்ணிய மண்ணிலே ஒரு தியான மண்டபம் அமைக்கப் பட்டுத் திறப்பு விழா நடைபெறுவது மிகவும் வரவேற்கத்தக்க நிகழ்வாகும். மேலும் தியானமண்டபமாக விளங்க இருப்பதும் மிகவும் மகிழ்வைத் தருகிறது.அல்லற்பாடுகளின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மவர்க்குக் குறிப்பிட்ட ஒரு சில விநாடிகளாவது தியான அமைதி நிலை வேண்டியதாகும். இதனை ஓரளவேனும் நிறைவேற்றும் நிறுவனங்களாக மேற்படி நிலையங்கள் அமைவதை வரவேற்பதுடன் இத்தகைய பணிகளில் ஈடுபடும் அனைவரையும் வணங்கி வாழ்த்துவது எம் போன்றார் கடனாகும்.

ஓம் சாந்தி! சாந்தி!

# ஆசியுரை

கைதடி
கயிற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தானப் பிரதம குரு

## - சிவஸ்ரீ மு. கணேசக் குருக்கள் -

உலகில் எத்தனையோ ஆன்மாக்கள் பிறந்து இறக்கின்றன. கோடி ஆன்மாக்களில் ஒன்று தெய்வீக ஆன்மாவாகப் பிறந்துவிடுகிறது. அவ்வாறான ஆன்மாக்கள் ஆன்றோர்களாக, சான்றோர்களாக, அருளாளர்களாக, சித்தர்களாக ஆகிவிடுகின்றனர்.

இவ்வாறான ஆன்மாக்களே ஏனைய உயிர்களுக்கும் நன்மை செய்பவர்களாகின்றனர். தனக்கென வாழாது, மற்றவர்களுக்காக இறைவனை ஒரே சிந்தனையோடு பிரார்த்தனை செய்து, அதிக யோகபலனைப் பெற்றவர்கள் இவர்கள். உலகியல் வாழ்க்கையிலே ஈடுபட்டுத் துன்பம் அடையும் மக்கள் சிறிதளவாவது விடுதலைபெற மேற்கூறப்பட்ட சித்தர்கள் ~ யோகிகள் ~ அருளாளர்கள் உதவுகின்றனர்.

இறைவனுடைய அருட்பார்வை பெருமை வாய்ந்த பேரருளாளர்களிடம் தேங்கி நிற்கிறது. எனவே அவர்களை அணுகி, ஆதரித்துப் போற்றுபவர்கள் இறையருளைப் பெற்றவர்களாக ஆகிவிடுகின்றனர் என்பதில் சந்தேகமில்லை.

யோகியாக வாழ்ந்தவர்கள் தங்கள் தியான பலத்தால் சமாதியாகி விடுகின்றார்கள். அவர்கள் வாழ்ந்த பிரதேசத்தில் அவர்களுடைய ஆன்மீக அருள் பரவி நிற்கும். அவர்களுடைய திருவடியைப் போற்றி ஆதரித்து வருபவர்கட்கு அக்குருவருள் இலகுவாகக் கிடைக்கிறது.

கைதடியில் வாழ்ந்து முத்தரான சச்சிதானந்த சுவாமி அவர்களுடைய குருவருளைப் போற்றி அமைக்கப்படும் தியான மண்டபம், அனைவருக்கும் தேக பலத்தையும், ஆன்மீக வளத்தையும் நல்க வேண்டும் என மனமாரப் பிரார்த்திக்கின்றேன்.

எங்கும் சாந்தி நிலவப் பிரார்த்திப்போமாக.

# வாழ்த்துரை

தென்மராட்சி
பிரதேச செயலாளர்
**- பு. சுந்தரம்பிள்ளை -**

**தெ**ன்மராட்சிப்பிரதேசத்தில் பல பகுதிகளிலுமிருந்து மக்களை வரவேற்கின்ற கிராமமாகத் திகழ்வது கைதடியாகும். இப்பகுதிக்கு மக்கள் வருவதற்குக் காரணங்கள் பலவாகும். அனாதையான குழந்தைகளையும் முதியோர்களையும், செவிப்புலன், விழிப்புலன் இல்லாதவர்களையும் ஆதரிக்கின்ற தன்மைகள் மேலோங்கியுள்ளதாலும் மற்றும் ஆயுர்வேதவைத்தியசாலை, யாழ் பல்கலைக்கழக வளாகம் முதலியன அமையப்பெற்றதாலும் இக்கிராமத்திலே சிறப்புகள் மேலோங்கியுள்ள தன்மையை அறிகின்றேன். அத்துடன் ஆலய வழிபாடுகள், இப்பகுதி மக்களிடையே சிறப்பாக அமையப்பெற்றுள்ளது. இவற்றை எல்லாம் உணருகின்றபோது, கைதடிக்கிராமம் ஒரு புண்ணிய பூமி என்றே கூறுவதற்கு, மேற் கூறியுள்ள விடயங்கள் சான்றாக அமைந்துள்ளன.

அத்துடன் இப்பகுதியிலே யோகர் சுவாமிகளின் சீடராக இருந்த மார்க்கண்டு சுவாமிகளும், ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகளும் வாழ்ந்து இப்பகுதியிலே இறை பக்தியை மக்கள் மனதிலே மேன்மையுடையதான நிலையிலே வைத்துள்ளார்கள் என்பதையும் அறிவேன். இவ்வாறான தன்மையிலே பக்தி என்பது ஒருவருடைய மனதிலே அமைதியான பிரார்த்தனை மூலம் தான் அமையும் ~ என்பதற்கு எடுத்துக்காட்டாக கைதடி வடக்குப் பகுதியிலே, ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகள் வாழ்ந்து அருள் பாலித்த பூமியிலே, அமைதியான பிரார்த்தனைக்கு ஒரு தியான மண்டபம் அமைத்திருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இதில் மக்கள் தியான மூலம் அமைதியான வாழ்வு கிடைத்து ஞான ஒளி பெற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**இமைப்பொழுதும் என்நெஞ்சில்**
**நீங்காதான் தாள் வாழ்க.**



# வாழ்த்துரை



யாழ்ப்பாணம்
இந்துசமயப் பேரவை செயலர்
**திரு. சி. சக்திகிரிவன்**

**ஸ்ரீ** சச்சிதானந்தா ஆசிரமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள தியான மண்டபக் குடமுழுக்கையொட்டி வெளியிடவுள்ள மலருக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கைதடிக் கிராமம் தர்மப்பணிக்கு இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட பிரதேசமாகும். இங்கு தர்மசம்பந்தமான நிறுவனங்கள் பல்கிக் காணப்படுவது இதற்கு நல்ல சான்றாக அமைகின்றது. தர்மம் எங்கிருக்கின்றதோ அங்கு சிவபெருமானின் திருவருளும் பொலிந்திருக்கும். சிவபிரான் தர்மமாகிய ரிஷபத்தில் எழுந்தருளி இருப்பதும் இவ்வுண்மையை உணர்த்தவேயாம்.

சிவ வழிபாடு ~ சிவனடியார் தொடர்பால் உயர்ந்த இக்கிராமத்திற்கு மகுடம் வைத்தாற்போல் ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமத்தில் தியான மண்டபம் அமைந்துள்ளது. ஸ்ரீ பரமேஸ்வரன் தெற்கு நோக்கி எழுந்தருளி சின்முத்திரையோடு தெட்சணா மூர்த்தியாக இருந்து, மௌன நிலைபேணி, தியானத்தை உலகிற்கு உணர்த்துகின்றார்.

இன்றைய தொழில் நுட்ப விஞ்ஞான யுகத்தில், மனிதன் எத்தனையோ வகைப்பட்ட தியானத்தில் நின்று உலகில் உழல்கின்றான். ஆத்மீகத்தில் தியானம் என்பது மனதை ஒருவழிப்படுத்திச் சிந்தனையை அவனுக்குரியதாக்குவதே. சிந்திப்பார் சிந்தனையுள்ளவன் சிவன். சிந்தையை அவனுக்குரியதாக்கும் போது வாக்கு மணிவாக்காகும் ~ வார்த்தை மணிவார்த்தையாகும். அது அவ்வளவில் நின்று விடாது, வாழ்வே மணி வாழ்வாகிவிடும்.

இத்தகைய உயர் சிந்தையில் எழுந்துள்ள இத் தியான மண்டபத்தை அமைக்க முன்னிற்கும் திருமதி செல்லம்மா அம்மையார் அவர்கள் சிவனடியார் தொடர்பிலும், சிவ சிந்தையிலும் மேம்பட்டவர். அவர் சொல்லைச் சிரமேற்கொண்டு தன் வாழ்வை இப்பணிக்கு அர்ப்பணித்துச் செயற்படும் எமது உழுவலன்பர் திரு. குழந்தைவடிவேலு எமது இந்துசமயப் பேரவைப்பணிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர். அவர் பணி தொடர வாழ்த்துவதுடன், புதிதாக அமைந்துள்ள இத்தியான மண்டபத்தில் தியானிப்பார் தில்லை நடராஜர் தரிசனப் பேற்றிற்கு ஆளாக்கி வைத்தருளப் பரம்பொருளைப் பிரார்த்தித்து திகழ வாழ்த்துகிறேன்.

**"சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று**
**பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்"**

# தியானம்

**ஆ**த்மீகம் தியானத்தால், யோகத்தால் வளர்க்கப்பட வேண்டும் ஆத்மன் இதயக்குகையில் அமிழ்ந்திருப்பது. ஆத்மன் உடலளத்திலிருந்து பிரிந்து இருந்து வருவது. "ஓம்" என்ற ஒலி எல்லா ஒலிகளுக்குமுரிய அடிப்படை ஒலியாகும்.

இறைவனை இடையறாது சிந்தித்தல், நிஷ்டைகூடல், அவன்றன் நாம பஜனைகளைப் பாடல், கேட்டல் முதலியவற்றைச் செய்தலினால் நாம் சாந்தியடையலாம். ஆத்மன் சூக்குமத்திலும் அதிசூக்குமமானது. ஆத்மன் நித்தியமானது. மகரிஷிகள், தீர்க்க தரிசிகளின் உள்ளுணர்வுகளிலிருந்து அநுபவரீதிகளில் வெளிவந்த பதிவேடுகள் அவை.

ஆத்மார்த்திகமான நமது மனித வாழ்வு, ஆத்மனின் நுண்மதியால் மட்டுமே அவன்றன் நனவு கனவு நிலைகளை மனிதன் உணர முடியும். அந்த அதிநுட்ப நித்திய நிஜ இறைவாழ்வை மனிதன் அவன்றன் இவ்வுலக வாழ்வில் உணர்ந்து வாழவேண்டும். மனிதன் புலன்கள் ஐந்தின் மூலம் உலகறிவைப் பெறுகிறான். புலன்களால் இவ்வுலக அநுபவங்களைச் சேர்த்து, மனம் நுண்ணறிவு மூலம் ஆத்மனின் முன்னிலையில் வைக்கிறது. மனிதனுக்கு அவசியமான புலன்கள் தடுக்கப்பட்டால் மனம் உறுதியும், ஒடுக்கமும், தியானமும் உடைத்தாகும். அவற்றின் மூலம் ஆத்மனின் அதியுயர்ந்த நிலைப்பாட்டை மனிதன் இப்பிறவியில் பெற்றாக வேண்டும்.

இந்தப் பெருநிலையை நாம் அடையப் பாடுபடத் தியான ~ யோகம் பஞ்சப் புலன்களை அடக்கி இறைவனோடு இரண்டறக் கலக்க வேண்டும். தியானத் தங்கியிருப்பிடமான தபோவனங்கள் உருவாக்கப்பட வேண்டும். இன்று நம்முன் காட்சி தரும் ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகளின் தியான மண்டபம் சாதனமாக அமைகின்றது. இந்நிலையம் பொலிவுடன் விளங்கி, ஆன்மீகம் வளர்ந்தோங்க எனது ஆசிகள். தில்லைவனம் தபோவனமாக மிளிரட்டும்.



P. சந்திரசேகரம்
சைவச் சிறுவர் இல்லம்
கைதடி

சச்சிதானந்த சுவாமிகளின்மீது மிகவும் பக்தியும் அன்பும் கொண்டிருந்த அன்பர் ஒருநாள் அவரிடம் விண்ணப்பித்தார்...

"நான் சுவாமிகளை என்றும் மறக்கக் கூடாது. நான் நினைத்தபோதெல்லாம் தாங்கள் வந்து எனக்கு அனுக்கிரஹம் பண்ண வேண்டும்"

சுவாமிகள் அமைதியாக பதில் அளித்தார்

"தினமும் ஒரு நல்ல காரியம் செய். அப்போதெல்லாம் நான் அங்கு இருப்பேன்."

# முகவுரை



சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையாரின் அருளாசியுடன், ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் வாழ்ந்த தவக்குடிசை ஒரு தியான நிலையமாக அமையும் இந்நேரத்தில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு முகவுரை வழங்குவதே பேரானந்தம்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றவாறு, எல்லா மக்களும் சுவாமிகளின் அருட்கடாட்சத்தில் மிளிர வேண்டும் என்பது எனது விருப்பம். அதற்கேற்ப இவ்வாச்சிரமம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு செல்கின்றது. ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளைக் குருவாகக் கொண்டு வாழுகின்ற எமது செல்லம்மா அம்மையாரையும் எங்களையும் சுவாமிகளின் திருவருட் கடாட்சம் வழிநடத்திச் செல்கின்றதென்தில் ஐயமில்லை. இங்கு நடைபெறும் வைபவங்களிலே கலந்து கொண்டு தங்களின் முழு ஆதரவையும் தரும் ஸ்ரீ சச்சிதானந்த நிர்வாக சபையினருக்கும், சமயப் பெரியோர்களுக்கும், அடியார்களுக்கும், அன்பர்கள் ஆதரவாளர்கள் எல்லோரையும் முதற்கண் வணங்கி வாழ்த்துகின்றேன்.

மகா புருஷர்களின் வரிசையில் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளும் அற்புதம் நிறைந்தவராகக் காணப்படுகின்றார். அவரது சொல், செயல், தவவாழ்க்கைகளிலே பல அற்புதங்களைக் காண்கின்றோம். இணுவைப் பதியிலுள்ள சிவகாமி அம்பாளின் தொண்டராகிய சின்னத்தம்பிப் புலவருக்கு 1924ம் ஆண்டு மகனாக அவதரித்தார். இவருடைய பிறப்பே ஓர் அற்புதம் வாய்ந்தது. இதன் விபரங்கள் அனைத்தும் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் நினைவு நூலில் வெளியானமை தெரிந்ததே. 12 வயதில் உலக வாழ்வைத் துறந்து தெய்வீக வாழ்கைக்காக வெளியேறிய சுவாமிகள், தன் பொன்னான தவக் காலங்களைத் தென்மராட்சி பகுதியிலேயே கழித்தார். அந் நாட்களிலே தான் 1953ம் ஆண்டில் எமது அம்மையாரின் தொடர்பும் அவருக்குக் கிடைத்தது. பூர்வபுண்ணியப் பயனாக ஆன்மீக வாழ்வுக்கு வித்திட்ட அம்மையார், 1958ம் ஆண்டு தொடக்கம் தமது தவவாழ்க்கையை கைதடியிலேயே மேற்கொண்டார். அவரது தவ வாழ்விற்கு உறுதுணையாக இருந்தவர் அவரது சகோதரியாகிய காலஞ் சென்ற சோமசுந்தரம் தங்கம்மா அம்மை என்றால் அது மிகையாகாது.

அம்மையாரின் தவவாழ்க்கை விருட்சமாவதற்குக் காணியைக் கொடுத்து, சுவாமிகளின் நம்பிக்கையிலே, எதுவித குறைவும் சஞ்சலமும் இல்லாது வாழ்ந்து இறைபதம் சேர்ந்தார் அம்மையாரது மூத்த சகோதரியான சோ. தங்கம்மா அம்மையார் அவர்கள். சிங்கப்பூரில் வாழ்ந்து வரும் அம்மையாரின் இளைய சகோதரியான சி. சரஸ்வதி அவர்கள் மனம் நிறைந்த விருப்போடு தனது காணியை ஆசிரமத்துக்கே அன்பளிப்புச் செய்தார். சுவாமிகளின் திருவுளப்படி அம்மையார் அவர்களுக்கு கைதடி சுப்பிரமணியம் சுவாமிகளின் தொடர்பு ஏற்பட்டது. ஆசிரம ஆரம்ப வேலைகளைச் செய்து அதன் பணிகளை பேணி வளர்த்த பெருமை அவரையே சாரும். இத்தகைய அரும்பெரும் பணிகளைச் செய்து இங்கேயே உயிர் நீத்தார். இன்றும் அன்னாரது சிரார்த்த தினம் இங்கு கொண்டாடப்பட்டு நினைவு கூருகின்றோம்.

இவ்வாறாக அம்மையார் சிறுகுடிசை அமைத்துச் சுவாமிகளின் அருட்கடாட்சத்துடனும், அவரது சகோதரங்களின் ஆதரவோடும், அன்பர்களான வைத்திய கலாநிதி வ. சின்னப்பு, கைதடி சுப்பிரமணியம்

சுவாமிகள், சரசாலை சுப்பிரமணியம் சுவாமிகள் போன்றோரின் அரவணைப்போடும் சிறந்த முறையில் தெய்வீக வாழ்க்கையை வளர்த்தார். அம்மையாரின் தெய்வீகம் வளர்ந்து வரும் காலத்தில் 1960ம் ஆண்டு தை மாதம் புனர்பூச நட்ஷத்திரத்தில் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் விதேக முத்தி அடைந்தார். சுவாமிகளின் அருள்வாக்குச் செழித்தோங்க அம்மையார் சுவாமிக்கு மண்டபம் ஒன்றைக் கட்டினார். அதனை ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம் எனவும் அத்வைத ஞான குருபீடம் எனவும் அழைக்கின்றோம். இணுவையம்பதியிலுள்ள சுவாமிகளின் சமாதிக்கு வருடாவருடம் அபிஷேகப் பிரார்த்தனைகளையும் நடத்தி வருகின்றார். மேற்கொண்டு பார்க்குமிடத்து 1990ம் ஆண்டிற்குப்பின் ஆசிரம வளர்ச்சியில் ஒரு பொற்காலம் உதயமாகியது என்று கூறிக்கொள்ளலாம்.

உடல் நிலை தளர்ந்து வரும் காலத்தில் ஆசிரமம் தளர்ந்துவிடக்கூடாது என்ற நோக்கில், அம்மையாரால் 1990ம் ஆண்டு ஸ்ரீ சச்சிதானந்த நிர்வாக சபை உருவாக்கப்பட்டது. இந்நிர்வாக சபையினர் தம்பணிகளைக் குரு அருளுடன் இனிதாக நடத்தினர். மக்களிடையே சமயக்கல்வியை வளர்க்கும் எண்ணத்தில் சமய வகுப்புக்கள் நடத்தப்பட்டது. எமது கிராமத்தில் உள்ள பாடசாலைகளில் சமய பாடத்தில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கிச் சமயக்கல்வி ஊக்குவிக்கப்பட்டது. தென்மராட்சிப் பாடசாலைகளுக்கிடையே பண்ணிசைப் போட்டிகள் நடத்தப்பட்டு மாணவர்களுக்குத் திருமுறை ஊக்கமும் அளிக்கப்பட்டது. ஆண் பிள்ளைகளுக்கு இன்னிசைத் துறையிலே ஊக்கமும், ஆர்வமும் அளிக்குமுகமாக மிருதங்க வித்துவான் ஸ்ரீமான் திரு. க. சேயோன் அவர்களால் மிருதங்க வகுப்புக்கள் நடத்தப்பட்டன. மாணவர்களின் இன்னிசைக் கச்சேரிகளும் நடத்தப்பட்டு மாணவர்கள் மகிழ்விக்கப்பட்டார்கள்.

எமது ஆசிரமத் தலைவர் ஆறுமுகம் கந்தையா JP அவர்கள் தலைமையில் திவ்விய ஜீவன சங்கத்தினரால் யோகாசனப் பயிற்சி அளிக்கப்பட்டு, அதன் பூர்த்தி விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கம்பன் கழகம் போன்ற கழகங்களினால் சமயச் சார்பான பட்டிமண்டபங்கள் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அயல்வாழ் சின்னஞ் சிறார்களின் கல்வியை மையமாகக் கொண்டு பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இச்சிறார்களுக்குப் புத்தகம், பயிற்சிப் புத்தகம் இலவசமாக வழங்கப்பட்டதோடு இலவசமாகவே கல்வி கற்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதொன்றாகும். சத்துணவுத் திட்டமாகப் பால் மாவும் மதிய உணவாக வழங்கப்பட்டது. இப்பணியைப் பரந்த சிந்தையும் கருணை உள்ளமும் கொண்ட சாவகச்சேரி ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சிய அதிபர் ஸ்ரீமான் சு. செல்வரட்ணம் அவர்கள் பொறுப்பேற்றார். இப் பெரும் அறப்பணியை மனமுவந்து செயலாற்றியவருக்கு வணக்கமும் நன்றியும் கூறிப் பாராட்ட வேண்டிய கடமை எமக்குண்டு. சிறார்களின் உடல் நலன்களைப் பேணும் முகமாக வருடத்தின் மூன்று பருவங்களிலும் இலவச மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெற்றது. இத்தோடு பெற்றோர்களுக்கு வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. இல்ல விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுச் சிறார்கள் மகிழ்விக்கப்பட்டார்கள். எமது பாடசாலையில் கல்வி கற்று விலகிச் செல்லும் சிறார்களுக்கு வேண்டிய பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வரலாறு காணாத வைபவமாக 1993ம் ஆண்டு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இவ்வைபவத்திற்கு இவ்வூர் அன்பர்கள் மட்டுமல்ல, வெளியூர் வர்த்தக அன்பர்களும், தொண்டர்களும் உறுதுணையாக இருந்தார்கள். இறைபக்தியும் தியாக உள்ளமும் படைத்த சாவகச்சேரி இராசம் அரிசி ஆலை அதிபர் ஸ்ரீமான் தா. நவனகுமார் அவர்கள் தானே முன்வந்து நூல் வெயியீட்டின் ஒரு பகுதியை தந்து முதற்பிரதியை பெற்று எம்மை சிறப்பித்தார். இந்நேரத்தில் அவரின் பரோபகாரத்தைப் பாராட்டுவதோடு எம்

வணக்கத்தையும் நன்றியையும் கூறுவதில் பேரானந்தம் அடைகின்றேன். சைவ ஐக்கிய சங்கத்தினரால் நாயன்மார்களின் குருபூசைகள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. இக்காலங்களில் சமயப் பெரியோர்களின் சொற்பொழிவுகள் தேன்மழை போல நடத்தப்பட்டன.

உலக வாழ்க்கையில் வரும் துன்பங்களைப் போக்கி மனம் தளராது அமைதி பெறுவதற்கு ஏற்ற முறையில் தமிழ் வேதத்திரட்டு என்னும் நூலின் வெளியீட்டு விழா 1994ம் ஆண்டு நடைபெற்றது. சைவ சமயத் தொண்டனாக தன்னையே அர்ப்பணித்து "குலபதி" என்ற பட்டத்தைப் பெற்ற எமது முன்னைநாள் ஆசிரமத் தலைவர் குலபதி ஆறுமுகம் கந்தையா அவர்களால் வெளியிடப்பட்டது. இவ்வூரில் சைவ சமயவளர்ச்சிற்காகப் பாடுபட்ட சமயப் பெரியோர்கள் அன்றைய தினமே பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டு சேவை நலன்களும் பாராட்டப்பட்டன.

நாட்டு நிலமை காரணமாக இடைக்காலத்தில் சுவாமிகளின் மகா பூஜை மட்டுமே பெரிய விழாவாகக் கொண்டாடப்பட்டது. சுவாமிகளின் அருட்கடாட்சத்தாலும், அம்மையாரின் தவத்தின் மேன்மையாலும் தவக்குடிசையாக இருந்த இடம், இன்று தியான மண்டபமாகத் திகழ அருள்பாலித்தது. 1997ம் ஆண்டு ஆனி மாதம் 6ம் திகதி கால்கோள் விழா ஆனந்தமாக இடம்பெற்றது. இவ்விழாவிற்கு கைதடி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள் அவர்கள் தலமை தாங்கிக் கிரியைகளை பக்திபூர்வமாகவும், கிரியா ஒழுங்குடனும் சிறப்பாக நடத்தி வைத்தார். அவருக்கும் அவருக்கு உதவியாக இருந்த அந்தணப் பெருமக்களுக்கும் மனப்பூர்வமான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அந்தணப் பெரியோர்களின் ஆசியுரைகளுடனும், சமயப் பெரியோர்களின் ஆசியுரைகளுடனும், தொண்டர்கள் அன்பர்களின் ஆதரவோடும் இவ்விழா இனிதாக நிறைவேறியதை நினைத்து அளவிலா மகிழ்ச்சி அடைவதுடன், அவர்களுக்கும் சிரம் தாழ்த்தி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கட்டிட அமைப்புக்கு குருஅருளின் தூண்டுதலால் எதிர்பாராத விதமாக சந்தித்த வேணி களஞ்சிய அதிபர் ஸ்ரீமான் கு. கங்கை வேணியன் அவர்கள் தன் அன்பளிப்பைவிட, தானே முன்னின்று யாழ் வர்த்தகர்களிடமிருந்து ஒருதொகை நிதியையும் திரட்டித்தந்து ஊக்கமளித்தார். இவரது இப்பெரும்பணியை நினைவு கூர்ந்து எமது ஆசிகளுடன் நன்றியையும் வணக்கத்தையும் கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

தியான மண்டபம் மட்டுமல்ல சுற்று மதில்களும் நிலப்புனரமைப்பு வேலைகளும் இடம்பெற்றது. அத்தோடு தண்ணீர்த்தாங்கி ஒன்றும் கட்டப்பட்டது. திரு. திருமதி. இரத்தினம் அவர்களது நினைவாக, அவர்களது மகன் சுவிஸில் வசிக்கும் ஸ்ரீமான் இ. சிவஞானந்தன் குடும்பத்தாருக்கு எமது நன்றிகளும் வணக்கமும் என்றென்றும் உரித்தாகுக.

இத்தியான மண்டபத்தை எமக்கு உரிய காலத்தில் ஓய்வு ஒழிவின்றி மிகத்துரிதமாகவும் செம்மையாகவும் நிறைவேற்றித் தந்த சிற்பாசாரியர் ஸ்ரீமான் திரு. தங்கேஸ்வரன் குழுவினருக்கும், மற்றும் பணியாட்கள் அனைவருக்கும் குருஅருள் கிடைக்க ஆசீர்வதித்து வணக்கம் கூறுகின்றோம்.

இங்கு நடைபெறும் வைபவங்களில் அவ்வப்போது வந்து எமது தேவைகளைச் சிறந்தமுறையில் பூர்த்தி செய்து தரும் ஒலி, ஒளி, பதிவு, புகைப்பட கலைஞர் செல்வன் செ. ரங்கநாதன் அவர்களுக்கு இப்பணி மேன்மேலும் தொடர வாழ்த்தி வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்வதில் ஆனந்தம் அடைகின்றோம்.



குலபதி ஆறுமுகம் கந்தையா J.P ஆன்மீகச் செல்வர் வல்லிபுரம் சுப்பையா சைவஇளவல் சின்னத்தம்பி சுப்பிரமணியம் ஆகியோரின் சமயப் பணியை பராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும் நிகழ்ச்சி.



ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் நூல்வெளியீட்டு விழாவில் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் தலைமையுரை நிகழ்த்துகிறார்.

இம்மலர் வெளியீட்டுக்கு உரிய காலத்தில் ஆசியுரை, வாழ்த்துரை, கட்டுரைகளை வழங்கி உதவி புரிந்த ஆத்மீக செல்வர்களுக்கும், அறிஞர் பெருமக்களுக்கும், அன்பர்களுக்கும் எம் இதயங் கனிந்த வணக்கத்தையும் நன்றியையும் சிரம் தாழ்த்தித் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொழும்புக்கு இம்மலரை எடுத்துச் சென்று அச்சிடுவதற்கு வேண்டிய பெரும்பணியைப் பொறுப்பேற்று, ஒழுங்குகளைச் சிறந்த முறையில் செய்த திருவாளர் த. குமாரகுலசிங்கம் அவர்களுக்கு மனப்பூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் கூறி வாழ்த்துகின்றோம்.

குலபதி என்ற பட்டத்திற்கு தகுந்த குணசீலராகவும், செயல்திறன் வீரராகவும் கருணை உள்ளத்துடன் திகழ்கின்ற ஆத்மீகச் செல்வர் ஆறுமுகம் கந்தையா JP அவர்கள் முகப்பு அட்டைப்பட வேலைகளை முழுமையாகச் செவ்வனே செய்து தந்தது மட்டுமன்றி, இம்மலர் அச்சிடுவதற்கு வேண்டிய ஆக்கபூர்வமான முழு வேலைகளுக்கும் தம்மாலான பேருதவி புரிந்து ஊக்குவித்தமைக்கு நாம் என்றென்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

எமது வைபவங்களில் கலந்து எம்மைச் சிறப்பிக்கும் துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இம்மண்டபம் உருவாகுவதற்கு நல்லாசிகள் கூறி ஊக்குவித்ததோடு, அன்பளிப்பையும் செய்தமையையும் நாம் என்றென்றும் மறவோம். வாழ்த்துக்களும் நன்றிகளும் அவருக்கு என்றென்றும் உண்டு. சுவாமிகளின் அன்பர்களில் ஒருவரான வைத்திய கலாநிதி வ. சின்னப்பு அவர்கள் எமது நிகழ்ச்சிகளிலே கலந்துகொண்டு அமுதமழை பொழிவதுபோல தத்துவக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக்கூறும் ஒரு பெருந்தகை ஆவர். எமது வணக்கமும் நன்றியும் அவருக்கும் என்றென்றும் உண்டு.

1998ம் ஆண்டு தை மாதம் 27ம் நாள் (1998-02-09) நிகழவிருக்கும் மகா கும்பாபிஷேக விழாவைத் தானே முன்னின்று கிரியை முறைகளை நடத்த வேண்டும், சுவாமிகளின் அருட்கடாட்சத்தில் தானும் திகழ வேண்டும் என்ற பெருவிருப்புடைய கயிற்றசிட்டி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ மு. கணேசக் குருக்களும் இணுவில் காயத்திரி பீட அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்களும் ஒன்றிணைந்து சிறப்புற நடத்தி வைத்துள்ளனர் என்பதைக் குரு அருளுடன் நன்றி தெரிவிப்பதில், அளவிலா மகிழ்ச்சி அடைகின்றோம். யாம் செய்யும் பணிகள் எல்லாம் எம்மை வழிநடத்தும் குருஅருளின் செயலன்றி, சொல்லுவதற்கு எதுவுமில்லை - செய்வதற்கும் ஒன்றுமில்லை.

**"எல்லையுள் இன்பம் எனக்கருள் செய்தாய் போற்றி"**

என்றும் அருட்பணியில்
இ. குழந்தைவடிவேலு
தலைவர்

ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம்
கைதடி

# சைவ நாற்பாதங்கள்

உலகிலே தோன்றிய பெருமதங்களில் இந்துமதமும் ஒன்றாகும். இந்துமதம் பரந்த நோக்குடைய மதமாகும். மனிதனை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது. அவனைச் சுயமான சிந்தனையோடு இயங்க வைக்கின்ற சமய நடைமுறையினை அது வரைந்துள்ளதாயினும் அவன் அங்ஙனமே நடக்க வேண்டுமென வற்புறுத்தவில்லை. அவன் சுயவிருப்புக்கேற்ப வழிபடவும், வாழவும் வழிகாட்டும் மதம் இந்துமதமாகும். இந்துமதம் இவ்வுலகில் பிறந்தமனிதனை செம்மையாக வாழவைக்க வேண்டும் என்றும், அதேசமயம் அவனை இறை நிலைக்கே இட்டுச் செல்ல வேண்டும் என்ற சிறந்த நோக்குடையது. இதனாலேயே இம்மை மறுமை இரண்டிலும் சிறப்பாக வாழ்வதற்கு ஏற்றவாறு சிறந்த கொள்கைகளையும் ஏற்பாடுகளையும் வழங்கி இருக்கும் மதமாக இந்த மதத்தைக் கருத முடிகிறது. மனிதன் இறைவனுடன் தொடர்பு பெற வேண்டுமாயின் உருவ வழிபாடே அவசியம் என்பதனை உணர்ந்து, இறைவனைப் பல்வேறுபட்ட உருவங்களினை சிறப்புப்படுத்தி வழிபடும் முறையை கொண்டிருப்பதோடு, புறவழிபாடு, அகவழிபாடு என்பவற்றால் இறைவனையும் மனிதனையும் ஒன்றிணைக்கும் நெறிகளை வழங்கியுள்ள சிறப்பு இந்து மதத்திற்கே உரியதாகின்றது.

எமது அகவாழ்வையும் புறவாழ்வையும் நெறிப்படுத்தித் தெய்வீகத்தை ஏற்படுத்தும் சாதனங்களாகச் சைவ நாற்பாதங்களான சரிகை, கிரிகை, யோகம், ஞானம் என்பன காணப்படுகின்றன. இவை எமது ஆன்மீக வாழ்வு அரும்பி, மலர்ந்து, காய்த்துக் கனியாவதற்கு வாய்த்த நான்கு சைவ சாதனங்கள் எனலாம்.

இதில் சரியை மார்க்கம், கடவுளுக்கு நாம் மனம் மொழி மெய் ஆகியவற்றால் தொண்டு செய்தலாகும். அடியார்கள் தம் சிந்தனை சொல் செயல் ஆகியவற்றை இறைவனுக்காக்கி வாழ்ந்தனர் என்று மெய்யடியார் சரித்திரங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. சரியை நெறியைத் தாசமார்க்கம் என்றும் சொல்வது வழக்கம். தாதன் அல்லது தாசன் என்றால் அடிமை அல்லது தொண்டன் என்பது கருத்து. திருநாவுக்கரசர் சரியை நெறியில் இறைவனை வழிபட்டுச் சாலோக முத்தி பெற்றார். இது "நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு, புலர்வதன்முன் அலகிட்டு, மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித் தலையாரக் கும்பிட்டு" வழிபடும் நெறியாகும் என்று அவருடைய பாடலே அறிவிக்கின்றது. அடியாரை வழிபடுதல் ~ அடியார் தினங்களைக் கொண்டாடுதல் மாகேசுர பூசைசெய்தல் என்பவை யாவும் சரியைத் தொண்டில் அமைகின்றன. சரியை மார்க்கம் ஆணவத்தடிப்பைக் குறைக்கும்.

அடுத்து, கிரியை என்பது விதிப்படி செய்யும் சிவபூஜை ஆகும். புதிய வாசனையுள்ள மலர்கள் தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுது என்பன இதற்கு நிவேதனங்கள். பூஜை செய்யும் இடம் மேலே கூறிய பூஜைத் திரவியங்கள் முதலியவற்றை மந்திர செபத்தால் புனிதப்படுத்தி, இறைவனை அவ்விடத்தில் எழுந்தருளச் செய்து மனமொழிமெய் ஒருமித்துப் பக்தி சிரத்தையுடன் பூஜைசெய்தலே கிரிகை வழிபாடாகும். இறைவனைத் தந்தையாகப் பாவனை செய்து வழிபடும் முறை இது. எனவே இதைச் சற்புத்திர மார்க்கம் என்று வழங்குவர். கிரியாவான்களையே "முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கடியேன்..." என்று சுந்தரர்

வணங்குகின்றார். பூசலார் என்ற மெய் அடியார் உருவாக்கிய மனக் கோயிலிலே இறைவன் விரும்பி எழுந்தருளினான் என்று பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. அவர் கிரியை நெறி நின்று கடவுளை அடைந்தவர். சம்பந்தர் கிரியை நெறியில் சாமீப முத்தி பெற்றவர். சண்டேசுவர நாயனாரும் கிரியை வழிப்பாடு செய்தவர்.

சைவ நாற்பாதங்களில் அடுத்ததாக யோகமார்ககம். இம் மார்க்கம் இறைவனைத் தோழனாக கொண்டு பக்தி செய்யும் நெறியாகும். சக மார்க்கம் என்றும் இதைக் குறிப்பிடுவர். யோகம் என்பதன் கருத்து சேர்க்கை என்பதாகும். ஆன்மா இறைவனுடன் சேர்தல் என்பதே இதன் விளக்கமாகும். இம் மார்க்கம் பொறி புலன்களின் தடுமாற்றத்தினின்றும் மனத்தை விடுவித்து, மிகவுயர்ந்த தியானத்தில் ஈடுபட்டுக் கடவுளை வேண்டுகின்றது. இந்த யோகமார்க்கம் இளமையில் கடைப்பிடிக்க வேண்டிய ஆரம்ப நெறிப் பயிற்ச்சியாக விளங்குகின்றது. இவ் யோகமார்க்கத்தில் நின்று சாரூப முத்தியை சுந்தர மூர்த்தி நாயனார் அடைந்தார்.

சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று சாதனங்களும் கைவரப் பெற்ற ஒருவர் ஞான சாதனைக்கு உரியவராகின்றார். உண்மையிலே முதற் கூறிய மூன்றும் இறுதிச் சாதனைக்கு இட்டுச் செல்லும் படிகள் என்று கூறலாம். நான்கு வேதங்களும், புராணங்களும், ஆகமங்களும் ஞானமே முத்திக்கு வழி என்று உறுதி கூறுகின்றன. இம் மார்க்கம் மூலம் சாயுச்சிய முத்தியை மாணிக்க வாசகர் பெற்றார்.

தமிழ் பேசும் நல்லுலகத்திற்கும் அப்பாற் பிறமொழி பேசும் மக்களிடையேயும் பொய்யடிமை இல்லாது வாழ்ந்து பரகதி அடைந்த அடியார்களில் உலகறிய அண்மையில் வாழ்ந்த சுவாமி விவேகாநந்தர் ஒருவராவார். இவர் வங்காள தேசத்தைச் சேர்ந்தவர்.

சிவ வணக்கத்திலே தலைசிறந்த குடும்பத்தில் 1863ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் திகதி விசுவநாததத்தர் என்ற உயர் நீதிமன்றத்தில் பணி புரிந்த பெரியாற்கும், புவனேஸ்வரி தேவியாருக்கும் நரேந்திரன் எனும் ஆண்குழந்தை பிறந்தது.

நரேந்திரன் தனது இளமைக் காலத்தில் வங்காளி, ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைத் துறைபோகக் கற்றார். வரலாற்று நுல்கள், உபநிடதங்கள், மேலை நாட்டுத் தத்துவ நுல்கள், பைபிள், குரான் போன்ற பிறசமய நுல்களையுந் தனது நுண்ணிய அறிவு கொண்டு ஆராய்ந்தார். மேலைத்தேய, கீழைத்தேய நுட்பங்களை ஒருங்கு பெற்று பீ.ஏ பட்டதாரியானார்.

நுாலறிவுடன் நாவன்மை, சங்கீத, நாடகக் கலைஞானம் யாவும் அவரிடம் ஒருங்கே மிளிர்ந்தன. விளையாட்டுக்களிலேயும் திறமை மிக்கவராய்த் திகழ்ந்தார். கேட்போரைக் கவரும் சொல்லாற்றல், எவ்வித இடர்களுக்கும் அஞ்சாத மன உறுதி, உரமேறிய உடற்கட்டு ஆகியன நரேந்திரனுக்குத் தனி வசீகரத்தைத் தந்தன. அத்துடன் கடவுட்பற்று மிக்கவர். சிறுவயதில் பிள்ளையாக இருந்த காலத்திலேயே நரேந்திரன் "சிவன்" எனும் சொல்லால் பெட்டி பாம்பாக அடங்கி, தியானத்தில் ஈடுபட்டு உலகை மறந்து மனதை ஒருமுகப்படுத்தக் கூடியவரானார்.

18 வயது நிரம்பிய வாலிபனானபோது கடவுளைக் காண வேண்டும் என்னும் ஆசை

கொழுந்துவிட்டு எரிந்தது. இந்நிலையிலே தான் தக்கிணேசுவரத்து இராமகிருஷ்ணரை முதன் முதலில் 1881ஆம் ஆண்டு சந்தித்தார். இராமகிருஷ்ணர் நூலறிவு அற்றவர். அனுபவ ஞானம் உடையவர். இறையனுபவத்தில் மூழ்கித் திளைத்தவர். பாரத பாரம்பரிய மரபில் வளர்ந்தவர்.. எளிமையே வடிவானவர். அத்தகையவர் முன்னிலையிலேயே ஆங்கிலக் கல்வி கற்ற ஆணவமிடுக்குடைய ஓர் இளைஞன் வருகின்றார். பழைய பர்ரதத்தை நவீன பாரதம் சந்திக்கிறது.

தனது ஐயங்களை எல்லாம் அவரிடம் கேட்டார். இதன் பின் இராமகிருஷணரின் விருப்பத்திற்கிணங்கி நரேந்திரன் அடிக்கடி தக்கிணேசுரம் வந்தார். இறுதியில் இராமகிருஷ்ணரைக் குருவாக ஏற்றுக் கொண்டார். இதன் பயனாகக் குருவின் தூண்டுதலின் பேரில் சமூக சேவையை விரும்பினார். இதன் பயனாக ஐந்து ஆண்டுகளில் சீடர்களுக்கெல்லாம் அவர் தலைவனானார். பசியின்றியே சமயத்தை போதிக்க வேண்டும் என்னம் கொள்கையுடையவர். தம் ஆன்மசக்தி அனைத்தையும் நரேந்திரனுக்கு ஈந்து 1986ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் திகதி இராமகிருஷ்ணர் இறைவனடி சேர்ந்தார்.

தன் குருநாதன் கருத்துப்படி மக்கட் சமூகத்திற்குச் சேவை செய்வதே இனித்தன் கடனெனக் கொண்டு, நரேந்திரன் துறவு வாழ்க்கையை விரும்பி ஏற்றார். இத்துறவியே சுவாமி விவேகாநந்தராவார்.

இமாலயம் தொடக்கம் கன்னியா குமரிவரை சுவாமி விவேகாநந்தர் யாத்திரைகளை மேற்கொண்டார். அறியாமையிலும் வறுமையிலும் கோடானுகோடி மக்கள் படும் இன்னல்களைக் கண்டு அவரது நெஞ்சு விம்மியது. மேனாட்டு மோகத்தில் சிக்கியிருந்த பாரத மக்களுக்கு, அவர்களது ஆன்மீக பாரம்பரியத்தின்பெருமையை மேல் நாட்டவருக்கு உணர வைப்பதே சிறந்த வழி எனத் தீர்மானித்தார். இச் சமயத்திலேயே அமெரிக்காவிலே சிக்காக்கோ நகரிற் சர்வமத மாநாடு கூடவிருந்த செய்தி அவருக்கு எட்டியது. இந்து மதத்தவர்கள் கூடியுள்ள பாரத நாட்டில், அன்பர்களது வேண்டுகோளுக்கு இணங்கி இந்து மதத்தின் பிரதி நிதியாக அதில் கலந்து கொண்டார். எல்லா மதத்தின் பிரதி நிதிகளும் தமது மதத்தின் பெருமைகளைப் பறைசாற்றினர். ஆனால் சுவாமியவர்கள் ஆரம்பத்திலே அமெரிக்க நாட்டுச் சகோதர, சகோதரிகளே என விளித்துப் பேச்சை ஆரம்பித்தார். மக்கள் யாவரையும் ஒரே குடும்பமாகக் கருதும் இந்த ஞானி யார்? என எல்லார் மனதிலும் கேள்வி பிறந்தது. தொடர்ந்து எல்லா மதமும் ஒன்றே தான். பல நதிகள் ஒரு கடலில் கலப்பது போலச் சமயங்கள் யாவும் ஒரே கடவுளையே சென்றடைகின்றன என்றும், உபநிடதடம் வேதம் புகட்டும் கருத்தை ஆணித்தரமாக எடுத்தியம்பினர்.

இன்று இராமகிருஷ்ணர் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட இம்மடங்கள் சிறந்து விளங்கி எத்தனையோ வறிய மாணவர்களிற்கு கல்வியளிக்கின்றது. இறைவனை நாம் எங்கும் தேடி அலையவேண்டியதில்லை.துன்பப்பட்டவர்கள், ஏழைகள், பலவீனர்கள். இழிந்தோர் ஆகிய யாவரும் தெய்வ வடிவங்களே என்று அவர் கருதினார். ஏழைகளுக்காக எவனது இதயம் குருதி கசிகின்றதோ அவனையே "மகாத்மா" என்கிறேன் என்று 1895ம் ஆண்டு நியூயோக்கில் சொற்பொழிவாற்றும்போது வலியுறுத்திக்கூறினார். இவ்வாறு பாரத தேசத்திற்கும் உலகிற்கும் ஒளியேற்ற வந்த அன்பராக ~ அறிவுத் தீபமாக ~ ஞானவீரராக இவ்வுலகில் 39 ஆண்டுகளே



பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் மாணவர்களின் வினோத உடைநிகழ்ச்சி.



திவ்வியஜீவன சங்க யோகாசனக் கலாநிதி சுவாமி சிதானந்தரால் யோகாசனப் பயிற்சி நடாத்தப்படும் காட்சி.

வாழ்ந்து, 1902ஆம் ஆண்டு யூலை மாதம் 4ம் திகதி சுவாமி இறைவன் பாதம் சேர்ந்தார்.

அடியேனும் கன்னியா குமரிக்குச் சென்ற போது அங்கே சுவாமி விவேகாநந்தருடைய தியான மண்டபத்தில் தியானிக்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அது போல் நமது கிராமத்திலும் சுவாமி சச்சிதானந்தருக்கு நிறைவான தியான நிலையம் ஒன்று அமைந்ததையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நாமும் தியான நிலையத்தில் சிறிது நேரம் தியானத்தில் ஆழ்ந்து நற்பலன் அடைவோமாக.


பிரம்ம ஸ்ரீ சிவ. மனோகரராசக் குருக்கள்

வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

கைதடி


# தியானம்

ஆத்ம ஞானிகளின் திருவடிகள் பதிந்ததும் ஆத்ம ஞானியை வளர்த்துக் கொண்டிருக்கின்றதுமான புண்ணிய பூமியாகக் கைதடி திகழும் இந்நேரத்தில் அம்மையாரின் தவக்குடிசை தியான மண்டபமாகத் திகழ்வதையிட்டுப் பேரானந்தம் அடைகின்றேன்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்றார் வள்ளுவப் பெருந்தகை. சந்தேகம் இல்லாமல் படிக்கின்றோம், கேட்கின்றோம், எல்லாவற்றையும் அறிகின்றோம். இவற்றை எல்லாம் செயல்படுத்த வேண்டும். இச்சரீரம் எடுத்தது இறைவனை வணங்கி இறைபதம் அடையவே. எமது சமயத்திலே இறைவனை அடைவதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்கள் வழிகாட்டுகின்றன. இவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுவதற்குக் கோயில்கள், ஆசிரமங்கள், தியான மண்டபங்கள் உறுதுணையாக அமைந்துள்ளன.

நாம் சதா எதனை நினைத்துக் கொள்ளுகிறோமோ அதுவே தியானமாகும். உயிருக்குள் உயிராய் இருந்து எம்மை வழிநடத்துவது இறைவனாகும். அத்தகைய பரம்பொருளை எமது இதயமாகிய கோவிலிலே இருத்தி இறை நினைப்போடு இருப்பதுதான் தியானம்.

பற்றொழிந்து சிந்தைப் பதைப்பொழிந்து – தானே
தானற்றிருப்ப தென்றைக் கமைப்பாய் பராபரமே

என்றார் தாயுமான சுவாமிகள். ஐம்புலன்களால் வரும் துன்பங்களை அழித்து உள்ளத்தைப் பதட்டமடையாது பரம்பொருளினிடத்தே நிறுத்தி, பரம்பொருளும் தானும் ஒன்று என்ற பேரானந்தத்தில் பரம்பொருளையே நினைத்துக் கொண்டிருப்பது தியானமாகும்.

பரந்தெழுந்த சிந்தையராகி, ஓடுகின்ற மனத்தை ஒரு நிலைப்படுத்தி, ஜீவாத்மாவை அமைதிப்படுத்தி, பரம்பொருளிடத்தே நிறுத்தி வைப்பதுதான் தியானமாகும்.

பதி, பசு, பாசம் என்ற மூன்றையும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க முடியாது. இவை எல்லாம் எமது சரீரத்திலேதான் உள. பாசங்களை நாம் எம்முள் அடக்கிவிடலாம். பதியையோ,

பசுவையோ மறைத்தால் இச்சரீரமே அழிந்து போய்விடும். ஆகவே பாசங்களை ஒழித்துவிட்டு, பசுவாகிய ஆன்மா பதியாகிய இறைவனுடன் ஒன்றி இணைந்து இருத்தலே தியானமாகும்.

மாய்கை என்றால் உலகம். இல்லாத ஒரு பொருளை இருப்பது போலக் காட்டுவதும் மாய்கை. உடம்பு அழிந்துபோகும் பொருள் என்பது எமக்கு நன்றாகத் தெரியும். அழியாத பொருள் ஆன்மா ஆகும். இந்த ஆன்மாவைப் பாலில் நெய்போல் ஆன்மாவுடன் கலந்து நிற்கும் இறைவனுடன் இணைந்து பேரறிவைப் பெறவேண்டும். அப்பேரறிவைப் பெறுவதற்கு மனத்தை இறைவனுக்கு அடிமையாக்கிப் பரம்பொருளின் நினைவோடு இருப்பதுதான் தியானம் ஆகும்.

சரியை, கிரியை முறைகளைப் படிமுறை தவறாது கடைப்பிடிப்போமானால் யோகநிலை எளிதில் கைகூடும். யோகநிலையில்தான் ஆணவமலம் ஒடுங்குகின்றது. மனம், வாக்கு, காயம் தூய்மை அடைந்து பக்தி நிலை உருவாகின்றது. மனம் பொறி புலன்களின் தடுமாற்றத்திலிருந்து விடுபட்டு இறை சிந்தனை ஊற்றெடுக்கின்றது. சிந்தனை பரந்து விரிவடைந்து பேரறிவாகிய இறை சிந்தனை தியானமாகும்.

மறைகளாலும், அயனால், மாலால், மனத்தால் வாக்கால் மற்றும் குறைவிலா அளவினாலும் கூறொணாதாகி நின்ற இறைவனை நாம் அறிவது சாமானியமானதன்று. பூர்வ புண்ணிய பலன் வேண்டும்.

இவ்வண்ணம் ஒரு புனிதமான தியான நிலையம் கைதடியிலே உருவாகியது எமது அம்மையாரின் தவ வாழ்வையே எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.

காலமொரு மூன்றும் கருத்திலுணர்ந்தாலும் அதை
ஞாலம் தனக்குரையார் நல்லோர்

என்றார்

தாயுமானவர். இத்தகைய தியான மண்டபங்கள் ஞானிகளுக்குத் தேவையானதொன்றல்ல. மக்களின் நல்வழிகாட்டலுக்கே அமைக்கப்படுகின்றது. உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள மக்களும் குருவிடம் சென்று நல்லுரைகளைக் கேட்டு, அறியாமையை அகற்றி, அறிவை வளர்த்துத் தெய்வீக அருளுடன் வாழலாம். குருவின் அறிவுரைகளை நாம் எந்நூலிலும் காணமுடியாது. இவ்வாறு வாழும் அம்மையாரின் தொடர்பு கிடைத்தது எனது பூர்வபுண்ணியப் பலனேயாகும். கேட்பவர்கள், பார்ப்பவர்கள் வியக்கும் வகையில் மிக எளிமையான முறையில் தவ வாழ்க்கை நடத்துகின்றார். எமது ஊனக் கண்ணினாலே அம்மையார் அவர்களைப் பார்த்து சாமி அம்மா என்று கூறமுடியாது. காவி உடுப்பில்லை; உருத்திராஷ்ஷ மாலை இல்லை. சாதாரண ஒரு பெண் போலவே இருக்கிறார். அம்மையாரின் திருவார்த்தைகள் பொன் மொழிகளாகும். சாதாரணப் பெண்போலத் தனது தவ வாழ்க்கை வாழும் அம்மையாரின் தெய்வீகத்தை உலகறியச் செய்யும் ஒரு சின்னமாக இம்மண்டபம் விளங்குகின்றது.

அம்மையார் அவர்களின் தவவாழ்வுக்கு ஊன்றுகோலாக இவ்வாச்சிரமத்தின் செயலாளரான இ. குழந்தைவடிவேலு உள்ளார் என்றால் அது மிகையாகாது. அவர் செய்யும் அரும்பெரும் பணிகள் அளப்பெரியன. சொல்திறன், செயல்திறன் கொண்ட ஒரு ஆத்மீகச் செல்வராகவே காணப்படுகின்றார்.

அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்

என்றார் வள்ளுவப் பெருந்தகை.

இன்முகத்துடன் இன்சொற்கூறி யாவரையும் வரவேற்று உபசரிக்கும் பெருந்தன்மை உடையவர். அம்மையாரின் திருவடிகளை வணங்கி திருவருள் பெற்ற பக்தர் என்றால் அது மிகையாகாது. இதயமாகிய தாமரையிலே இறைவன் குடிகொண்டிருக்கின்றான் என்பதை அவருடைய அடியார் சேர்க்கை, சமயப் பெரியோர்களின் உறவு, அரும்பெரும் திருப்பணிகள் எடுத்துக் காட்டுகின்றன.

"கட்டுக் அடங்கா சோதி அடியார் மட்டுக் அடங்கும்" என்று அம்மையார் அடிக்கடி கூறும் திருவாக்கை எமது உள்ளத்தில் பதித்து, ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளினதும் நடமாடும் தெய்வமாகிய அம்மையார் அவர்களினதும் திருவருள் வேண்டி நிற்போமாக. தன்னை அறிந்த அறிஞருக்கு மரண பயமில்லை. ஓம் குரு வாழ்க! குருவே துணை!!

திருமதி அ. குகதாசன்
ஆசிரியை
ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரம பாலர் பாடசாலை

# விதி என்று ஒன்று உண்டா?

எஸ். டி. சிவநாயகம்
ஆசிரியர் : சூடாமணி

முற்பிறப்பில், அதாவது பூர்வ ஜென்மத்தில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா? விதி என்று ஒன்று சொல்லப்படுகிறதே அது என்ன என்பதை நீங்கள் அறிவீர்களா?

உலகில் எத்தனையோ சமயங்கள் இருக்கின்றன. அவற்றுள் நாம் வாழும் பகுதியில் மிகப் பிரபல்யமாக விளங்கும் சமயங்கள் நான்கு. இந்து சமயம், பௌத்த சமயம், கிறிஸ்தவ சமயம், இஸ்லாம் சமயம் என்பன தாம் அந்த நான்கு சமயங்களாகும்.

இவற்றுள் இந்து சமயம், பௌத்த சமயம், ஆகிய இரண்டும் முற்பிறப்பு உண்டு என்பதில் நம்பிக்கையுடைய சமயங்களாகும்.

கிறிஸ்தவமும், இஸ்லாம் மார்க்கமும் பூர்வஜென்மம் என்பதிலும், மரணத்தின் பின் நீத்த உயிர் மீண்டும் உலகில் பிறக்கும் என்பதிலும் நம்பிக்கையற்றவை.

பூர்வ ஜென்மம் தவிர, 'விதி' என்ற ஒன்றில் இந்து சமயம் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறது. ஆனால் பௌத்தமோ, கிறிஸ்தவமோ, இஸ்லாமோ, 'விதி' என்ற ஒன்றைப்பற்றி நிலையான கருத்து எதுவும் கொண்டவையாக இல்லை, இன்னும் சொல்லப்போனால் விதி என்பதைப் பற்றி விவாதிப்பதற்கே இஸ்லாம் மார்க்கம் தடை விதித்திருக்கின்றது. கிறிஸ்தவமும், பௌத்தமும்

விதியைப் பற்றிப் பேசுவதே இல்லை.

இந்து சமயம் ஒன்று தான் விதிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. எல்லாம் 'விதி' யின்படிதான் நடக்கின்றன என்று இந்து சமயம் நம்புகிறது. விளக்கம் அளிக்கிறது.

பூர்வ ஜென்மம் என்று சொல்லப்படுகிற முற்பிறப்பு உண்டா? இல்லையா? என்பது பற்றி இன்னொரு கட்டுரையில் பின்னர் ஆராய்வோம். இந்தக் கட்டுரையில் ' விதி ' யைப்பற்றி மட்டும் தெரிந்து கொள்வோம்.

"விதி" என்பது ஊழ், வினைப்பயன், தலையெழுத்து. கர்ம பலன், தெய்வசித்தம் என்றும் வழங்கிவருகிறது.

"மனிதன்" திட்டம் தீட்டுகிறான், தெய்வம் "மட்டம் தட்டுகிறது" என்று சாதாரணமாகச் சொல்லப்படுவதுண்டு. நாம் எவ்வளவோ முன் ஜாக்கிரதையுடன், முன் ஏற்பாடுகளைச் செய்து, திட்டம் வகுத்து, கால நேரம் அறிந்து ஒரு காரியத்தைச் செய்ய முயல்கிறோம். ஆனால், அந்தக் காரியம் நிறைவேறுவதில்லை. ஏதோ எதிர்பாராதவிதமாக ஓர் இடர் ~ ஒரு தடை ~ ஒரு விபத்து ஏற்பட்டுக் காரியம் நிறைவேறாமல் கெட்டுவிடுகிறது. இதற்கு நாம் தரக்கூடிய விளக்கம் என்ன?

இந்து சமயம் விளக்கம் தருகிறது. விதி அதுதான் என்று சொல்லிவிடுகிறது. வேறு எந்தச் சமயமும் இப்படி ஒரு விளக்கத்தைத் தருவதில்லை. மனிதன் தோல்வி கண்டுவிட்டான் என்று சொல்லிச் சமாதானப்பட்டுக் கொள்கிறது.

இந்தக் கட்டுரை ஆசிரியர், சுய அனுபவத்தில், நேரில் அறியக் கூடியதாக இரண்டு மோட்டர் விபத்துக்கள் ஒரே நாளில் நடைபெற்றன.

ஆறு பேரையும் ஒரு கைக்குழந்தையையும் கொண்ட ஒரு குடும்பம் ஒரு பயணம் புறப்பட்டது. புத்தம் புதிய 'பென்ஸ் கார். முதல் நாள்தான் கரேஜில் விட்டு சேர்விஸ் செய்யப்பட்டது. ஒரு தந்தை, தாய், வயது வந்த ஒரு மகள், ஒரு மகன், ஒரு கைக்குழந்தை, டிரைவர் உட்பட ஆறு ஜீவன்கள் அந்தக் காரில் பிரயாணம் செய்தார்கள்.

இன்னொரு காரில் ஆறு நண்பர்கள் பிரயாணம் செய்தார்கள். பழைய 'பியட்' கார். பல வருடங்களாக ஓடிக் கடகடத்துப் போன வண்டி. இந்தக் காரை ஓட்டிய டிரைவர் முன் சென்ற பென்ஸ் காரை ஓட்டிய டிரைவரைவிட அநுபவசாலி. கார் செலுத்துவதில் நிபுணர். இரண்டு கார்களும் ஒரே நாளில் வேறு வேறு இடத்தில் மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகின. 'பென்ஸ்' காருக்கு அதிகம் பழுது இல்லை. 'போனட்' என்று சொல்லப்படுகிற முன்புறம் இலேசாக மரத்தில் முட்டி நசிவு கண்டிருந்தது. ஆனால் அந்தப்புத்தம் புதிய காரில் சென்ற ஆறு பேர்களில் சாரதி உட்பட பெரியவர்கள் ஐந்து பேரும் ஸ்தலத்திலேயே மாண்டார்கள். கைக்குழந்தை மட்டும் தப்பிப் பிழைத்து உயிரோடிருந்தது. மரணமானவர்கள் ஐவரும் காயங்களால் அல்ல, அதிர்ச்சியினாலேயே இறந்து போனார்கள் என்று மருத்துவ றிப்போர்ட் கூறியது.

மற்ற, இரண்டாவது பழைய காரும், மரத்தில் மோதிக் கொண்டது. கார் அப்பளமாக நொருங்கி உருவம் தெரியாமல் உடைந்து கிடந்தது. என்ன ஆச்சரியம். அதில் பயணம் செய்த அறுவரில் ஒருவருக்குக் கூடப் பலத்த காயம் எதுவும் இல்லை. ஆறு பேரும்

உயிரோடிருந்தார்கள்.

இந்த இரண்டு சம்பவங்களுக்கும் காரண காரியம் கூற முடியுமா? முதல் காரில் அந்தக் கைக்குழந்தை மட்டும் எப்படி உயிரோடு தப்பியது? இரண்டாவது வண்டியில் ஆறு பேரும் எப்படித் தப்பிப் பிழைத்தார்கள்? இதற்குத்தான் பெயர் விதி. விதிக்கப்பட்ட நேரத்தில், விதிக்கப்பட்ட சூழ்நிலையில்தான் மரணம் சம்பவிக்கும் என்று இந்து மதம் கூறுகிறது.

உலகில் சகல சம்பவங்களும் விதியின் எழுத்துப்படிதான் சம்பவிக்கின்றன. இந்த விதியை யாராலும் தடுக்கவும் முடியாது, மாற்றவும் முடியாது. அந்த விதியிலிருந்து தப்பவும் முடியாது.

“விதி” என்பது முற்பிறப்பில் செய்தவினைகளால் விதிக்கப்பட்டு, இப்பிறப்பில் நிறைவேற்றப்படுவ்து என்று சாத்திரங்கள் கூறுகின்றன. பழ வினையின் பலாபலன் தான் விதி. விதி மிகவும் வலிமையுடையது. எப்படியும் அது தன் பலத்தைக்காட்டியே தீரும். அதனால் தான் வள்ளுவர்,

“ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்”

என்று கூறியிருக்கிறார்.

விதியின் வலியை எடைபோடுவதற்கு இதிகாசத்தில் கூட நாம் ஒரு நிகழ்வைப்பார்க்கலாம். இராமனாகப் பிறந்து வாழ்ந்த காலத்தில், அவன் எந்தவிதமான தவறும் இழைத்ததில்லை. அப்படியிருந்தும் அவனுக்கு ஒர் இன்னல் ஏற்பட்டது. கைகேயி பெற்ற வரத்தால் அவன் காட்டுக்குப் போகவேண்டி ஏற்பட்டது.

தனது அண்ணன் காட்டுக்குச்செல்லும் படி கைகேயினால் பணிக்கப்பட்டான் என்பதை அறிந்ததும், தம்பி இலக்குவன் சீற்றம் கொள்கிறான். தன் வில்லின் வலியால் சகலரையும் அழித்து, இராமனுக்குத், தானே மகுடம் சூட்டுவதாக சூழ் உரைக்கிறான்

இராமன், இலக்குவனுடைய கோபத்தைத் தணிக்கும் வகையில் அப்போது சில வார்த்தைகள் கூறுவதாக கம்பன் பாடியிருக்கும் கவிதை மிக்க ஆழம் உடையது. விதியின் வலிமை என்ன என்பதை அது விளக்குவதாக அமைந்துள்ளது. கவிதை இதுதான்:

நதியின் பிழை அன்று நறும் புனல் இன்மை! அன்றே
பதியின் பிழை அன்று! பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழை அன்று! மகன் பிழை அன்று! மைந்த
விதியின் பிழை நீ இதற்கு என்ன வெகுண்டது?

என்றான்.

ஆற்றில் தண்ணீர் இல்லாமற் போவது ஆற்றின் குற்றம் அல்ல. அதைப்போல இது அரசனாகிய தசரதனுடைய குற்றமும் அல்ல. என் தம்பி பரதனுடைய தவறும் அல்ல. இது விதி செய்த வேலை. எதற்காக நீ கோபிக்க வேண்டும் இலக்குமணா? என்று கேட்கிறான் இராமன்.

விதியின் வலிமையை இங்கு இராமன் கூற்றால் கம்பன் நிலைநாட்டுகிறான்.

இராமன் விதியைப்பற்றிச் சொன்னபோது அதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இலக்குவன் இருக்கவில்லை. விதியாவது ஒன்றாவது என்று அவன் வாதிட்டான். வாலிப வயதின் வீச்சு அவனிடமிருந்தது. இராமன் விதியைப் பற்றிப் பேசுவது வீண்பேச்சு என்று அவன் நினைத்தான்.

அதே இலக்குவன், அனுபவம் முதிர்ந்த நிலையில், பின் ஒரு சந்தர்ப்பத்தில் அவன் வாயாலேயே விதியைப் பற்றிப் பிரஸ்தாபிக்க

வேண்டி வந்தது விந்தை அல்லவா?

வனத்தில் வசிக்கும்போது இராவணனுடைய ஏவலினால் மாரீசன் என்ற அரக்கன் மாய மானாக வருகிறான். அந்த மானைப் பிடித்துத் தரும்படி சீதை இராமனிடம் வேண்டுகிறாள். இலக்குவனை சீதைக்குக் காவலாக வைத்துவிட்டு மானின் பின்னால் செல்கிறான் இராமன். மான் இராமன் பிடியில் சிக்கவில்லை. உடனே இராமன் பாணம் தொடுக்கிறான். மானுக்குப் பட்டு அது இறக்கும் தறுவாயில் இராமனுடைய குரலை ஒத்த குரலில் "இலக்குவா என்னைக் காப்பாற்று" என்று அவலக் குரல் எழுப்பிவிட்டு இறந்துவிடுகிறது.

சீதை, இலக்குவனைப் பார்த்து "உன் அண்ணா ஆபத்தில் சிக்கிக்கொண்டார். உடனே போய்க் காப்பாற்று" என்கிறாள். "என் அண்ணா இராமனுக்கு ஒருபோதும் அபாயம் ஏற்படாது. இது ஏதோ மாயக்குரல்" என்கிறான் இலக்குவன்.

இலக்குவனிடத்தில் அதுவரை அசையாத அன்பும், நம்பிக்கையும் கொண்டிருந்த சீதை, தன் நிதானத்தை இழந்து இலக்குவன் மீது சீற்றம் கொள்கிறாள். தீயில் விழுந்து உயிர் மாய்க்கிறேன் என்கிறாள்.

இப்படி நேர்ந்தமைக்குக் காரணம் என்ன? விதி விளையாடத் தொடங்கியது என்பதுதான்!

சீதையின் சீற்றத்தைப் பொறுக்க மாட்டாத இலக்குவன், "எதற்காக நீங்கள் உயிரை விடவேண்டும்? உங்கள் வார்த்தைகளுக்கு நான் அஞ்சுகிறேன். உங்கள் உத்தரவை இனியும் நான் மறுக்கவில்லை. நீங்கள் வருத்தப்பட வேண்டாம். இங்கேயே இருங்கள். இதோ நான் போகிறேன். கொடுமையான விதியை நம்மால் வெல்ல முடியுமா?" என்று கூறிவிட்டு இராமனைத் தேடிச் செல்கிறான்.

இலக்குவன் அங்கிருந்து பிரிந்தமையினால் தான் சீதை மாயச் சந்நியாசியாக வந்த இராவணனிடம் சிக்கினாள். அதாவது விதி அவளைச் சிக்கவைத்தது!

"விதியாவது ஒன்றாவது" என்று அயோத்தியில் வீறாப்புப் பேசிய இலக்குவன் வாயாலேயே, விதியின் வலிமையை ஒப்புக்கொள்ளும்படி செய்கிறான் கம்பன் இந்தக் காட்சியில்!

இலக்குவன் வாய்மொழியாக வரும் கம்பனுடைய கவிதை எண்ணி எண்ணி ரசிக்கப்பாலாதாகும். கவிதை இதுதான்~

துஞ்சுவது என்னை? நீர்சொற்ற சொல்லை யான்
அஞ்சுவன். மறுக்கிலன். அவலம் தீர்ந்து இனி
இஞ்சு இரும். அடியேன்ஏகு கின்ற னென்
வெஞ்சின விதியினைவெல்ல வல்லமோ?

இவ்வாறு விதியின் வலிமையை விளக்கத் தமிழ் இலக்கியப் பரப்பில் எத்தனையோ சந்தர்ப்பங்கள் உள.

**"ஒருபானை - சோற்றுக்கு ஒரு சோறு பதம்"**

# மனிதன் மனிதனாக வாழவேண்டும்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்



"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்ற தமிழ் மொழிக்கு ஏற்றவாறு, அரிதான மனிதப்பிறவி கிடைக்கப் பெற்றுள்ள நாம் மனிதராக வாழ வேண்டும். உலகில் மிருகங்கள், அசுரர்கள், ராட்சதர்கள் எனப் பலவகைப்பட்டவர்கள் இருக்கின்றார்கள். இம்மனிதப் பிறவியானது மண்ணுலகில் மனிதனாக வாழ்வதற்கும், மனிதநிலையிலிருந்து தேவநிலையை அடைவதற்கும் நமக்குக் கிடைத்துள்ள பெரியவாய்ப்பாகும்.

உலகின் எண்ணிக்கையில் மனிதர்கள் பல கோடி இருந்தாலும் மனிதத்தன்மையோடு, மனித நேயத்தோடு, நல்ல செயல். நல்லசிந்தனையோடு வாழும் மனிதர்களை மட்டும் தான் மனித எண்ணிக்கையில் கணக்கில் கொள்ள வேண்டும். மற்றக் கோடிக் கணக்கானவர்கள் மனித உருவத்தில் இருந்தாலும் மனித நேயமில்லாதவர்களை ராட்சதர்களாகவோ, மிருகங்களாகவோ தான் அவர்கள் எண்ணப்படுவார்கள்.

இப்பொழுது கூட நாம் வேறுசிலரைப்பற்றிப் பேசும் பொழுது அந்த மனிதன் மிருகத்தனமாக நடந்து கொண்டு விட்டான் என்றும், அவன் செய்த செயல் அசுரத்தனமானது என்னும் தினசரி நம்முடைய பேச்சிலேயே வருகிறது.

உலகம் தோன்றிய காலந்தொட்டே தெய்வசக்தியும் அசுர சக்தியும் இருந்து கொண்டிருக்கின்றன. தெய்வசக்தி மேலோங்கும் போது உலகிலுள்ள மக்கள், மற்றும் உயிரினங்கள் எல்லோரும் நன்மையுடன் வாழுகின்றார்கள். தீயசக்தி மேலோங்கும் போது உலகம், உலகிலுள்ள மக்கள் மற்றும் உயிரினங்கள் எல்லாமே துன்பமடைகின்றன என்பது கண்கூடாகத் தெரிகிறது. மனிதன் மனிதனாகவே வாழ வேண்டும். அசுரனாக ~ அதுவும் நரகாசுரனாக ஆகக்கூடாது. இதை நினைவு படுத்தத்தான் ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி வருகிறது.

எல்லாத் தெய்வீக சக்திகளையும் நமக்கு அளிக்கக் கூடிய பரமாத்வான இறைவனை வழிபட்டு நலமடைவோமாக. மனிதன் மனிதனாக வாழப் பகவான் நமக்கு அருள் புரிவாராக.

நாராயண ~ நாராயண

# விவேகாநந்தரின் அறிவுரை



ஒன்றே ஒன்றுதான் சத்பொருள். அதுவே பிரம்மம். மற்றவையெல்லாம் அசத். "சத்" பொருளாகிய பிரம்மம் நான் என்று சதா எண்ணிக்கொண்டும் சொல்லிக்கொண்டும் வரவேண்டும். நாம் பிரம்மம் என்ற உணர்வு உறுதிப்பட்டு வரும்வரையில் "நாம் பிரம்மம், நாம் பிரம்மம்" என்று சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும். நாம் பிரம்மம் என்ற உணர்வு உறுதிப்பட்டுவிட்டால் இருமைகளைக் கடந்து அப்பால் சென்றுவிடுகிறோம். அப்பொழுது நன்மையோ, தீமையோ இல்லை. சுகமோ, துக்கமோ இல்லை. நாம் அழியாத, மாறாத அளவில் அடங்காத ஏகப்பொருள் என்பதைத் தெளிவாக உணர்கின்றோம்.

ஞானி ஆழ்ந்த பரந்த கொள்கை உடயவனாய் இருத்தல் வேண்டும். மனத்தை முற்றிலும் அடக்கி ஆள்பவனாக இருக்க வேண்டும். மற்ற மதக் கொள்கைகளை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வதற்கிடையில், சமரசத்தை உறுதியாகப் பற்றிப் பிடிப்பவனாக இருக்கவேண்டும். சாதனையை இடைவிடாது செய்து வரவேண்டும். நாம் செய்யும் செயல்களில் நம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடாது. 'நாம் பிரம்மம்' என்பதில் உறுதியாக இருக்கவேண்டும். "நாம் பிரம்மம், நாம் பிரம்மம்" என்று இரவும் பகலும் சொல்லிக்கொண்டே இருப்போம். மானுட சரீரம், அருள்தாகம், ஞானகுரு ஆகிய மூன்றும் நமக்குக் கிடைக்கும் வரப்பிரசாதங்களாகும். இம் மூன்றும் பெற்றவர்களுக்கு முக்தி வாய்த்துவிட்டது என்றே சொல்லலாம். ஞானம்தான் நமக்கு விடுதலையைக் கொடுக்கும். ஞானம்தான் நம்மை மாயையிலிருந்து விடுவிக்கும். ஞானத்தோடு நெறியான வாழ்வும் வேண்டும்.

'மெய்ப்பொருள்' ஒன்றுதான் என்பது வேதாந்தத்தின் சாரமாகும். ஒவ்வொரு பனித்துளியிலும் முழுச் சூரியனும் பிரதிபலிக்கிறது. பரம்பொருள் தேசகால நிமித்தத்துக்கு உட்பட்டுத் தோன்றும்போது, இப்பிரபஞ்சத்தில் உள்ள உயிர்களாகத் தென்படுகின்றார். மனிதனும் பரம்பொருளின் தோற்றமே. தோற்றத்தை ஒதுக்கித் தள்ளுதலே சுயநலமின்மை ஆகும். நாம் சரீர மயமாக இருக்கிறோம் என்ற துயரக் கனவிலிருந்து விடுபடவேண்டும். 'நாம் பிரம்மம்' என்ற உண்மையை உணரவேண்டும். அஞ்ஞானம் என்னும் தளையிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளும்பொழுது நாம் பிரம்மமாக இருப்பதை உணரலாம். ஒன்றுதான் இருக்கிறது. அதற்கு அந்நியமாக எதுவும் இல்லை. இந்த அத்வைத ஞானத்தை நாம் பெற்றே ஆகவேண்டும். அதைப்பெறுவதற்கு இப்போது போராடியாக வேண்டும். மக்களுக்குச் செய்யும் பேருதவி இதற்கு மேல் இல்லை. பரபோதம் பெற்றவர்கள்தாம் உயிர்களை நேசிக்க முடியும். அவர்கள்தாம் மற்றவர்களுக்கு முக்தியைத் தரமுடியும். ஆசை

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் சீடர்களுடன் குருபீட முதல்வர்.



பாலர் பாடசாலைத் திறப்பு விழாவில் வைத்திய கலாநிதி
வ. சின்னப்பு அவர்கள் பராட்டுரை வழங்குகின்றார்.



ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் சீடர்களுடன் குருபீட முதல்வர்.

நம்மை அடிமையாக்கி வைத்திருக்கிறது. அது நம்மை அலைக்கழிக்கின்றது. ஞானத்தைப் பெற்று ஆசையை வெல்ல வேண்டும். ஞானத்தைப் பெற்றவர்களுக்கு வேறு எதுவும் தேவையில்லை.

மனம் நம்மை மயக்கத்தில் ஆழ்த்தி வைத்திருக்கிறது. சீர உணர்வு, பாலுணர்வு, இன உணர்வு, ஜாதி உணர்வு, பந்தப்பட்ட உணர்வு ஆகியவை நமக்கு ஏற்பட்டுள்ள மயக்கங்களாகும். மெய்ப்பொருளைப் பற்றி மனதுக்குச் சதா புகட்டிக்கொண்டே இருங்கள். மெய்ப்பொருள் உணர்வு வரும்வரையில் போதனை நிகழ்ந்து கொண்டே இருக்கவேண்டும். ஆனந்தம் நம்முடைய உண்மையான இயல்பு. மற்ற இந்திரிய சுகங்கள் எல்லாம் அவ்வானந்தத்தின் தோற்றமேயாகும். நம்முடைய உண்மையான சொரூபத்தை உணரும்பொழுதுதான், அவ்வானந்தம் நமக்குக் கிடைக்கிறது. அது சுக துக்கத்திற்கு அப்பாற்பட்டது. அது என்றைக்கும் மாறாதது. வாழ்க்கைக்கு அது சாட்சியாக இருந்துதான் எவ்வித மாறுதலையும் அடையாது இருந்து வருகிறது. அப்பியாசத்தால் உறுதிப்பாடும், அவ்வுறுதிப்பாட்டினால் ஞானமும், ஞானத்திலிருந்து பிரேம பக்தியும், பிரேம பக்தியிலிருந்து பேரானந்தமும் படிப்படியாக வருகின்றன.

என்னுடையது என்பது அறியாமையின் விளைவாகும். அத்தகைய அறியாமையில் நீண்டநாள் வாழ்ந்துவிட்டோம். அதை ஒழிப்பது சுலபமானதன்று. நாம் மேல்நிலையை அடையவேண்டும் என்றால் அதை ஒழித்துத்தான் ஆகவேண்டும். நாம் எப்பொழுதும் முகமலர்ச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கவேண்டும். சோகத்துடன் இருப்பது சமயமாகாது. உலகில் உண்மையான ஆனந்தத்தைத் தருவது சமயம் ஒன்றுதான். ஏனென்றால் அனைத்திலும் மேலானது சமயமாகும்.

உடலை வாட்டும் தவம் நம்மைப் புனிதப்படுத்தாது. கடவுள் பக்தி உடையவன் தூய்மையான உள்ளம் படைத்தவன். அவன் துயரப்படுவதற்கு அவசியமில்லை. குழந்தைபோன்று அவன் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும். உண்மையில் அவன் இறைவனுடைய குழந்தையாக இருக்கின்றான். உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதுதான் சமயத்தின் சாராம்சமாகும். பரமபதம் நம்மிடத்தில் இருக்கின்றது. தூய்மையான உள்ளம் படைத்தவர்கள் ஆங்குப் பரமனைக் காண்கின்றார்கள். உலகைப் பற்றி நாம் நினைக்கும்பொழுது அதை நமக்கு உரியதாக்க விரும்புகின்றோம். உலகத்தைக் கடவுள் மயமாகப் பாவிக்கும்பொழுது கடவுளைக் காண்கிறோம். இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் கடவுள் மயமாகப் பாவித்து வணங்கவேண்டும். பெற்றோர்களிடமும் மக்களிடமும் கணவனிடமும் மனைவியிடமும் நண்பனிடமும் பகைவனிடமும் கடவுளைக் காணவேண்டும். அத்தகைய பாவனையானது இவ்வுலகக் காட்சியை மாற்றி அமைக்கும். கடவுளைத் தவிர வேறொன்றையும் நாம் காணாதநிலை உண்டாகும். துயரம், போராட்டம் நிரந்தரமாக நம்மைவிட்டு நீங்கும்.

கொள்கைகளும் கோட்பாடுகளும் ஞானமாகாது. கொள்கைகளையும், கோட்பாடுகளையும் ஞானம் ஒதுக்குவதில்லை. அவற்றுக்கெல்லாம் மேலானது ஞானமாகும். ஞானம் எதையும் அழிப்பதில்லை. எல்லோர்க்கும் உதவுவதுதான் ஞானமாகும். ஆறுகளெல்லாம் கடலைச் சென்றடைந்து கடல்மயம் ஆகிவிடுகின்றன. அங்ஙனம் கொள்கைகளும் கோட்பாடுகளும் ஞானத்துக்குள் புகுந்து ஞானமயமாகிவிடுகின்றன. வேற்றுமையை உண்டுபண்ணுவது அஞ்ஞானம். ஞானம் ஒற்றுமையை வளர்க்கிறது. வேற்றுமையை அகற்றி

ஒற்றுமையை காண்கின்றபொழுது நாம் பிரம்மமாகின்றோம்.

பகவான் கண்ணன் பகவத்கீதையில் ஞானத்தைத் தெளிவாகப் புகட்டுகின்றார். பகவத்கீதை இந்திய இலக்கியங்கள் அனைத்திற்கும் சிகரமாக விளங்குகின்றது. பகவத்கீதையை வேதங்களின் விரிவுரை என்றே சொல்லலாம். வாழ்வில் ஞானப்போர் புரிந்தே ஆகவேண்டும். அதிலிருந்து பின்வாங்கக் கூடாது என்று கீதை புகட்டுகின்றது. மேலான நிலை ஒன்றை எய்துவதற்குப் போராடித்தான் ஆகவேண்டுமென்று கீதை புகட்டுகின்றது. பாரதப்போரில் எதிரி சேனையொன்றிற்குத் தலைவனாயிருந்த அர்ச்சுனனுக்குச் சாரதியாக வேடம் புனைந்து, அவனை உற்சாகப்படுத்துகின்றார் கண்ணன். துயரப்படுவதற்கோ மரணத்தைக் குறித்து அஞ்சுவதற்கோ அவசியமில்லை. நீ ஆத்ம சொரூபம். உனக்கு அழிவில்லை. மாறி அமைகின்ற எதுவும் மாறாத உன்னுடைய இயல்பில் இடம் பெறலாகாது. வேதங்கள் ஆத்மாவுக்கு அழிவில்லையென்றும், சரீரத்தின் அழிவால் ஆத்மாவுக்குப் பாதகமில்லை என்றும் போதிக்கின்றன. ஜீவாத்மா ஒரு வட்டம். அதன் பரிதி எல்லையைக் கடந்தது. அதன் மையப்புள்ளி ஒரு சரீரத்தில் இருக்கின்றது. மையப்புள்ளியை ஒரு சரீரத்திலிருந்து மற்றொரு சரீரத்திற்கு மாற்றுவதுதான் மரணம். பரமாத்மாவும் ஒரு வட்டம். அதன் பரிதியும் அளவு கடந்ததாக உள்ளது. அதன் மையம் எங்கும் இருக்கின்றது. சரீரம் என்னும் குறுகிய மையத்தை விட்டு வெளியேறும் பொழுது கடவுளை உணர்கிறோம். அதுதான் நம்முடைய உண்மையான சொரூபம். நம்முடைய இறந்தகாலத்துக்கும் எதிர்காலத்துக்கும் எல்லைக்கோடாக நிகழ்காலம் அமைந்துள்ளது. இறந்தகாலத்துக்கும் எதிர்காலத்துக்கும் புறம்பாக நிகழ்காலம் இல்லை.

## தியானம் வெற்றி பெற...

கேட்டைக் களைவதும், நலத்தைப் பாதுகாப்பதும் அறநெறியாகும். தன்னிடத்திலுள்ள பிரச்னையைத் தீர்க்க முடியாது. நலன் எது ? கேடு எது! என்பதைப் பாகுபடுத்தும் அறிவு மாசற்ற மனத்தில் தான் உதிக்கும். மனம் நாசமடையும் வரையில், வாழ்வில் போராட்டம் உண்டு. மனோநாசத்தில் வாழ்வு பூர்த்தியாகிறது. சத் பொருளை அறிவது ஞானம். அதன்மீது அன்பு செலுத்துவது பக்தி. ஞானத்திலும், பக்தியிலும் நிலைத்து இருக்கச் செய்வது ஆன்ம சக்தி. உலகப் பொருளை அறிவது புலனறிவு. அப்பொருள் மீது அன்பு செலுத்துவது காமம். அப்புலனறிவையும், காமத்தையும் வளர்ப்பது மனோசக்தி.

ஞானத்தையும், பக்தியையும், ஆன்ம சக்தியையும் வளர்ப்பது தத்துவஞானம். புலனறிவையும், காமத்தையும், மனோசக்தியையும் வளர்ப்பது பௌதிக விஞ்ஞானம். சிந்தனையிலுள்ள காமம் மனத்தை மயக்குகிறது. காமாந்தர சொற்கள் சிற்றின்ப உணர்ச்சியைத் தூண்டுகின்றன. காமச் செயல்கள் உடலைப் பலஹீனமாக்குகின்றன. மேலானதைச் சிந்திப்பதற்கு உள்ளத்தூய்மை வேண்டும். மேலான செயல் செய்வதற்கு உள்ளத் திட்பம் வேண்டும். மேலானதில் மனம் நிலைத்து நிற்பதற்கு ஆத்மானுவம் வேண்டும்.

தூங்கித் தூக்கத்தை வெல்லமுடியாது. காம சுகத்தை அனுபவித்துக் காமத்தை வெல்ல முடியாது. விறகைக் கொண்டு நெருப்பை அணைக்க முடியாது. குடித்துக் குடிப்பழக்கத்தை வெல்ல முடியாது. கோபத்தால் வரும் தைரியம் நாசத்தை விளைவிக்கும். சூழ்நிலை சந்தர்ப்பத்தால் வரும் தைரியம் தற்காலிகமானது. ஆன்ம ஞானத்தால் வரும் தைரியம் யாண்டும் நிலைத்திருந்து எல்லா நலன்களையும் தரும்.

~ தர்மச்சக்கரம் ~

# தியான வாழ்விற்குரிய குறிப்புகள்

**நெ**டுநாள் பழகிய பழக்கம் மாற்றுவதற்குக் கடினமானதாய் இருக்கும். ஆனால் திரும்பத் திரும்ப முயற்சி செய்தும் ஒரு தீயபழக்கம் மாறவில்லை என்றால், அதைக்குறித்து மனம் தளர்ந்துவிடக் கூடாது. ஆழ்மனத்தின் செயல்களை அறிந்து கொள்வதில் விழிப்புடன் இருந்து ஆத்ம சாதனங்களைச் செய்வதில் ஒரு கடுமையான திட்டத்தை முறைபிசகாது கடைப்பிடித்து வந்தால் எல்லாத் தீய பழக்கங்களும் நாளடைவில் குறைந்து பின் இல்லாது ஒழியும். இதைச் சாதிப்பதற்குப் பொறுமையும் விடாமுயற்சியும் மிக அவசியம். மனமுண்டானால் மார்க்கமுண்டு. அத்துடன், கெட்ட பழக்கங்களைப் புதிதாகப் பழகிக் கொள்ளாமல் இருக்கவேண்டும். பழைய தீய பழக்கங்கள் கொடுக்கும் தொல்லையே போதுமானது!

ஒரு சங்கிலியின் பலத்தை அதன் மிகப் பலவீனமான வளையத்தின் வலுவைக் கொண்டுதான் தீர்மானிக்கிறோம். அவ்வாறே, தீய சகவாசத்தினால் பாதிக்கப்படாமல் அதை எதிர்த்து நிற்கும் சக்தி நமக்கு எவ்வளவு இருக்கிறது என்று அறிய வேண்டுமென்றால், நம்முடைய பலவீனமான நேரங்களில் அந்தத் தீயசகவாசம் நம்மை எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பதைக் கணிக்க வேண்டும். எனவே நாம் எப்பொழுதும் விழிப்புடன் இருக்கவேண்டும். கேடு விளைவிக்கும் பாதிப்புக்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். முறையான சிந்தனை, முறையான நடத்தை, தற்சோதனை, பிரார்த்தனை, தியானம் இவற்றின் மூலம் நம்மைப் பலப்படுத்திக் கொள்ளலாம்.

சிரத்தையுள்ள சாதகனாக உண்மையான மனத்தைக் கவனித்து வந்தால் அதன் அசைவுகள், இயக்கங்கள், எண்ணங்கள், உணர்ச்சிகள் எல்லாவற்றையும் கண்டுகொள்வது சாத்தியமாகும். சாதாரணமாக இதுபோன்ற விஷயங்களில் நாம் கவனமே செலுத்துவதில்லை. எனவே நம் மனமென்னும் குதிரை நம்மைப் படுகுழிக்குள் தள்ளிவிட்ட பிறகுதான், நாம் எத்தகையதோர் அபாயத்தில் இருக்கிறோம் என்பது நமக்கு விளங்குகிறது. ஆனால் குழிக்குள் வீழ்த்துவதற்கு முன் குழியை நோக்கி அது எவ்வளவு தூரம் சென்றிருக்க வேண்டும்! அவ்வளவு காலமும் நாம் கவனமின்மை, முயற்சியின்மை ஆகிய காரணங்களால் நாம் எங்கு செல்கிறோம் என்பதை அறியாமலேயே இருந்திருக்கின்றோம்.

கடிவாளத்தை உறுதியாகப் பிடி. வழியில் நடக்கும் விபத்துகள் அனைத்தும் கவனமின்மையால் ஏற்படுபவைதாம். எனவே விழிப்புடனிரு. எப்போதும் கவனமாய் இரு. ஒருகணம் கூட உன் மனதைக் கவனிக்காது விட்டுவிடாதே. எந்த மார்க்கத்தில் சென்றாலும் இதுவே ஆத்ம சாதகர்கள் அனைவர்க்கும் பொதுவான விதி.

சூழ்நிலையை பயன்படுத்தலும் ~ மாற்றி அமைத்தலும்

நீ எங்கு சென்றாலும் அங்கு ஆன்மீகச் சூழ்நிலையை உருவாக்கு. நீ வசிக்கும் அறையை கோயிலாக்கி விடு. ஒரு புண்ணிய ஸ்தலத்திற்கோ அல்லது ஆச்ரமத்திற்கோ செல்லும்போது புனிதச் சூழலை நீ அனுபவித்தால் மட்டும் போதாது, நீயும் அப்புனிதத்திற்கு உன் பங்கை அளிக்க வேண்டும். மேல்நாடுகளில் ஆன்மீகச் சூழ்நிலை முழுவதும் உறிஞ்சித் தீர்க்கப்பட்டுவிட்டது. இந்தியாவிலும்

இத்தகைய அபாயம் நேரலாம். நாம் அதன் அருட்சூழலை வளர்க்காவிட்டால், கட்டடங்களும் படங்களும் அருட்சூழல் ஆகிவிடமாட்டா. பல சமயங்களில் அவை அருட்சூழலைப் போக்கிவிடுகின்றன.

சூழ்நிலையைக் குறைகூறி முணு முணுப்பதில் பயனில்லை. உனக்காக உலகம் மாறாது. நீதான் உன்னை மாற்றிக்கொள்ள வேண்டும். எங்கும் நிறைந்துள்ள பெரிய பொருளோடு உன்னை இணைத்துக் கொள்வதற்கு உன்னை நீ சரிப்படுத்த வேண்டும். சாதன கட்டத்தில் நம்மையும் இறைவனையும் தவிர வேறு எதையும் எவரையும் பற்றி நினைக்கக்கூடாது. கடவுளைத்தவிர வேறு எதைக் குறித்தும் கவலை கொள்ளாதிருப்போமாக. கடவுளோடுதான் நாம் வாழவேண்டும். இந்த மனப்பான்மையே முடிந்த நிலை ஆகிவிடாது என்பது உண்மைதான். ஆனால் அந்த முடிந்த நிலையை அடைவதற்குப் பிற எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு இறைவனை மட்டுமே நினைக்கவேண்டும் என்பது மிக முக்கியமான படி ஆகும். இந்தப் படியில் ஏறினால்தான் எல்லாருள்ளும் இருப்பது ஒரே இறைவனே, அந்த அந்தர்யாமியை முன்னிட்டு, அவனுக்காக அதன் மூலம் எல்லா உயிர்களையும் நேசிக்கவேண்டும் என்னும் நிலை அடையப்படும்.

பாவம் :

ஆத்ம சாதகன் இறைவனுடன் ஒரு குறிப்பிட்ட உறவுமுறையை ஏற்றுக் கொண்டு அந்த பாவத்திலேயே வணங்கி வரவேண்டும். முதலில் மெய்ப்பொருளின் ஓர் அம்சத்தை அல்லது அவதார புருஷர் ஒருவரிடம் தீவிரமாகப் பக்தி செய்யவேண்டும். பின்னர் இந்த இஷ்டமூர்த்தியின் பின்னால் எல்லாருக்கும் உரியவனும் எல்லாமாய் ஆகி இருப்பவனுமான விசுவமூர்த்தியை, விராட் சொரூபியைக் காணப் பழக வேண்டும். அதன் பிறகே இந்த விராட் சொரூபியின் பின்னால் பூரணப் பொருளான குணம் குறியற்ற பெரிய பொருளைப் பணிய வேண்டும். மானுட வடிவம் தாங்கிய அவதார புருஷரை வழிபடுவதோடு நின்றுவிடாமல் படிப்படியாக நிர்குணப் பிரம்ம உபாசனைக்கு உயரவேண்டும். எல்லாம் கடந்த மெய்ப்பொருளை அத்வைத அனுபூதியில் அறிவது என்பது எப்போதுமே எல்லாவற்றுள்ளும் ஊடுருவியிருக்கும் பொருளாக அதை உணர்வதன் மூலம்தான் அடையப்படும். அத்வைத சித்தாந்தம் எவ்வளவுதான் அறிவை ஈர்க்கக்கூடியதாக இருந்தாலும் சரி, தேவையான தயாரிப்பும் பக்குவமும் இல்லாமல் ஒரே தாவலில் அடையப்படக்கூடிய ஒன்று அல்ல. முதலில் விசுவ பாவனையை நம் உள்ளத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். அப்போது, ஆண் பெண், அகம் புறம் என்ற பேதங்கள் மறைந்து ஒரு பொருளே இத்தனையுமாகத் தோன்றிக் கொண்டிருக்கிறது என்பது விளங்கும்.

பயங்கரமான, கொடூரமான நிகழ்ச்சிகளில் கூட கடவுளை மட்டுமே பார்க்க நாம் பழகிக் கொள்ளவேண்டும். ஆனால் அந்தப் பயங்கரமும் கொடூரமும் நம் மனத்தைத் திணற அடித்துவிடக் கூடாது. இறைவன் பக்குவப்படாத, அசுசியான, பயங்கரமான, கீழான வஸ்துக்களில் கூட இருக்கிறான் என்னும் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். அதேசமயம் இவை நம் மனத்தைப் பீடித்துவிடக் கூடாது. மனதைப் பாதிக்க அனுமதித்து விடக்கூடாது. விசுவரூபத் தியானம் செய்து வந்தாலொழிய இத்தகைய மன அமைதியும் சமநிலையும் வாய்க்காது.

குறைகளையும் இருமைகளையும் மறந்து, ஒரு பொருளையே எல்லாவற்றிலும் காணப் பழகிக் கொள்ளுமளவு நாம் இப்பிரபஞ்சத்தின் மாயை விளையாட்டை மறந்து இருக்க வல்லவர்கள் ஆவோம். இது எப்போது சாத்தியமாகும்? இறைவனைத் தவிர மற்றெல்லாம் பொருளற்றவை,



அம்மாவுடன் பாலர் பாடசாலை ஆசிரியர்.



ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரம மாணவர்களுக்கு தலைவர் குலபதி ஆறுமுகம் கந்தையா J.P யோகாசனப் பயிற்சி வகுப்பை நடத்துகின்றார்.

கணநேரம் இருந்து மறையக்கூடியவை; முக்கியமில்லாதவை; நிழல்போன்றவை; சிறிது நேரம் காட்சிக்கு வந்து மறைந்துபோகும் தன்மை உடையவை என்பதைத் தெரிந்து கொள்ளும்போதுதான் இந்திரியங்கள் மனத்திற்குக் காட்டும் ஆசைகளைப் புறக்கணித்து, அடங்கா மனத்தை அடக்கினாலொழிய மனத்தை இறைவனிடம் திருப்புவதோ, அவனையே நம் வாழ்வின் மையமாகக் கொள்வதோ சாத்தியப்படாது.

உலக விஷயங்களை உள்ளது உள்ளபடி காணப் பழகிக்கொள். இப்பிரபஞ்சத்தில் எங்கு பார்த்தாலும் மலரும் மலரும் அருகருகே இருக்கக் காண்கிறோம். இருமைகளைத் துவைதத்தைக் கடந்து மனது செல்லாதவரை, தோற்றத்திற்கு வந்துள்ள இம்மாயப் பிரபஞ்சத்தைத் தாண்டிச் செல்லாதவரை, அவை என்றுமே பிரிக்க முடியாதவைகளாகத்தான் இருக்கும். எனவே சாதனத்தின் ஆரம்பக் கட்டங்களில் இந்த உலகம், அது தரும் அற்ப சுகங்கள் ஆகிவற்றைக் குறித்துத் தீவிர அருவருப்பை உண்டாக்கிக்கொள். பின்னால் வைராக்கியம் உறுதிப்பட்ட பிறகு இந்த அருவருப்பை, எல்லாவற்றையும் இறைவன் மயமாகக் காணும் அருட்காட்சியால் மாற்றிவிடலாம்.

மனத்தைக் கையாளப் பழகிக்கொள் :

நீ சொல்வதைச் செய்யும்படி மனத்தைப் பழக்கு. எந்த இடத்தில் பிடித்தால் மனது உன் வசத்திற்கு வரும் என்று தெரிந்துகொள். 'பால் கறப்பது எப்படி?' என்று தெரிந்து கொள்ளாவிட்டால் பசுவினிடமிருந்து பாலைப் பெறமுடியாது. அதிகளவு பாலைப் பெறவேண்டுமென்றால் நீ பால் கறப்பதில் நிபுணனாக வேண்டும். அவ்வாறே மனத்தைச் சொன்னதைச் செய்யும் வேலையாளாக இயக்கத் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லையேல் புத்தகங்கள் பல படித்து நல்ல கருத்துக்களால் மனத்தை நிரப்பி வைத்திருந்தாலும், அதனால் பயன் ஒன்றும் விளையாது. உன் மனமென்னும் பசு பால் கொடுப்பதற்குப் பதிலாக ஓங்கி உதைக்கும்! எனவே கவனமாக மனத்தை இயக்கி வா.

மனத்தில் பல அறைகள் இருக்கின்றன. சிலவற்றை நீ கவனமாகப் பூட்டி வைத்துவிட வேண்டும். அதாவது தீய உணர்வுகளையும் நினைவுகளையும் கட்டுப்படுத்த வேண்டும். மற்ற அறைகளைத் திறந்து விடலாம். அதாவது பக்தி பண்ணும் இயல்பு, வைராக்கியம் பழகும் முயற்சி இவற்றை உற்சாகப்படுத்த வேண்டும். ஆனால் இறுதியில் எல்லா அறைகளுக்கும் தீ வைத்துக் கொளுத்திவிடு. ஏனென்றால் உண்மை என்பது நலன், கேடு இரண்டிற்கும் அப்பாற்பட்டது.

இறைவனிடம் செல்க

இவ்வுலகில் நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு அடியும், உதையும், குத்தும் நம்மை இறைவனை நோக்கித் திருப்பட்டும். இவ்வுலகின் நிலையாமையை, இது மித்தை என்பதை நினைவூட்டட்டும். இதன்மூலம் நம்முடைய ஏமாற்றங்களும் ~ துன்ப துயரங்களும் இறைவன் நமக்களித்த அருட்பேறுகள் ஆகிவிடும். மனத்தை அழுத்தும் சுமைகள் இருந்தால் இறையருள் என்னும் காற்றை உள்ளே புகவிடு. வெகுநேரமாகச் சேர்ந்துவிட்ட நீராவியை வெளிவிடுவது நல்லது. ஆனால் அதுகூட இறைவனிடமே இருக்கட்டும். நீ விரும்பினால் இறைவனை உன்னுடைய தோழனாகப் பாவித்து அவனைக் கடிந்துகொள்ளவும் உரிமையுண்டு. அவனோடு எப்படித் தொடர்பு வைப்பது எனத் தெரிந்துகொண்டால், அவன் உனக்கு எவ்வளவு அருகாமையில் இருக்கிறான் என்பதை உணர்வாய். அவனோடு நீ உரிமை எடுத்துக்கொண்டு பேசினால் அவன் கோபித்துக் கொள்ளவே மாட்டான். இதோ பார்! ஆத்ம சாதனத்தில் ஒரு முக்கியமான காரியம் என்ன

தெரியுமா? இறைவனோடு நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்வதுதான்.

ஆத்ம சாதகனொருவன் எல்லாச் சூழ்நிலைகளிலும் இறைவனையே சார்ந்திருக்க வேண்டும். ஆரம்பத்தில் அவன் மனிதர்கள், ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் உதவியை நாடலாம். ஆனால் உரிய காலத்தில் அவன் நமக்குத் தேவையான அருள், உற்சாகம் அனைத்தையும் இறைவனிடமிருந்தே பெறக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் துயரப்படும்போது மனம் முழுவதும் கலங்கி விடுகின்றது. ஆனால் அத்தகைய பெருந்துயரம் நம்மை வாட்டும்போதுதான் நாம் சொல்லவேண்டும் : "ஆம், என் மனதும் உடலும் துன்பங்களை அனுபவிக்கின்றன. ஆனால் இவை என் ஆத்மாவைத் தீண்ட முடியாது, ஆத்மாவைச் சிறைப்படுத்த முடியாது". எப்போதும் எல்லாக் காலங்களிலும் உன் ஆத்மாவின் மகிமையை உறுதியாக இயம்புக. அனுபூதிமான்களுக்குத் துயரம் வரும்போது அவர்கள் அத்துயரத்தைச் சாட்சியாக இருந்து பார்க்கிறார்கள். அவர்களால் உடனே மனத்திற்கு உயர்ந்ததொரு திருப்பம் கொடுத்துவிட முடியும். எல்லாச் சூழ்நிலைகளிலும் பாதிக்கப்படாமல் இருக்க முடியும்.

நம் இதயத்தில் அந்தர்யாமியாய் உறையும் இறைவனை உணரும் சக்தியைப் பலப்படுத்த வேண்டும். நம்முள்ளிருக்கும் இந்தத் தெய்வீகப் பேருணர்வை உணரும்பொருட்டு எல்லா எண்ணங்களும் உணர்ச்சிகளும் அதை நோக்கியே திருப்பப்படட்டும். புறவுலகில் காணப்படும் துன்ப துயரங்களும், ஏமாற்றங்களும், வலிகளும், வேதனைகளும்தான் எத்தனை எத்தனை! அது எப்போதும் அப்படித்தான் இருக்கும். இந்தப் பிரபஞ்சம் இருமைகள் அல்லது துவந்துவங்கள் இல்லாமல் இயங்காது. எனவே, இவ்வுலகில் எப்போதுமே நலமும் கேடும், இன்பமும் துன்பமும் சேர்ந்தே இருக்கும். மாறாத மகிழ்ச்சி என்பது ஒருக்காலும் இங்கு இல்லை. இந்த நிலையை ஒருபோதும் மாற்ற முடியாது. நீ செய்யக்கூடியதெல்லாம் இன்னும் உறுதியாக இறைவனைப் பற்றிப் பிடிப்பதும், உண்மையான சரணாகதி மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதும்தான். இதுவே அமைதிக்கும், அருளுக்கும், ஆனந்தத்திற்கும் ஒரேவழி. சரணாகதி என்பது உலகம் தரும் துன்பங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதல்ல, உண்மையில் உன் அறிவையும் உணர்வையும் உயர்நிலைக்கு எடுத்துச் செல்வது. அதுவே நடைமுறையில் கொண்டுவரத்தக்க ஒரே தீர்வு. நீ எப்போதும் புகார் செய்யும் உலகத் துயரங்கள், கலகங்களையும் உலகப் போர்களை விளைவிக்கும் உள்ளக்குமுறல்கள், பகைமைகள் ~ இவை அனைத்தும் இறைவனையே ~ அமைதியின் ஒரே இருப்பிடமான ஆண்டவனையே நாடச் செய்யவேண்டும். நம்முடைய துன்ப துயரங்களும் ஏமாற்றங்களும் இவ்வுலகின் நிலையில்லாத் தன்மையை நினைவூட்டட்டும். பாதுகாப்பைத் தரக்கூடியது இந்த உலகில் எதுவும் இல்லை. இங்கிருந்து எந்த மகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும் பாராது இருப்போமாக. இறைவன் ஒருவனே நம்முடைய ஒரே பலம், ஒரே துணை. அவனுடைய இச்சை நிறைவேறட்டும், அவனோடு நாம் இணைந்திருப்போமாக. இதுவே உண்மையான சாதகன் ஒருவனின் மனப்பான்மையாக இருக்கவேண்டும்.

எளிமையின் அவசியம் :

உன் செயல்பாடுகள் அனைத்திலும் நேர்மை மிளிரட்டும். செருக்கும் வஞ்சகமும் உன்னிடம் இல்லாது ஒழியட்டும். குழந்தையின் சரள சுபாவத்தைப் பெற்றிரு. ஆனால் குழந்தைத்தனமாய் இராதே. கர்வமில்லாமல் ஆனால் கண்ணியம் நிறைந்த பாங்கில் உலகப்

பற்றுடையாரிடமிருந்து விலகியிரு. பிறரிடம் நீ அனுதாபம் காட்டலாம். அதேசமயம் உணர்ச்சி பூர்வமாக பந்தப்பட்டு விடாமல் விலகியிருக்க உனக்குத் தெரியவேண்டும். பந்தப்படுத்தும் வகையில் யாரும் உன்னை நெருங்க இடம் கொடுக்காதே.

நாம் எளிமையாக இருக்க ஆரம்பிக்கும் அந்தக்கணமே எல்லாம் எளியதாகிவிடும். இறைவனின் குழந்தைகள் போல, தேவதைகள் போல நாம் வாழவேண்டும். ஒரு குழந்தையின் எளிமையும் தூய்மையும், ஒரு முதியவனின் பக்குவமும் விவேகமும் சேர்ந்து நம்மிடம் இருக்கவேண்டும்.

எல்லோரிடமும் மனம் திறந்து பேசிவிடக்கூடாது. பக்குவப்பட்ட தூய உள்ளம் கொண்டவர்களிடம் மட்டுமே உன் மனத்தைத் திறந்து காட்ட வேண்டும். உன்னுடைய அழுக்குத் துணிகளை எல்லார் முன்னிலையிலும் அலசாதே. தீயவர்கள் நீ ஒத்துக்கொண்ட உன் தவறுகளையே உனக்கு எதிராகப் பயன்படுத்தி, உன் வாழ்க்கையை துயரம் நிறைந்ததாக்கி விடுவார்கள். ஆனால் விவேகியான மூத்தவர் ஒருவரிடம், ஏற்கனவே ஆத்ம சாதனம் புரிந்து அதிலுள்ள சிரமங்களையும் தடைகளையும் சந்தித்து, அவற்றிலிருந்து மீண்ட அனுபவசாலியான ஒருவரிடம் மனம்விட்டுப் பேசுவதில் தவறில்லை. உலகப் பற்றுடையவர்களிடமும், பொருத்தம் அற்றவர்களிடமும், உன் மனத்தை வெளிப்படுத்தாதே. அனுபவசாலியும் அனுதாபம் உடையவருமான ஒரு மூத்தவர் உனக்கு அகப்படவில்லை என்றால், உன் இஷ்ட தெய்வத்திடமே செல். அவர் உனக்கு வழிகாட்டுவார்.

~ தர்மசக்கரம் ~

# Kind - ஆக இருந்தால்தான் Mankind

**பகவான் சத்திய சாயிபாபா**

தவம் :

**அ**மைதியாய் இருப்பதைத் தவிர வேறு தவம் ஏதுமில்லை. தயையையும், கருணையையும் விடச் சிறந்த தர்மம் வேறெதுவும் கிடையாது.

அன்பின் வடிவங்களே!

ஸ்ரவணம், கீர்த்தனம்,விஷ்ணுஸ் மரணம், பாத சேவனம், வந்தனம், அர்ச்சனம், தாஸ்யம், சக்கியம், ஆத்ம நிவேதனம் என்ற நவ விதமான பக்தியையும் தேகத்தை முன்னிட்டுச் செயலாக்குகிறான் மனிதன். ஆனால் வேதங்கள் சொல்லும்,

சத்யம் ப்ரூயாத்
ப்ரியம் ப்ரூயாத்
நப்ரூயாத் சத்யம் அப்ரியம்

என்ற வாகத்தின் பொருளை உணர்ந்து கொள்ளுதல் அவசியம்.

சத்யம் பேசிப் பழகுதல் அவசியம் என்னும் போது, அது நீதி வாக்கியம். ப்ரியத்துடன் பேசுவது என அறிவுறுத்தும் போது, அது மனித தர்மம். எது சத்யமில்லையோ, எது பிரியமானதில்லையோ அதை விலக்கி வைக்க வேண்டும என்று சொல்லும் போது, அது ஆன்மீகம். இவ்வாறு நீதியும், தர்மமும், அன்மீகமும் என மூன்றும் இணைந்தது தான் மானத்வம்.

ஆகவே மானவத்வத்தில் உள்ள திவ்யத்துவம் மறக்கப்படக்கூடாது. தன்னைத் தெய்வ வடிவம் என மனிதன் உணர வேண்டும். வெறும் மனித வடிவம் என எண்ணி மயங்கக்

கூடாது. நீ வெறும் மனிதனல்ல, தெய்வ ஸ்வரூபமே என மனிதனுக்கு உணர்த்த வேண்டும். இந்தச் சத்யத்தைப் புரிந்து கொள்ளாததால்தான் மனிதன் தனது குறுகிய நோக்கத்தால், தன்னை வெறும் மனிதன் எனக் கருதிக்கொண்டு குழப்பமடைகிறான்.

பிரமம் :

'அஹம் பிரம்மாஸ்மி' – நான் பிரம்மமே என்ற உண்மையை ஒவ்வொரு மனிதனும் புரிந்துகொள்ள வேண்டும். இத்தகைய ஆத்ம விசுவாசம் பெருகிய பிறகு தான் மனிதன் தனது தத்துவத்தைத் தானே உணரமுடியும். தெய்வம் என்பது நம்மிலிருந்து எங்கும் வேறாக இல்லை. பண்டைக்காலத்தில் இருந்தே பாரததேசத்தைச் சேர்ந்தவர்கள் பலவகையான சம்பிரதாயங்களை அனுசரித்து, இவ்வுலகம் முழுமைக்கும் ஸ்திரத்தன்மையையும், பாதுகாப்பையும் நல்கி வந்திருக்கின்றனர். விசாலமான இதயத்தைக் கொண்டு லோகாஸ்ஸமஸ்தா ஸுகினோ பவந்து என்ற தத்துவம் மனிதனிடம் மட்டும் தான் காணப்படுகிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக இதை உணராமல் செல்வம், தங்கம், வாகனம் என்று உலகியலாகவே நினைத்து நாளை வீணடித்து வருகிறான் அவன். உலகியல் செல்வங்கள் அனைத்தும் அநித்யமானவை. சீக்கிரமே அழியக்கூடியவை.

பக்தி :

பாரத கலாசாரத்தில் 'சத்யம் ப்ரூயாத்' சத்யம் வத! தர்மம் சர! என்ற தத்துவங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. சத்யமே பேச வேண்டும். தர்ம வழியே நடக்க வேண்டும். இவையே பக்திக்கு அடிப்படையாக இருக்கின்றன.

தெய்வம் எங்கே இருக்கின்றது? சத்யமே தெய்வம். Truth is God! Love is God! Peace is God! You are the embodiment of Peace! You are the embodiment of Truth! You are the embodiment of Love! இத்தகைய சத்யத்தைப் புரிந்துகொள்ளாமல், தெய்வம் வேறெங்கோ இருப்பதாக எண்ணுகிறான் மனிதன். இது மிகவும் தவறு. தெய்வம் எங்கோ இல்லை? பத்ரிநாத்திலோ, கேதார்நாதத்திலோ, திருப்பதியிலோ, பத்ராசலத்திலோ, காஞ்சியிலோ தெய்வத்தை காணமுடியும் என்று எண்ணுவது வெறும் மூர்க்கத்தனம்! தெய்வம் எங்கிருக்கிறது என்றால், தெய்வம் இதயத்தில் இருக்கிறது. உன் இதயமே தெய்வத்தின் திருக்கோயில். உன் இதயமே பகவான் வசிக்கும் இல்லம்.

அதனால் இதயத்தைத் தயை நிரம்பியதாக வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும். ஹ்ருத் + தயா = ஹ்ருதயா. தயை நிரம்பியதே இதயம்.

மேகங்கள் :

மனிதனை Mankind என்றனர். மனிதன் Kind ஆக விளங்க வேண்டும் என்பதையும் குறிப்பாகச் சொல்வதாகக் கொள்ள வேண்டும். இதயத்தில் கருணையற்ற மனிதன் மிருகத்துக்குச் சமம். ஆகையால் நீ தெய்வமே என்ற சத்யத்தைப் புரிந்து கொள்ளுதல் அவசியம். ஆனால் உணராமல் உலகத்தில் என்னவோ இருக்கிறது எனக் குழம்பித் தவிக்கிறாய். இவ்வுலகில் எதுவும் இல்லை எல்லாம் அசத்யம். எல்லாமே அநித்யம், சுகதுக்கம் எல்லாம் நகர்ந்து செல்லும் மேகங்கள் போன்றவை. வருகின்றன, போகின்றன.

ஆனால் இப்படிப்பட்ட உலகில், அதிகம் படித்து விட்டதாகச் சிலர் அகங்காரப்படுகின்றனர். இன்னும் சிலர் அதிகமான செல்வம் படைத்து விட்டதற்காகக் கர்வப்படுகின்றனர். இவற்றில் எல்லாம் இறைவன் இல்லை. வேத சாஸ்திரப்

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் திவ்விய பாதம்.





சுவாமிகளின் வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் குருபீடமுதல்வருக்கு மாலை அணிந்து கௌரவிக்கின்றார்.

புராணங்கள் எல்லாம் படித்த பண்டிதனிடம் கூடக் கடவுள் இல்லை. வேதத்திலும் இறைவன் கிடையாது. இறைவனைக் குறித்து வேதம் உரைக்கிறது. சாஸ்திரங்களில் பகவான் இல்லை. அவ்வாறிருக்கும்போது இறைவனைப் பற்றி சாஸ்திரம் படித்தவர் எவ்வாறு பேச முடியும்? சாஸ்திரம், புராணம், பகவத் கீதை அனைத்தும் நகைகளைப் போன்றவை. அவற்றை மனிதன் நகைகளாகப் பார்க்கின்றானே தவிர, அவை உருவாகப் பயன்பட்ட தங்கமாகக் காணவில்லை. இவற்றில் பரவியிருக்கும் அகண்ட தத்துவம், தங்கம் ~ இதனைக் கவனிப்பதும் இல்லை. ஆகவே, கடவுளை நாம் தேட வேண்டியதில்லை. நிஜமான பக்தன் எங்கு இருக்கிறான் என்று இறைவனே தேடிக் கொண்டிருக்கிறான்.

நாமெல்லாம் பக்தர்கள் எனச் சொல்லிக் கொள்கிறோம். அது மிகவும் தவறு. இறைவன் எல்லோரிடமும் திவ்வியமாகக் காட்சி தருகிறார்.

பூநகரம் :

தமிழ்நாட்டில் காவேரி நதி தீரத்தில் பூநகரம் எனப்படும் ஓர் ஊர் இருந்தது. அங்கு துணி நெய்து வாழ்க்கை நடத்தி வந்தவர் ஒருவர் இருந்தார். ஒரு தனவந்தரின் மகன் அவரிடம் வந்து, "இந்தத் துணி என்ன விலை?" என்று கேட்க, "அது மூன்று ரூபாய்" எனப் பதிலுறுத்தார். அந்தப் பணக்காரனின் மகன் அப்புடைவையை இரண்டாகக் கிழித்து, "இது என்ன விலை?" என்று கேட்டான். "இது ஒன்றரை ரூபாய்" என்றார் அந்த நெசவாளி.

மீண்டும் அதனை இரண்டாகக் கிழித்து, "இது என்ன விலை?" என்றான். இது "பனிரண்டணா" எனப் பதில் வந்தது. இவ்வாறு பொறுமையாகப் பதில் சொன்னாரே தவிர, எவ்வகையிலும் கோபம் கொள்ளவில்லை!

செல்வந்தனின் மகனுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. "ஐயா! இவ்வளவு பொறுமையோடு இருப்பதற்கு என்ன காரணம்?" என்றான். அப்போது அவர் சொன்னார்.

"பொறுமையே சத்யம், பொறுமையே தர்மம், பொறுமையே வேதம், பொறுமையே அஹிம்சை, பொறுமையே அனைத்தும், பொறுமையே மகிழ்ச்சி, ஸ்வர்க்கம் எல்லாம்."

பொறுமையே ஸர்வ லோகத்திற்கும் பொருத்தமானது ~ பொதுவானது. பொறுமை, சகிப்புத்தன்மை இவற்றிற்கு மிஞ்சிய தெய்வம் உலகத்தில் வேறெதுவும் இல்லை.



# தியானம்

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் இந்துக்களாகிய எமக்கு தந்தருளிய மறை வாக்கு. அந்த இறைவனை வணங்குதற்கு நான்கு மார்க்கங்கள் எம்முன்னோரால் வகுக்கப்பட்டுள்ளன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். இந்நான்கு மார்க்கங்களையும் பற்றி தாயுமான சுவாமிகள் மிகத் தெளிவாக, அழகாக,

"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனி போலன்றோ பராபரனே"

எனக் கூறியுள்ளார்.

இந் நாற்பதங்களுள் யோகம் பற்றிக் கூறுகையில் இருவிதக் கருத்துக்கள் வேறுபட்ட பொருளில் விளங்குகின்றது. யோகம் என்பது 'யுஜ்' என்ற வினையடியிலிருந்து பிறந்தது. 'யுஜ்' என்றால் இணைதல் எனப் பொருள்படும். அதாவது ஜீவாத்மா, பரமாத்மாவுடன் இணைதலைக் குறிக்கும். யோக தரிசனத்தார் யோகம் பற்றிக் கூறுகையில் தெரிந்தோ தெரியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ இணைந்து கொண்ட ஆத்மா ~ பிரகிருதித் தொடர்பிலிருந்து விடுதலையடைதல் 'யோகம்' என்கின்றனர்.

இந்த யோக தத்துவத்தைப் பயிலுவதற்கு எட்டுப்படிகள் உள. அவை இயமம், நியமம், ஆசனம், பிரணாமயம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனப்படும். தியானம் அட்டாங்க யோகத்தின் ஒருபடி என்பது பதஞ்சலி முனிவருடைய கூற்றாகும்.

" மனத்தை அகத்தோ அல்லது புறத்தோ ஓரிடத்தில் நிலையாய் இருக்கப் பழகிய பின், அதற்கு அந்த இடத்தை நோக்கித் தொடர்ந்து ஓடுகிற தன்மையுண்டு. இதுவே தியானம் எனப்படும். தியானம் பலம் அடைந்தபின் காட்சியின் புறப்பாகத்தை விலக்கி, உட் காணப்படும் அகப்பாகத்திலே நிலை பெற்றிருத்தல் சமாதியாகும். இவ்வித தியானத்திலே உண்மை இன்பத்தை, பேரானந்தத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இப்பேருண்மையை கைதடியூர் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் அனுபவித்து அனுபூதிச் செல்வராயினார் என்பதை கைதடி ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் ஆசிரம அறப்பணிகள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

இந்தத் தியானத்தைக் கடைப்பிடிப்பதற்கு மனதில் தோன்றும் விருத்திகளை அடக்க வேண்டும் என்பது பதஞ்சலி முனிவரின் வாக்கு. அதற்கு அவர் "சித்த விருத்தி நிரோதக" என்று தன் சாத்திரத்தில் முதலாவது சாத்திரமாகத் தந்துள்ளார். அதாவது சுதந்திரமாக பேரானந்தப் பெருவாழ்வு வேண்டின் மன விருத்திகளை அடக்கவேண்டும் என்றார். அதனையே ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளும் தனது ஞான நிட்டை என்னும் பாமூலம்

"சிக்கிய மனத்தை நீக்கி நின்மலப் பிரமந் தன்னில்
சொக்கியே நிற்பதன்றோ நல்லருள் ஞான நிட்டை..."

என்றும்,

" மனமெனும் பெருமிடியடக்க வெனக்குத்
தனமெனு ஞானச் செல்வத்தை தந்து..." என்றும்,

" மனத்தினைப் பொறிவழி செல்லாதடக்கி..." என்றும்,

" எங்குமாம் பிரமந்தன்னி செனமுப்பிய மனதை விட்டுப்
பொங்கிய ஞானத்தாலே யவித்தையை நீக்கித்..."

என்றும்,

"அலைவுறு மனத்தை அடக்கி..." என்றும்,
"வஞ்சக மனத்தின் ஆசையை உதறித்தள்ளி..." என்றும்,

மனம் ஒடுங்கி தியானம் பெறுதற்கான படிமுறைகளைக் கூறியுள்ளார். அவருடைய வாசகங்களைக் கேட்டு அறிந்து, அனுபவித்து வந்தவர் கைதடியூர் செல்லம்மா அம்மையார். குருவின் பணியை, "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதை நிலைநாட்ட, தனித்திருந்து தியானம் செய்ய இடமில்லையே என்று அம்மையார் ஏங்கியகாலம் ஆசிரமத்தின் ஆரம்ப காலம். இச்சந்தேகத்தைக் குருவே "கைதடியில் இனத்தவருக்குப் பக்கத்தில் ஒரு குடிசை அமைத்து அங்கிருந்து தவமுடிப்பதே பெருமை என்றார். அன்றே அவ்விடத்தில் மனம் ஒடுங்கும் மைதானமாகிய தியானச் சூழலுக்கு அங்கீகாரம் கிடைத்து விட்டது. இது அரச அங்கீகாரம் அல்ல, ஆன்மாவை தேடும் ராகங்களின் அங்கீகாரம். அந்த அங்கீகாரச் சின்னத்தின் வடிவமே இன்றைய தியான மண்டபம் என்றால் மிகையாகாது.

"தியான தியாத்ரு தேயரூபாய நமோ நமக" என்று அம்பாளின் அர்ச்சனைகளில் தியானம் பற்றி பேசப்படுகின்றது. அதாவது தியானம் தியானிக்கப்படுபவர், தியானிக்கப்படும் பொருள் ஒன்றாக இருக்க வேண்டும். இதனை செவ்வனே கடைப்பிடிக்க வேண்டின் ஒரு தனி இடம் தேவை என அனுபவத்தால் உணர்ந்ததின் விளைவே ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரம தியான மண்டபம் என்பது எனது தாழ்மையான கருத்து.

உடம்பினுள்ளே உறைகின்ற உறு பொருளை கண்டவர்கள் யோகிகள். உறுபொருளைத் தியானம் மூலமே காணலாம் என்பவர்கள் ஞானிகள். ஆகவே யோகிகளும் ஞானிகளும் மிதித்த கைதடி மண்ணில் தியான மண்டபம் அமைவது "காலம் இட்ட கட்டளை" எனலாம். "தவமும் தவமுடையார்க்கே" என்பதற்கிணங்க இப்பெரும் கைங்கரியத்தை நிறைவேற்றப் பெரும் பேறு பெற்றவர் ஆசிரம செயலாளர் திரு. இ. குழந்தைவடிவேலு அவர்கள். சுவாமியினுடைய அருமை பெருமைகளை உள்ளூர அனுபவித்தவர் இவர். அவரது உள்ளப் பெருங்கோவில் தான் கற்களால் கட்டப்பட்டு (பூசலார் நாயனார் கட்டிய மனக்கோவில் போன்றது) தியான மண்டபமாக நிமிர்ந்து நிற்கின்றது.

தியானத்தினுடைய சிறப்புப் பலவரலாற்று உண்மைகளைக் கொண்டது. சிந்துவெளி நாகரீகத்தில் மொகஞ்சதாரோ ஹரப்பாக்களில் எடுக்கப்பெற்ற முத்திரைகளில் (Seal) 420 என்ற எண்ணுள்ள முத்திரையை வைத்து 'சிவனின் தோற்றம்' என்ற ஆய்வில் க்ராம்திஷ் என்ற அம்மையார் குறிப்பிடுகையில், இந்த முத்திரை ஒரு தியானம் செய்பவனைக் குறிப்பதாக உள்ளது. அவருடைய குறி ஊர்த்துவமாக (மேலாக) இருப்பதாலும், அவரைச் சுற்றிப் பல விலங்குகள் இருப்பதாலும் சுக்கிலத்தைக்கட்டி மேனோக்கிச் செலுத்தும் தியான வழியைக் கொண்ட யோக வழியைப் பின்பற்றினவர்கள் வழிபடும் தெய்வம் அது என்ற முடிவுக்கு வந்தனர்.

இந்துக்களின் தொட்டிலில் பிறந்த தியானச் சின்னம் மண்டபமாக கைதடியில் மிளிர்கின்றது. இம்மண்டபம்,

" அழுக்காறு அவா, வெகுளி இன்னாச் சொல் நான்கும்
அறவே துறந்தவர்களின் ஆலயமாகும் "

"சிந்தை தெளிவாக்கு அல்லாலிதை செத்த உடலாக்கு"

என்றபடி தெளிந்த சிந்தனையாளர்களின் தரிப்பிடமாகவும்

" யாகத்திலே தவவேகத்திலே – தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்தி கொண்டார் தம்
அருளிலே உயர் நாடு "

என்பதை நிரூபிக்கும் சின்னமாக ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் ஆசிரம தியான மண்டபம் விளங்கப்போகின்றது. இது கைதடி இந்துக்களுக்கு ஒரு வரலாற்றுப் பெருமையை ஏற்படுத்தித் தரும் என்பது எனது எண்ணம்.


வைத்திய கலாநிதி K.T.S. சபாநாதன்
நயினை நாகபூசனி அம்பாள்
அறங்காவற் சபை உறுப்பினர்



உசாவுதுணை நூல்கள்:

I. தாயுமானவர் பாடல்

II. முப்பொருள் உண்மை விளக்கம்
- மு. இளையதம்பி ( B.A )

III. பாரதிபாடல்

IV. இராஜயோகம்
- சுவாமி விவேகானந்தர்

V. ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் சரித்திரம்

VI. கோயில்
- பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

VII. திருக்குறள்
- டாக்டர் மு. வரதராசன்

VIII. பெரியபுராணம் ஓர் ஆய்வு
- அ. ச. ஞானசம்பந்தர்

IX. யோகதத்துவம்
- யாழ் பல்கலைக்கழகம்

X. பதஞ்சலி யோக சாத்திரம்
- ஸ்வாமி

XI. இந்திய தத்துவ ஞானம்
கி. லக்ஷ்மனன் (M.A)

XII. லலிதா சகஸ்ரநாமம்


## ஸ்ரீ சச்சிதானந்த மகராஜ் பிரார்த்தனை

எங்களின் அன்புத் தெய்வமே! இறைவனுக்கெல்லாம் இறைவனே! சச்சிதானந்தா! என்றென்றும் உயர்நிலையில் இருக்கும் தங்களுக்கே அனைத்துப் புகழும் உரித்தாகட்டும்!

அண்டித்துதிக்கும் பக்தர்களின் துயரனைத்தும் தீர்த்துவைக்கும் தயாபரனே!

தங்களது இனிய கருணையை இடைவிடாது பெற்று மகிழும் இனிய பாக்கியத்தை எங்களுக்கெல்லாம் வரமாகத் தந்து அருள் புரியுங்கள்!

ஸ்வாமி! இதனைக் கோரியே,

எங்கள் சிரம் தாழ்த்திய வந்தனங்களை தங்களது பொற்கமல பாதங்களில் மீண்டும் மீண்டும் சமர்ப்பித்து வேண்டிக்கொள்கிறோம்!

~ பக்தர்கள் ~





ஆசிரம மிருதங்க வகுப்பினை வித்துவான் சேயோன் நடத்துகின்றார்கள்

# ஆத்ம சொரூபம்

"உயிர் அனைத்திடத்தும் வெறுப்பின்றி நட்பும் கருணையும் உடையனவாய் மமகாரம் அகங்காரம் அற்று இன்ப துன்பங்களைச் சமமாய்க் கருதிப் பொறுமை படைத்து எப்பொழுதும் சந்தோஷமாய் இருப்பவன் யோகியாய், தன்னடக்கம் உடையவனாய் திட நிச்சயம் உள்ளவனாய் என்னிடத்து மனம் புத்தியைச் சமர்ப்பித்தவனாய் யார் என் பக்தனாகின்றானோ அவன் எனக்குப் பிரியமானவன்" ~ கீதை

தடாகம் ஒன்றின் அடிமட்டும் கண்ணுக்குத் தென்படுவதில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் உள. தடாகத்திலுள்ள நீரின் மேற்பரப்பில் அலைகள் வீசிக்கொண்டிருக்கின்றன. மேற்பரப்பில் அலைகள் கிளம்பிக்கொண்டிருக்கின்ற பொழுது நீரின் அடிப்பகுதி காட்சிக்கு எட்டுவதில்லை. அலைகள் எல்லாம் ஒடுங்கி நீர்ப்பரப்பானது அமைதியுற்றிருக்கிற பொழுது, அதன் அடிப்பகுதியைக் காணமுடியும். கீழ்ப்பகுதி தென்படாததற்கு இரண்டாவது காரணமாக இருப்பது நீரில் படிந்துள்ள சேறு முதலிய அழுக்கு. சேறு படிந்த நீருள் கீழ்ப்பகுதி சிறிதேனும் தென்படாது. சேற்று நீர் ஓர் அங்குலம் இருந்தாலும் அடி மட்டம் தெரியாது. அது மறைத்துவிடும். தடாகத்தின் அடிமட்டம் நன்கு காட்சிக்கு வருவதற்கு நீர் முற்றிலும் தெளிந்ததாக இருக்கவேண்டும். அது சலனமற்றுத் தேங்கியிருக்க வேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளும் நிறைவேற்றப்படுமிடத்துத் தடாகத்தின் அடிப்பகுதியைக் காண நமக்கு இயலும். இத் தடாகத்தோடு நமது சொரூபத்தை ஒப்பிடலாம். தடாகத்தின் அடிமட்டத்திற்கு ஒப்பானது நமது ஆத்ம சொரூபம். அதுதான் நமது நிஜ சொரூபமாகிறது. தடாகத்தில் உள்ள நீருக்கு ஒப்பாகின்றது நமது சித்தம் அல்லது அந்தக்கரணம். நீரில் அலைகள் இருப்பது போன்று சித்தத்தில் விருத்திகள் இருக்கின்றன. அலைகள் ஒடுங்குமிடத்து தடாகத்தின் அடிப்பகுதியைக் காண்பது போன்று, விருத்திகள் ஒடுங்குமிடத்து நமது ஆத்ம சொரூபத்தை நாம் தரிசிக்க முடியும்.

சு. செல்வராசா (G.S.)
ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரம செயலாளர்

## குருநாதர்

தங்கத்தை விலைக்கு வாங்கலாம், வைரத்தை விலைக்கு வாங்கலாம், துணிகள் வாங்கலாம், நிலம் வாங்கலாம், பங்களா வாங்கலாம், கார் வாங்கலாம், ஞானத்தை எங்கேயாவது விலைக்கு வாங்க முடியுமா? ஞானச் ஷாப் (shop) என்று ஒன்று இருக்கிறதா? ஐந்து கண்டத்திலே எங்கேயாவது ஞானம் விற்கிறதா? அந்த ஞானத்தைக் கொடுப்பவர் குருநாதர்.



# கண்ணன் அருளிய பகவத் கீதையிலிருந்து ஒரு பகுதி - I

ஜீவாத்மா :

பரமாத்மாவே இயற்கை, ஆன்மா, உடல், உயிர், அறிவு அறியப்படும் பொருள் ஆகியவற்றை நான் அறிய விரும்புகின்றேன்.

பரமாத்மா :

இந்தத் தேகத்தை ஞானிகள் க்ஷேத்ரம் என்பார்கள். இந்த க்ஷேத்ரம் தன்னுடையது என்றறிந்தபடி இயங்கிக் கொண்டிருக்கிறதே உயிர் அதையே க்ஷேத்ரக்ஞன் என்பார்கள்.

(உள்ளே இருக்கும் உயிர், தான் எந்த உடலில் இருக்கிறதோ அந்த உடலைத் தன் இருப்பிடமாகக் கருதுகின்றது. ஆகவே க்ஷேத்ரம், க்ஷேத்ரக்ஞன் என்ற வார்த்தைகளுக்கு உடல், உயிர் என்ற வார்த்தைகளையே பயன்படுத்துவோம்.)

அத்தனை உடலிலும் சத்தியமாக நிற்கும் உயிர் நானே. அந்த உடலையும் உயிரையும் உள்ளபடி அறியும் அறிவிற்கே "ஞானம்" என்று பெயர். அந்த ஞானமே என் உபதேசம். உடல் என்பது என்ன? அது எப்படிப்பட்டது? எவ்வெப்போது எப்படிப்பட்ட மாறுதல்களை அடையக் கூடியது? அந்த உயிர் எது? அதன் மகிமை என்ன? அனைத்தையும் சுருக்கமாகச் சொல்கிறேன் கேள்.

வேத முனிவர்களால் உடல், உயிர்த் தத்துவம் பலவகையாக விவரிக்கப்பட்டிருக்கிறது. வேதங்கள் பலவற்றிலும் அது அறுதியிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றது. யூகம் நிறைந்த–ஆனால் நம்பக்கூடிய நல்ல ஞானத்தைத் தரக்கூடிய, பிரம்ம சூத்திரங்களிலும் நன்கு விவரிக்கப்பட்டுள்ளது. உடல் உணர்ச்சி, காமம், நான் என்னும் ஆணவம், மெய் வாய் கண் மூக்கு செவி இவை தேடும் சுகம், உணர்ச்சிக் கொந்தளிப்பு, ஆரவாரம், உள்ளத்தின் துடிப்பு இவையே உடலும் அதன் விகாரங்களும். ஆணவமின்மை, ஆரவாரமின்மை, அகிம்சை, பொறுமை, நேர்மை, குருவைப் பணிதல், தூய்மை, உறுதியாக நிற்கும் நிலை, மனதைக் கட்டுதல், உடம்பு துள்ளிவிழும் ஆசைகளில் பற்றுவைக்காதிருத்தல், அகங்காரம் இல்லாதிருத்தல், பிறப்பு, இறப்பு, மூப்பு, வியாதி, துக்கம் இவற்றின் தீமையைக் கண்டு தெளிதல்.

தாமரை இலைத் தண்ணீர் போல் பற்றற்றிருத்தல், என் மகன்–என் மனைவி–என் வீடு என்று ஒட்டிக்கொள்ளாமல் தனித்திருத்தல், வரவைக்கண்டு மகிழாமல், போவதைக்கண்டு கலங்காமல் சமநிலையில் இருத்தல், என்னையே சரணடையும் இணையற்ற பக்தி தனிமை கண்டதுண்டு. அதிலே சாரமிருக்குதம்மா என்று தனியாக இருத்தல் சந்தை நெரிசல் போல் கூடும் ஜனக் கூட்டத்தில் வெறுப்பு. ஆன்மாவைப் பற்றிய அறிவில் நிலை பெற்றிருத்தல், தத்துவ ஞானத்தைப் பயன்படுத்துவது பற்றிய சிந்தனை, இவையெல்லாம் ஞானம் என்று

சொல்லப்படுகின்றன. அவற்றுக்கு மாறுபட்டவையெல்லாம் அஞ்ஞானம். இன்னும் நீ அறிய வேண்டியது ஒன்றுண்டு அது என்னதெரியுமா? அதை அறிந்தவனுக்கு தேவாமிர்தமே கிடைக்கும். அது தான் எல்லையற்ற பரம் பொருள். அதை உண்டு என்று கூறமுடியாது. (கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்)

அந்த இயற்கையின் கைகள், கால்கள், கண்கள், முகங்கள், காதுகள் தூணிலும் உள்ளன ~ துரும்பிலும் உள்ளன. அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்ப் பரவி நிற்பது அதுவே. கை இல்லாமலே தொடக்கூடியது; கண் இல்லாமலேயே பார்க்கக் கூடியது; காதில்லாமலேயே கேட்கக் கூடியது தம்மைத் தாங்குவோர் இல்லாதது. ஆனால் அனைத்தையும் தாங்குவது. குணங்கள் இல்லாமலே குணங்களை அனுபவிப்பதும், காணும் பொருள்களிலெல்லாம அது உள்ளேயும் வெளியேயும் இருக்கிறது. அசையும் பொருளும் அதுவே ~ அசையாப் பொருளும் அதுவே. அது கடுகுக்குள் கடுகு ~ அணுவுக்குள் அணு. ஆகவே அறிய முடியாதது. அது எட்ட முடியாத தூரத்திலும் இருக்கிறது. கட்டிப் பிடிக்கும்படி பக்கத்திலும் இருக்கிறது.

அறியப்படவேண்டிய அந்த இயற்கை எங்கேயும் பிரிந்து நிற்கவில்லை. ஆனால் பிரிந்து நிற்பது போலவும் தெரிகிறது. அது பொருள்களைத் தாங்குகின்றது. பொருட்களை விழுங்குகின்றது. விழுங்கும் பொருட்களையே மறுபடியும் தோற்றுவிக்கின்றது. ஒளியுடைய பொருள்களுக்கெல்லாம் அதுதான் ஒளி. அது இருளைக் கடந்து மயக்கம் தெளிந்தது. அதன் பெயர் அறிவு. அதுதான் அறியத்தக்கது. தெளிந்த ஞானத்தால் அடையக்கூடியது அதுவே. அனைவர் மனத்திலும் அதற்கோர் இடமுண்டு. அறிவு எது? அறிய வேண்டியது எது? என்பவற்றை சுருக்கமாகச் சொன்னேன். என்னுடைய உண்மையான பக்தன் இதைக் கேட்க வேண்டியவனல்ல. பிறருக்கு உபதேசம் செய்யக் கூடிய தகுதியையே பெற்றவன்.

இயற்கைக்கும் தொடக்கமில்லை. ஆன்மாவுக்கும் தொடக்கமில்லை. ஆனால் பலவகையான குணக்கேடுகளும் ஆசாபாசங்களும் மனோ விகாரங்களும் இயற்கையில் இருந்து எழுவனவே. உடம்பு என்னும் மேடையில், புலன்கள் என்னும் இயந்திரங்களை இயக்குவது இயற்கையே. சுகத்தையும் துக்கத்தையும் அனுபவிப்பதற்கு மட்டும் ஆத்மா காரணமாகிறது. ஆத்மா இயற்கையில் கலந்து, அதன் நன்மை தீமைகளை அனுபவிக்கிறது. அந்த ஆத்மா மறு பிறப்பில் நல்ல பிறப்போ கெட்ட பிறப்போ எடுப்பதற்குக் காரணம் எதிலும் ஆசை வைப்பதே. தேகத்தில் ஆத்மா இருக்கிறது. சமயத்தில் அது உயர்ந்தும் நிற்கிறது. அந்த உயர்ந்த ஆத்மாவைப் பக்கத்தில் நின்று பார்ப்பவனை, அனுமதியளிப்பவனை, தாங்குகின்றவனை, ஆட்சி செய்பவனைத்தான் பரமாத்மா என்கிறார்கள்.

ஒருவன் ஆத்மாவைப் புரிந்துகொள்ள வேண்டும். இயற்கையைப் பற்றித் தெளிவு பெற வேண்டும். பலவகையான குணங்களையும் எடைபோட்டு முடிவு செய்யவேண்டும். அப்படி முடிவு செய்பவன் எந்தக் காரணத்தைக் கொண்டும் மறுபடி பிறப்பதில்லை. உடல் வேறு, மனம் வேறு, ஆத்மா வேறு. சிலர் தியானம் செய்து செய்து பக்குவப்பட்ட மனத்தால் ஆத்மாவை நேரில் பார்க்கிறார்கள். மற்றும் சிலர் தத்துவ அறிவாலும், சிலர் காரிய சிந்தனையாலும் ஆத்மாவைப் பார்க்கிறார்கள். வேறு சிலரோ இது புரியாமல் யாரோ சொல்லக்கேட்டு அதன்படி ஆத்மாவைத் தேடுகிறார்கள். அந்தக் கேள்விஞானத்தைப் பெரிதாக மதிப்பவர்களும் பிறப்பு இறப்பற்ற

நிலையை அடைகிறார்கள்.

அசையும் பொருளோ, அசையாப் பொருளோ எந்தவகையில் எந்த ஓர் உயிர் உண்டானாலும் அது உடலும் உயிரும் சேர்ந்ததால் பிறந்ததென்று அறியவேண்டும்.

தோன்றும் பொருள்களில் ஊன்றி நிலைத்து எல்லாம் சமமென இயங்குவான் இறைவன். அழியும் பொருட்களில் அழியாதவன் அவன். அவனைக் காண்பவனே அறிஞன் ~ மேதை.

பார்க்குமிடந்தோறும் நீக்கமற நிறைந்திருக்கும் பரமேஸ்வரனைக் கண்டவன் தன்னைத்தானே வருத்திக்கொள்ள மாட்டான். அதனால் உயர்ந்த நிலையை அடைவான்.

இயற்கைதான் அனைத்தையும் செய்கிறது. ஆத்மா அதற்குக் காரணமன்று என்று எவன் கண்டுகொள்கின்றானோ அவனே பேரறிஞன்.

ஒரு இடத்திலேயே எல்லாம் அடங்கி இருக்கின்றன. அந்த இடத்திலிருந்தே யாவும் புறப்படுகின்றன. அதனிலிருந்தே பலவகையாக விரிவடைகின்றன. இதை ஒருவன் எப்பொழுது அறிகிறானோ ~ அப்பொழுது அவன் அனைத்தையும் கடந்த நிலையை அடைகிறான்.

பரமாத்மா என்பது ஆரம்பமோ முடிவோ இல்லாதது. தனக்கென்று சொந்தக் குணங்கள் இல்லாதது. ஆகவே அழிவில்லாதது. உடலுக்குள்ளேயே இந்தப் பரமாத்மா இருந்தாலும், அது எதையும் செய்வதும் இல்லை ~ எதிலும் பற்று வைப்பதும் இல்லை.

ஆகாயம் என்பது என்ன? அது எதிலே ஒட்டிக்கொண்டிருக்கிறது? ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட ஒரு கலவை அந்த ஆகாயம். அதுபோலத்தான் ஆத்மாவும். அது எந்தத் தேகத்தில் இருந்தாலும் தேகத்தோடு ஒட்டுவதில்லை.

ஒரே சூரியன் உலகம் முழுமைக்கும் ஒளி தருகிறான். அது போலவே ஆத்மா தேகத்தை ஒளி பெறச் செய்கிறான்.

எவன் ஒருவன் ஞானக் கண்ணால் க்ஷேத்ரம் (உடம்பு), க்ஷேத்ரக்ஞன் (உயிர்) இவற்றிற் கிடையிலுள்ள வேறுபாட்டை அறிகின்றானோ, அவன் பூதப் பிரகிருதியினின்றும் அதாவது பொருள்களில் இருந்தும் இயற்கையினின்றும் விடுதலை பெற்றுப் பரம கதியை அடைகின்றான்.

## கண்ணன் அருளிய பகவத் கீதையிலிருந்து ஒரு பகுதி - II

பரமாத்மாவின் கூற்று...

எவனொருவன் லாப, நோக்கமில்லாமல் செய்ய வேண்டிய காரியங்களை ஒழுங்காகச் செய்கிறானோ, அவனே கர்மயோகி : ஞானயோகி உணவுக்காக நெருப்பு எரிக்காததாலோ, காரியங்களைத் துறந்து விட்டதாலோ, ஞானியாக மாட்டான்.

துறவு என்று எதைச் சொல்லுகிறார்களோ அதன் பெயர் தான் யோகம். அதைக் கொண்டவனே யோகி. காரியம் செய்தால் லாபம் வருமே என்ற எண்ணத்தைத் துறக்காதவன் யோகியாக மாட்டான்.

முற்றும் தேய்ந்த யோகியாக முன்னேற விரும்பும் முனிவனுக்கு காரியம் செய்வது நல்ல வழியாகும். அவன் யோகியானபின் அமைதியடைவதே நல்ல வழியாகும்.



குருபீட முதல்வருடன் சகோதரிகளும் ஸ்ரீமத்சுப்பிரமணியசுவாமிகளும்



யாழ்ப்பாணம் வேதாந்தமட குருபீடமுதல்வர்
ஸ்ரீமத் சுவாமிகள் ஆசியுரை வழங்குகின்றார்கள்

உணர்ச்சியைக் கிளப்பும் புலன்கள் விஷயத்திலும் காரியங்களிலும் பற்றில்லாமல், எல்லா நிலைகளையும் துறந்தவனே யோகி என்று கூறப்படுகிறான்.

முள்ளை முள்ளாலேயும் எடுக்கலாம். நாம் எடுக்கப் பயன்படுத்துகிற முள்ளே இன்னொரு முள்ளாகவும் ஆகிவிடலாம். அதுபோல் ஆத்மாவே ஆத்மாவுக்கு நண்பன். ஆத்மாவே ஆத்மாவுக்குப் பகைவன். எச்சரிக்கையாக நடந்து ஆத்மாவை ஆத்மாவினாலே உயர்த்த வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் அதைக் கீழ் நோக்கிச் செல்ல விடக்கூடாது. ஆத்மா என்பது எதிலும் பற்று வைக்காத உள்ளம். இப்படித் தன் சக்தியாலேயே தன்னை வசப்படுத்தியவனுக்கு அவனே உறவினன். அப்படி வசப்படுத்தாதவன் தனக்குத் தானே விரோதி.

நெருப்பிலே குளித்தால் சுடக்கூடாது. தண்ணீரில் குளித்தால் குளிரக்கூடாது. இரண்டிலும் ஒரே உணர்ச்சி தோன்றுவதே சமநிலை. இந்தச் சமநிலையில் தன்னைத் தானே கட்டுப்படுத்தி அமைதியாக இருப்பவன் ஜீவாத்மா. வடிவத்தில் பரமாத்வாக இருப்பவன் சாஸ்திர ஞானத்தாலும் அனுபவ ஞானத்தாலும் மனம் அமைதியடைய பெற்றவனும் எதற்கும் அசைந்து கொடுக்காதவனும் மெய், வாய், கண், நாசி, செவி ஐந்தையும் வென்றவனும் ~ மண், கல் பொன் மூன்றையும் ஒரே விதமாக மதிப்பவனும் ~ யோகிகளுக்கெல்லாம் யோகியாகின்றான். கைம்மாறு எதிர்பராமல் அன்பு வைப்பவர்கள், நண்பர்கள், பகைவர்கள் தன்னை அலட்சியப்படுத்துபவர்கள், நடுநிலையில் இருப்பவர்கள், தன்னை வெறுப்பவர்கள், உறவினர்கள், சாதுக்கள், பாவிகள் இவர்கள் அனைவரிடமும் ஒரேமாதிரி நடந்து கொள்பவன் உன்னதமானவன்.

ஆசையை விட்டவன் யோகி; சொத்துக்களை துறந்தவன் யோகி, மனவெறியை அடக்கியவன் யோகி, தனிமையில் இனிமை காண்பவன் யோகி, இவன் ஆத்மாவையே யோகாத்மா ஆக்கிவிடுகிறான். ஒரு சுத்தமான இடம் ~ அதில் ஆடாத அசையாத ஒரு ஆசனம் அந்த ஆசனம் அதிக உயரமாக இருக்கக்கூடாது ~ அதிகம் தாழ்வாகவும் இருக்கக் கூடாது. அதன் மீது முதலில் தர்ப்பையைப் பரப்ப வேண்டும். அதன் மேல் மான்தோலை விரிக்கவேண்டும். பிறகு அதில் அமர்ந்து மனத்தை ஒருநிலைப் படுத்தி உடலையும் மனத்தையும் அடக்கி யோகம் பயில வேண்டும்.

அதில் அமரும் போது உடல், தலை, கழுத்து இவை மூன்றும் நேராகவும் அசையாமலும் நிலையாகவும் இருக்க வேண்டும். கண்கள் எட்டுத் திசையையும் பார்க்கக் கூடாது இரண்டு கண்களும் இரண்டு புருவங்கள் சந்திக்கின்ற மூக்கின் மேற்பகுதியைப் பார்க்க வேண்டும். மனம் சலனமே இல்லாமல் அமைதியாக இருக்க வேண்டும். எந்தப் பயமும் இருக்கக் கூடாது. பிரமச்சரிய விரதம் பூண்டிருக்க வேண்டும். மனத்தை என்னிடமே செலுத்த வேண்டும். என்னையே கொள்கையாகக் கொண்டு அமர வேண்டும்.

இப்படி மனத்தைக் கட்டுப்படுத்தி யோகத்தில் இருக்கும் யோகி என்னிடம் உள்ளதும் சுகத்தையே முடிவாகக் கொண்டதுமான அமைதியை அடைகின்றான். வயிறு வீங்கச் சாப்பிடுகிறவனுக்கும் யோகம் கிடைக்காது. காலவரையின்றிப் பட்டினி கிடப்பவனுக்கும் யோகம் வராது. கால காலங்களுக்கும் தூங்கிறவனுக்கும் யோகம் கிட்டாது. விடிய விழித்துக் கொண்டியிருப்பவனுக்கும் யோகம் கிட்டாது. விடிய விடிய விழித்துக் கொண்டிருபவனுக்கும் யோகம் கிட்டாது.

சாப்பிடுவதில் ஒரு அளவு, நடமாட்டத்தில்

ஒரு அளவு, காரியங்களில் ஓர் அளவு, தூக்கத்தில் ஒரு அளவு, விழித்திருப்பதில் ஒரு அளவு~ இதுவே ஒருவகை யோகம். இதுவே துன்பம் இல்லாமலிருக்க வழி. எப்போது மனம் கேணியில் இருக்கும் தண்ணீர் போல் உள்ளுக்குள்ளேயே நிலைத்திருக்கிறதோ, எப்போது ஆசைப்பட வேண்டிய விஷயங்களில் வெறுப்பு உண்டாகிறதோ, அப்போதுதான் யோகம் வருகிறது; அப்போதுதான் அவன் யோகியாகிறான்.

காற்றில்லாத இடத்தில் மூடியில்லாத ஒருவிளக்கை வைத்தால் அதில் எரியும் நெருப்பு கைகூப்பிய நிலையில் இருக்கும். அசையவே அசையாது. அது போலத்தான் சித்தத்தை அடக்கி யோகப் பயிற்சி பெறுவதும். யோகப் பயிற்சியினால் அடக்கப்பட்ட மனம் எதை நாடுகிறதோ ~ எந்த நிலையில் தன்னைத்தானே கண்டு மகிழ்ச்சியடைகிறதோ ~ அந்த நிலையும், சுகம் என்பது உடலால் அறிவது அல்ல, அறிவால் அறிவது என்று கண்டு அதில் லயித்து அசையாமல் இருக்கும் நிலையும், இதற்கு மேல் லாபம் இல்லை என்று கருதும் நிலையும்தான். இன்பயோகம் ப்ரம்மானந்த யோகம் எனப்படும். மனக்குழப்பம் இல்லாமல் உறுதியாக அந்த யோகத்தைப் பயில வேண்டும்.

மனக்கிளர்ச்சியால் உண்டாகும் ஆசைகளை அறவே ஒழித்துக் கண் பார்க்க முயன்றாலும், நாசி நுகர முயன்றாலும் காது கேட்க முயன்றாலும் உடம்பு அனுபவிக்க முயன்றாலும் அத்தனையையும் மனத்தாலே கட்டுப்படுத்தித் தைரியமாகப் புத்திசாலித்தனமாக மெல்ல மெல்ல அடக்க வேண்டும். மனம் ஆத்மாவில் நிற்க வேண்டுமே தவிர, வேறொன்றிலேயும் நிற்கக் கூடாது. மன்ம் ஆறாக ஓடினால் அதற்கு அணைபோட வேண்டும் அணைக்கு அடங்குகின்ற ஆறு போன்றதே ஆத்மாவுக்கு அடங்குகின்ற நினைவு. மன அமைதி பெற்ற, ஆசைக் குணம் நீங்கிய, ஈஸ்வர நிலை எய்திய, களங்கம் இல்லாத இந்த யோகிக்குத்தான் கலப்படம் இல்லாத சுகம் கிடைக்கின்றது.

இந்த யோகத்தை எய்தியவன் ஈஸ்வரனோடு நெருங்கிய தொடர்பு கொண்ட அளவற்ற சுகத்தை எந்தத்தொல்லையும் இல்லாமல் அனுபவிக்கிறான். இந்தத் தியான யோகத்தில் நிலைத்தவன் எல்லா உயிர்களிலும் தன்னைக் காண்பான். பட்டமரமும் பச்சை மரமும் அவனுக்கு ஒன்றே. அங்கிங்கெனாதபடி எங்கும் என்னைக் காணபவன், எல்லாமே என்னிடம் இருப்பதைக் காண்பவன் எவனோ அவன் கண்களுக்கு நான் காட்சிதருவேன். அதுமட்டுமல்ல அவனை நானும் கண்டுகொள்வேன்.

பசுவைத் தொழுதாலும், பாலைத் தொழுதாலும், மரத்தைத் தொழுதாலும், மலரைத் தொழுதாலும் எங்கும் எல்லா உயிர்களிலும் உள்ள என்னைத் தொழுதாலும், அந்த யோகி எப்போதும் என்பக்கமே இருக்கிறான். சுகமோ துக்கமோ எது வந்தாலும் தன்னைப் போலவே பிற உயிரையும் எண்ணும் யோகி உன்னதமானவன்.

ஜீவாத்மா மனம் எப்போதுமே அங்கும் இங்கும் ஓடுவது. அதனால் நீ சமநிலை என்கிறாயே. அந்தச்சம நிலையை அடைவதிலோ, தியான யோகம் நடத்துவதிலோ, அது நிலையாக நிற்காதென்றே நான் நினைக்கிறேன். மனம் சஞ்சலம் மிக்கது. சபலம் மிக்கது. சலனம் மிக்கது. குழப்பத்திற்குக் காரணமே அதுதான். இந்த மனம் எதற்கும் அடங்காத குரங்கு. காற்றை எப்படி அடக்க முடியாதோ அப்படியே மனத்தையும் அடக்க முடியாது என்பதே என் எண்ணம்.

பரமாத்மா : நீ சொல்வது உண்மைதான் மனம் ஒரு குரங்கு தான். சஞ்சலம் மிக்கது தான். ஆனால் இடைவிடாத பயிற்சியினாலும், வைராக்கியத்தினாலும் அதை இழுத்து நிறுத்தி விடலாம். எவனால் மனத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லையோ, அவனுக்கு எதுவுமே கிடைக்காது எவன் மனத்தை ஒழுங்கு படுத்தி ஜாக்கிரதையாக முயற்சி செய்கிறானோ, அவனுக்கு எல்லா யோகமும் கிட்டும்.

ஜீவாத்மா : நல்லது ஒருவன் மிகவும் அக்கறையோடு யோகத்தில் இறங்குகிறான். எவ்வளவோ முயற்சி செய்கிறான். ஆனால் அந்த முயற்சி போதவில்லை. அதனால் யோகத்தை விட்டு மனம் நழுவி விட்டது. அவன் யோகத்தில் பயனை அடையவில்லை அப்படிபட்டவன் என்ன கதியடைவான் அவன் விவேகமற்றவனாக ஆகி ஈஸ்வரனை அடையும் வழியை அறியாமல் காரியம் செய்வதில் இருந்தும், யோக மார்க்கத்தில் இருந்தும் நழுவித் துண்டு துண்டாகச் சிதறிய மேகம் போல், அழிந்து விடுவான். என்னடா இவன் இப்படி ஒரு சந்தேகத்தைக் கிளப்புகிறானே என்று எண்ணாதே. இதை முழுக்க முழுக்கத் தீர்ப்பவன் உலகத்தில் உன்னைத் தவிர வேறொருவனும் இல்லையல்லவா!

பரமாத்மா : உன் சந்தேகம் நியாயமே. ஆனால் ஒன்று அப்படி ஒருவன் முயற்சி செய்தாலே போதும். இந்த உலகத்திலும், மேலுலகத்திலும் அவனுக்கு அழிவே கிடையாது. நல்லதைச்செய்ய முயன்றவன் அதில் வெற்றி பெறா விட்டாலும் கூட அப்படிச் செய்யமுயன்ற காரணத்தால் நல்ல கதியே அடைவான். அப்படி யோகம் செய்ய முயன்று தோற்றவன், புண்ணியவான்கள் அடையக்கூடிய சொர்க்க போகங்களை அனுபவித்து இறந்த பிறகு, உத்தமமான வசதியுள்ள குலத்தில் மறுபடி பிறப்பான். அல்லது அறிவாளிகள் நிறைந்த குலத்தில் பிறப்பான். அந்தக் குலத்தில் அதற்கு முன் ஞானிகளும் யோகிகளும் மட்டுமே பிறந்திருப்பார்கள். இத்தகைய பிறப்பு யாருக்குமே கிடைக்க முடியாத பிறப்பாகும். அந்தப் பிறப்பில் அவன் பூர்வ ஜென்மத்தில் இருந்த அதே உணர்ச்சியைப் பெறுகின்றான். அதாவது யோகம் செய்ய வேண்டும் என்கிற உணர்ச்சியை. எனவே உடனே முயற்சி செய்கிறான்.

அவன் பூர்வ ஜென்மத்தில் அடைந்த யோகப்பயிற்சியால் தன்னையறியாமலேயே அந்தப் பக்கம் இழுத்துச்செல்லப்படுகிறான். (ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் வல்லவராக இருப்பது பூர்வ ஜென்மத்தில் விட்டகுறை தொட்டகுறைதானே) யோகத்தை அறிய வேண்டும் என்ற உணர்ச்சி வந்து விட்டாலே அவன் ஒலி உலகத்தைக் கடந்துவிடுகிறான். பல ஜென்மங்களில் விடாது முயற்சி செய்த ஒருவன் களங்கங்களெல்லாம் தீர்க்கப்பட்டு ஒரு ஜென்மத்தில் - யோக சித்தியைப் பெற்று அதன் மூலமாக நல்ல கதியை அடைகிறான்.

பல்லாண்டு காலம் தவம் செய்யும் முனிவர்களைக் காட்டிலும் யோகி உயர்ந்தவன். ஞானிகளைக் காட்டிலும் யோகி உயர்ந்தவர். கடமை செய்பவர்களைக் காட்டிலும் யோகி உயர்ந்தவன்.ஆகவே நீயும் யோகி ஆவாயாக! யோகி, யோகி என்கிறாயே எவன் அந்த யோகி என்று கேட்கிறாயா என்னையே நம்பி, என்னையே நெருங்கி, என்னையே சார்ந்து, என்னைத் தொழுகின்றவனே எல்லா யோகிகளிலும் சிறந்த யோகி. இது என்னுடைய முடிவு.

சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையார்
ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம்
கைதடி

# தியானம்

நாம் இவ்வுலகில் வாழ்கின்றோம். இவ்வுலகிற்கு எப்படி வந்தோம், எப்படி உடம்பை விட்டு உயிர் பிரிகின்றது, பிரிந்தபின் எமது நிலையென்னவென்பது எம்மால் அறிய முடியவில்லை. எம்மைப்போல் பிறவுயிர்களும் பிறந்து வாழ்ந்து போகின்றன. இந்நிகழ்வுகளுக்கு மூலகாரணமான பொருளொன்று இருப்பதை நாம் ஏற்கவேண்டும். அந்த மூலமே இறைவனாகும்.

எம்மையெல்லாம் படைப்பது, காப்பது, அழிப்பது இறைவன். எமது பூர்வபுண்ணிய பலனே, பூவுலகில் நாம் செய்யும் செயலாகும். இறைவனை அறியாவண்ணம் உயிர்களை ஆணவமலம் மறைக்கின்றது. இம் மறைப்பை நீக்கி, உயிர்கள் வாழும்பொருட்டுத் தனு, கரண, புவன, போகங்களால் அறிந்து, மன மொழி மெய்களால் வழிபட்டு, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படிகளிலே முறை தவறாமல் நின்று ஒழுகுவோமானால், இறைவன் குருவடிவமாக வந்து மெய்யுணர்த்தி எம்மை முக்தியடையச் செய்வார். இதற்கு எடுத்துக்காட்டாகச் எம் சமயத்தில் விளங்குபவர்கள் காலத்துக்குக் காலம் தோன்றி மறையும் அனுபூதிமான்களாவார். இந்த வகையில் சுவாமி ஸ்ரீ சச்சிதானந்தரையும் நாம் வைத்துக் கொள்ளலாம்.

எனவே எமது வாழ்நாளில் புறவாழ்வோடு மட்டுமிருக்காது, அக வாழ்வைப் பற்றியும் சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது. இறைவனை வணங்குவதற்காகவே ஆலயங்கள் எழுந்துள்ளன. ஆலயங்களிலே இறைபணி நிறைய இருக்கின்றன. எப்பணியைச் செய்யும்போதும் இறைவன் நினைப்புடனே செய்யவேண்டும். இங்கு நடைபெறும் நிகழ்வுகள் எல்லாம் எமக்காகவே நடைபெறுகின்றன. இறைவனின் பேரானந்த நாமங்கள், மந்திரங்கள் எல்லாம் உச்சரிக்கும் போது, அந்த நேரத்தில் மனதைச் செம்மையாக வைத்து இறைவன் நாமங்களை நாமும் சிந்தித்து இறை சிந்தையுடன் இருக்கவேண்டும். அப்படி நாம் செய்யாது மனமெங்கோ செல்கின்றது. ஐம்புலன்களும் ஏதேதோ செய்கின்றன. அங்கே சுவாமிகளுக்கு ஏதோ நடைபெறுகின்றதென்ற நிலையில் சிந்தித்துக் கொண்டிருக்க மணி கேட்கின்றது. நாதசுரம் வலுவாக ஊதப்படுகின்றது. கற்பூர ஆராதனை நடைபெறப்போகின்றது என்று அப்போ மட்டும் "அரோகரா" என்று சொல்லிவிட்டு இருக்கின்றோம். அப்படி நாம் இருக்கக்கூடாது. இறைவனைப் பொறிபுலன் அடக்கி அன்போடு வணங்குவோமானால் பேரன்புடைய பக்திமார்க்கம் கைகூடும். சரியை, கிரியை மார்க்கங்கள் மிக ஆணித்தரமாகக் கூறுகின்றன. இப்படி நாம் வணங்குவோமானால் திருவருளினாலே ஆணவமலம் எம்மை விட்டுச் சிறிது சிறிதாக அடங்கும். மனம் பொறிகளின் தடுமாற்றத்திலிருந்து விடுபட்டு ஒருமைப்படுகின்ற நிலையில் யோக மார்க்கம் கைகூடுகின்றது. ஐம்பொறிகளை அடக்கி, சுவாசத்தை நிலைப்படுத்தி, மனத்தை ஒருவழிப்படுத்தி, சோதிவடிவான சிவப்பிரகாசத்தைக் கண்டு பேரானந்தமடையலாம். இந்நிலையில்தான் ஆச்சிரமங்களும் அமைந்துள்ளன. எம்மையெல்லாம் வழிநடத்துகின்ற இறைவன் பரிபக்குவப்பட்ட உயிர்களிடத்தே மானிட வடிவத்திலே குருவடிவாக வந்து ஆட்கொண்டு மெய்யறிவை உணர்த்துகின்றார். குருவை அடைந்த குருபணி செய்வது எமது கர்ம யோக பலனாகும். இவர்களையே நாம் தொண்டர்கள்,

சுவாமிகள் என்கின்றோம். கண்ணன் சொன்னான் கீதையிலே "கடமையைச் செய்வாய் பாரினிலே" இவ்வாறான நடமாடும் கோயில்களை நாம் வணங்கும்போது அக்குருவின் அருட் பார்வையிலே எமது கர்மம் நீங்கி, மெய்யறிவான ஞான சக்திகளைப் பெறுகின்றோம். இவ்வகையான ஆத்ம ஈடேற்றத்திற்கே ஆசிரமங்களில் "தியான மண்டபங்கள்" அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நாமும் பயன்படுத்த வேண்டும். இருந்தும் நாம் அதனைப் பயன்படுத்தாவிட்டால் அது எமது கர்மமேயாகும். புற வாழ்க்கையில் நாம் வாழ்ந்து கொண்டிருந்தாலும், ஒருசில நேரமாவது எமது அகவாழ்விற்காகச் செலவு செய்யவேண்டும். தியான நிலையத்திலே இருந்து அந்தப் பரம்பொருளைத் தியானிக்குமிடத்துப் பேரானந்தப் பெருவாழ்வை பெறுகின்றோம்.

ஓம் தத் சத்

கு. கங்கைவேணியன்
(சைவ இந்து மகாசபை
நல்லூர், யாழ்ப்பாணம்)



## நன்மை பெற

நீ வயலில் எந்த விதையை விதைக்கின்றனையோ, அந்த விதைதான் விளைந்து உன் வீட்டிற்கு வரும். கம்பை விதைத்துவிட்டு, கோதுமையை எதிர்பார்க்கக்கூடாது. கருவேலை நட்டுவிட்டு சந்தன மரத்தைப்பெற முடியாது. அதுபோல நீ நன்மையே செய்தால் உனக்கு நன்மையே வரும். தீமையைச் செய்தால் தீமையை அநுபவிப்பாய்.

## குரு

சுவாமி சிவானந்த மகாராஜ் என்ற துறவியைத் தேடிவந்து சீடராவது உண்டு. அவர்தான் சிவானந்த ஆசிரமத்தை உருவாக்கியவர்.

ஒரு பணக்காரர் வந்து, " சுவாமி மகாராஜின் சீடனாக வேண்டும்!" தாம் பெரிய பணக்காரர் என்பது அவரது கர்வம். அது அவரின் உடையிலும் நடையிலும் நன்கு தெரிந்தது.

"சரி, அப்படியானால் அந்த டின்னை இவரிடம் கொடுங்கள்" என்றார் சுவாமி. அவரிடம் ஒரு காலி டப்பா கொடுக்கப்பட்டது. அவர் விழித்தார்.

"என்ன பார்க்கிறீர்கள், போய் நாலு இடம் சுற்றிப்பிச்சை எடுத்து மாவு கொண்டு வாருங்கள். அப்புறம் சப்பாத்தி பண்ணி எனக்கும் கொடுத்து நீங்களும் உண்ணலாம்," என்றார்.

அவர் அங்கேயே நின்றார். "ஆன்ம சாதனை என்றால் வேடிக்கையில்லை. அகங்காரம் இல்லாமல் பிச்சை வாங்கி, குருவிற்கும் கொடுத்துத் தானும் சாப்பிட வேண்டும்" என்றார். அப்புறம் அந்தப் பணக்காரரைக் காணவே காணோம்.

ஒருவர் வேகமாக வந்து சுவாமியை வணங்கினார். "என்ன?" என்றார் சுவாமி. "நீங்கள்தான் இன்று முதல் என் குரு!" என்றார் வந்தவர்.

"அப்படி ஒரு வேலை எனக்குப் போட்டுத் தந்ததற்கு மிக்க நன்றி"என்று ஆங்கிலத்தில் பளிச்சென்று சொன்னார் சுவாமி.

பிறகு வந்தவர் தெரிந்து கொண்டார். குருவே ஒருவனைத்தன் மாணாக்கனாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று.

# திருமூலர் பாடல்

அஞ்சு மடக்கடக்கென்பர் அறிவிலா
ரஞ்சு மடக்கு மமரரு மங்கில்லர்
மஞ்சு மடக்கில சேதனமா மென்றிட
டஞ்சு மடக்காவறிவறிந்தேனே.

உய்யவல்லார்கட்குயிர் சிவஞானமே
உய்ய வல்லார்கட்குயிர் சிவந்தெய்வமே
முய்யவல்லார்கட் கொடுக்கம் பிரணவ
முய்யவல்லாரறிவுள் அறிவாமே.

ஆயத்துநின்ற வறு சமயங்களுங்
காயத்துநின்ற கடவுளைக் காண்கிலர்
மாய்க்குழியில் விழுவர் மனை மக்கள்
பாசத்திலுற்றுப் பதைக்கின்றவாறே.

ஆறு சமயமும் கண்டவர் கண்டில
ராறு சமயப்பொருளுமவனல்லன்
றேறுமின் தேறித் தெளிமின் றெளிந்தபின்
மாறுதலின்றி மனை புகலாமே.

- திருமூலர் -

# தியான தீபம்

*முகவுரை*

ஞான அதிகாரியானவன் பிறவிப்பயனாகிய நோய், மூப்பு, சாக்காடு என்னும் துன்பங்களை வேறு எவ்வித உபாயத்தாலும் அத்தியந்த நிவர்த்தி செய்ய முடியாது என்பது உண்மை. இந்தத் துன்பத்தினின்றும் நீங்க இறைவழிபாடே முக்கிய கவசமாகின்றது. உதாரணமாக உடலில் ஏற்படக் கூடியவையே நோய், மூப்பு, சாக்காடு. எனவே உடல் வேறு; சீவனாகிய நான் வேறு; நான் சிவத்தின் ஆற்றலாகிய அறிவாகும். ஆகவே நான் அறிவே வடிவம். தேகமோ பஞ்சபூத முக்குண பஞ்சீகரித்தலால் தூல சரீரமானது. இதில் வரும் ஊறுகள் உடலையே தாக்குகின்றன. ஆனால் உடலை "நான்" என்று மருவி தாதாத்மியம் அடைவதால் அளவிடற்கரிய துன்பங்களை நாம் அடைய வேண்டியதாயிற்று. தேகம் நானல்ல, அறிவே நான். எனவே இந்த அறிவு சிவத்தினின்றும் பெறப்பெற்றது. ஆகவே சிவத் தியானத்தால் சிவத்தினருள் என்னும் ஞானம் எம்மைப் பாதுகாத்து உடற்பற்றையும், உலகம் பொய் என்ற உண்மையையும் அனுபவத்தில் உணர்வித்துப் பிரார்த்த கன்மம் ஒழியும்வரை உலக வாழ்வில் ஆங்கமல நீர்போல் ஒட்டாது வாழ்ந்து வீட்டுப் பேறடைய சிவத்தியானம் மிக மிக முக்கியம். இத்தியானம் எங்கே எப்படி ஆரம்பிப்பதென்பது கூறப்படுகின்றது.

சுத்தமான காற்றும், எவ்வித சத்தமும் பாதிக்காததும், எவரும் தொல்லை கொடுக்காததும், நறுமணம் சூழ்ந்ததுமான வீடு அல்லது தியானத்திற்கென்று அமைத்த மண்டபத்திலே மிக அமைதியோடு தியானிக்க வேண்டும். தியானம் செய்யுமிடத்தில் ஐந்து மடிப்போடுகூடிய வெண்துகில் விரித்து உட்கார்ந்து, இடதுகாலின் மேல் வலதுகாலை மடக்கி வைத்து, இரு கண்களும் மூக்கின் நுனியை பார்த்துக்கொண்டு தியானவஸ்து ஆகிய மூர்த்தியில் மனக்கருத்தை மந்திரத்தோடு நிலைநிறுத்த வேண்டும்.

*ரஸஸ் வாதம்*

நம் தியானத்தைக் கெடுக்க முன் அனுபவித்ததும் ~ அனுபவிக்க வேண்டியதுமான ஸ்மிருதி; தியானவஸ்துவையும், தியானிப்பவரையும் வேறுபடுத்தி இக விவகாரங்களை வருவித்து உபாசனையைக் கெடுக்கும். அப்போ தியான வஸ்துவை விடாது திருப்பி மனதை வஸ்துவில் நிலைநிறுத்திப் பழகவேண்டும். நாளடைவில் நிலைபெற்று மனம் எங்கும் பற்றிக்கொள்ளாத சௌவிகற்ப ~ நிர்விகற்ப சமாதிகளை மன ஒருமைப்பாட்டினால் பெறும்.

*தீபம்*

தீபமாகிய விளக்கு எப்படி இருளை நீக்கிப் பொருளை விளக்குமோ, அப்படியே அருளாகிய ஞானம் அஞ்ஞானம் என்னும் அறியாமையை நீக்கி முக்தி நல்கும்.

பெருமை பொருந்திய வேதங்களை எப்பொழுதும் அத்தியயனம் செய்யும் ஒருவன், என்றென்றும் செபம் செய்யும் தன்மையெனும் மிகுதியான செபங்களால் நிலைத்த மேலான செபவாசனையால் சித்த சுத்தி அடைகின்றான்.

உதாரணமாக உலக சிற்றின்ப வாசனையால் இடையறாது நினைவில் தோற்றுவது போல், வேத செப வாசனைகளும் நிலை கொண்டு நிற்பனவாகும். அத்திடத்தால் அதிகாரியின் உறக்கத்தில் விளங்குகின்ற சொற்பனத்தில்

அத்தியயனம் செய்தலும், செபம் செய்தல் போலவும் தியானம் செய்வோனாகிய உபாஷகன், தியான வாசனையின் திடத்தால் சொற்பனம் முதலியவற்றிலும் தியானம் செய்வான் என்பதாம்.

அநாயாசமாக எழுகின்ற விஷய சங்கர்ப்பங்களை பரித்தியாகம் செய்து இடைவிடாத தியானத்தால் உண்டாகின்ற சந்தோசத்தைப் புசிக்கின்றான்.

கனவாதியின் கண்ணும் தியானம் பிறக்கும். ஆனால் பிரார்த்த கன்ம வசத்தால் விஷயங்களை அனுபவிக்கும் சாதகர்களிற்கு இடைவிடாமல் தியானம் எப்படி சித்திக்குமென்று ஆசங்கித்துத் தியானத்தில் விருப்பம் மிகுதியாயிருப்பின், விவகாரங்கள் எவ்வளவு இருப்பினும் தியானம் சித்திக்குமெனக் கூறப்படுகிறது.

தன்னுடைய பிரார்த்த கன்மத்தின் பயனைப் புசிப்பவனாகினும் தியானத்தின் ஆசை மிகுதியாயின் எப்போதும் சித்தம் தியானம் செய்ய வல்லமையுடையதாம். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

<u>திருஷ்டாந்தம்</u>

கணவனையே தெய்வமெனக் கருத்தில் கொண்டு கடமையாற்றும் ஸ்திரீயானவள் தன் கடமைகளை எவ்வித துன்பமும் தாக்காது தன் கடமைகளை கணவனின் நினைவோடு செய்து முடிக்கின்றாள். ஆனால் கணவனின் அன்புக்குரிய ஆனந்தம் அற்பமேனும் சித்தத்தைவிட்டு நீங்குவதில்லை. தன் வீட்டின் காரியம் கணவனின் அன்பை தடைப்படுத்தாது என்பது பொருள்.

இந்த பிரகாரம் ஒப்பற்ற பிரம்ம தியானத்திலோ அல்லது மூர்த்தி தியானத்திலோ இருப்பவனும் சொற்பமாகவே உலகவிஷய போகங்களை அனுபவிப்பான்.

இந்தச் சகுணப்பிரம்மம் என்னும் மூர்த்தி வாசனை மேற்கூறப் பெற்ற இடையறாச் சித்த விருத்தியால் எவ்வித கருமங்களைச் செய்யினும் அக்கன்மங்கள் பந்தமென்னும் பற்றுக்கோட்டை அடையாவாம்.

மாறாக நிர்க்குண பிரம்ம தியானத்திற்கு நேர்வழியைத் தரும் என்பதாம். அப்போது குருவின் கடாட்சமும் கிட்டுகின்றது. சற்குருவின் கடாட்சத்தால் சாதன சதுட்டயங்களின் அனுஷ்டித்தலாகிய கிரமமும் ஏற்படுகின்றது.

சதுட்டயம் :-

1. நித்தியமெது அநித்தியமெதுவென்ற விசாரணை. இது நித்தியத்தில் நிலைபெறுகிறது.
2. இக முத்திரார்த்த பரபோக விகாரம்
3. சமாதி ஷட்க சம்பந்தி
4. முமுச்சுத்துவம்

1. உலகில் தோற்றுகின்ற சகல பொருட்களையும் நிலையுடையது எது, நிலையற்றவை எவை என விசாரணை செய்து முக்காலத்தும் நிலையுடைய வஸ்துவில் நிலைநிறுத்துவதை நித்திய அநித்திய விவேகம் என்பர்.

2. இகத்தின் விசாரணை, நித்திய நைமித்திய கன்மங்கள், பரத்தின் விசாரணை, வீட்டுப் பேற்றைப் பற்றிய விசாரம். இதை இக முத்திரார்த்த பரபோக விகாரம் என்பர்.

3. சமாதி ஷட்க சம்பந்தி : மனமானது சிவத்தினிடத்திலே நிலைபெற்று நிற்பதை சமாதி என்பர்.



சாவகச்சேரி சன்றைஸ் ரேடேஸ் அதிபர்
திரு த. குகனேசன் அவர்கள் சாவகச்சேரி முருகன்
அரிசி ஆலை அதிபர் திரு இ. கோபாலகிருஷ்ணன்
அவர்களுக்கு நூலை வழங்குகிறார்.



குலபதி ஆறுமுகம் கந்தையா J.P அவர்களின் சமூக, சமயப் பணிகளைப் பாராட்டி சர்வோதய இயக்கப் பிரமுகர் திரு க. திருநாவுக்கரசு அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்.





சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை ஆகிய ஆறும் ஷட்க சம்பந்தி என்பர். இவை குருமுகமாக அறியத்தக்கதாம்.

4. முமுச்சுத்வம் : மேற்கூறப்பட்ட சதுட்டயத்தில் நான்காவதான முமுச்சுத்வம், அம்மூன்றையும் அனுபவப்படுத்திய பின்பே ஏற்படுகின்றது.

நிர்க்குண பிரம்ம தியானத்தில் ஆனந்தம், பிரம்மம், விஞ்ஞானமும் ஆக சிவம் உடையது. மேலும் நித்திய, சுத்த, புத்த, சத்திய முத்தன், நிரஞ்சனன், விபு, அத்வையன், ஆனந்தன், பகன், பிரத்தியக்கு, ஏகரசன் ஆகியவை இலட்சணங்களாம்.

இந்த தியானத்தின் மகிமையாவது உலக விவகாரங்களைச் செய்கின்ற மக்களின் பலதரப்பட்ட சிந்தனைகளிலும் சகுணத் தியானம் மேலானதாம். உதாரணமாக; ஏடுகட்டாததும் ~ பாடசாலை செல்லாததுமான பாலர்களைக் காட்டிலும், ஏடுகட்டி பாடசாலை சென்ற மாணவர்கள் அதிகாரியாவார். எனவே சகுணப்பிரம்ம உபாசணை மிக மேலாம்.

அச்சகுணப்பிரம்ம உபாசணையிலும், நிர்க்குணப் பிரம்ம உபாசனை உயர்வாம். பின் உள்ளவைகளின் உயர்வில் காரணம் கூறப்படுகின்றது. எவ்வளவிற்கு எவ்வளவு நன்மையான சிவம் எனும் பிரம்ம சாத்க்ஷாத்காரத்திற்கு சமீபமாகுமோ, அவ்வளவிற்கவ்வளவு உயர்வு அதிகரிக்கும்.

எல்லாவற்றிலும் நிர்க்குணத் தியானம் உயர்வாம் என்பதில் காரணம் காட்டப்படுகின்றது. இடைவிடாமல் செய்கின்ற நிர்க்குணப் பிரம்மத்தின் தியானம் ஆனது மெள்ள மெள்ள சாட்க்ஷாத் பிரக்மஞானமாய் வருகின்றது. அதாவது சிவபூரணமாகி விடுகின்றது.

இவ்வாறாயின் மூர்த்தி தியானம் முதலியவற்றிற்கும், சித்தத்தின் ஏஹாக்கிரகத் தன்மை சம்பாதித்தல் வாயிலாக அபரோட்ஷ ஞான சாதனத் தன்மை நேருமெனின், அதுவும் அங்கீகரிக்கப்படுகின்றது. அறு சமய சதுர்புச உருவங்களைத் தியானித்தலும், பஞ்சாட்சரம் முதலிய மந்திரங்களை செபித்தலும் பரம்பரையாகப் பூரண சிவத்திற்குக் காரணமென்று சொல்லின் காரணமாகுக. அப்படியானால் நிர்க்குண பிரம்ம தியானத்தில் யாது விஷேசம் நிறைந்தது? அந்த சாதனங்களைப் பார்க்கினும் இந்த நிர்க்குணப் பிரம்ம தியானத்தில் அறிவு ஆதிக்கமாம். அபரோட்ச ஞானத்தின் சமீபத்தன்மை இருத்தலின் அதிவியப்பு உண்டு என்பதாம்.

சிறப்புப் பொருந்திய நிர்க்குண உபாசனை எப்போது பரிபக்குவமாகின்றதோ அப்போ நெருங்கிய சவ்விகற்ப சமாதியாம். இச் சவ்விகற்ப சமாதியாலும் மேன்மையான நிர்விகற்ப சமாதி அநாயாசமாக அடையப்படும். சொல்லிய நிர்விகற்ப சமாதி அடையின் தீவிரதர அதிகாரி உள்ளே அந்தக் கரணமாகிய புலன்களில் அசத்தோடு கூடிக் கூடாதிருக்கும் பூரண சிவத்தின் சத்தியம் மிஞ்சும். அளவின்றி மீண்டும் மகா வாக்கியம் முதலிய பாவனை செய்யின், தத்துவமசி மகா வாக்கியத்தால்தான் அந்தப் பூரண சிவம் என்னும் தத்துவ ஞானம் உண்டாம்.

**வைத்திய கலாநிதி வ. சின்னப்பு**

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமியின் மாணவன்

# எம்மை எமக்கு உணர வைக்கும் தியானம்

அரிய பேறு பெற்ற அன்பு மிக்க மானிடரே கேளுங்கள்! இப்பிறவி எமக்குக் கிடைத்தது புண்ணிய பேறு. இப்பேற்றினைப் பயன்படுத்தி பிறவிக் கடலைக் கடந்து நாம் பிறவா வரம் பெற வேண்டும். இப்படி எத்தனையோ அன்புக் கட்டளைகளை இவ்வையகத்திற்குச் சொன்னவர்கள் அனுபூதிமான்கள். மனிதன் இயற்கையாகவே மிகவும் நல்லவன். அவனது படைப்பில் அற்புதம் உண்டு. இயல்பாகவே அறிவை ஆண்டவன் அவனுக்குக் கொடுத்ததனால், அவனது சரீரத்திற்கு கொம்போ, கோரபற்களோ, வாலோ, அகோரமான முட்களோ ஆண்டவன் படைக்கவில்லை. அறிவு ஒன்றை இனாமாக இப்பிறப்பிற்கு வழங்கி, "மெய்யறிவைப் பெற்று நீ மேன்மை அடைவாய்", என இறைவன் மனிதனைப் படைத்தான். நல்வாழ்வு பெற வேண்டிய மனிதன் மெய்யறிவைப் பெறத் தவறுகின்ற பட்சத்தில், இப்புவியில் அல்லறபட்டு மீண்டும் பிறப்பதற்குத் தயாராகின்றான். அல்லல் அறுத்து ஆனந்த இன்பம் பெற இந்துக்கள் ஆயிரம் ஆயிரம் அற்புத தத்துவங்களை இவ் வையகத்திற்கு வழங்கியுள்ளான். இப்புவியில் பிறவி எடுத்தவன் துன்பம் கடந்த நிலைதனைப் பெறுவதற்கும், பிறவாநிலை பெறுவதற்கும், இறைவழிபாடு இன்றியமையாதது. இவ்இறைவழிபாட்டில் தன்னை உணர வைத்து ஞானத்தைப் பெற உதவுவது தியானம் ஆகும். தியானத்தின் மேன்மை பற்றி உபநிடத மகாவாக்கியங்கள் மிக அகலமாகச் சொல்லியுள்ளன. தியானம், வாழ்வுக்கும், வாழ்வுக்கு அப்பாலும் உதவுகின்ற உயர்ந்த மார்க்கமாகும். பகவத்கீதையிலும் தியானத்தின் மேன்மையினை கிருஷ்ண பரமாத்மா மிக அழுத்திச் சொல்லியுள்ளார். நல்ல மனிதன் துன்பப்படுவதற்குக் காரணம் அவனோடு கூடப்பிறந்த புலன்களாகும். மனிதனுக்கு முதல் பகையாக இருப்பவர்கள் அவனோடு கூடப்பிறந்த இப்புலன்களே. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் இவ் ஐம்புலன்களை அடக்குவதற்குத் தியானம் ஒன்றே சிறந்த மார்க்கம் என்பதை, என்றோ வாழ்ந்து தன்னை உணர்ந்த தத்துவ ஞானிகள் இவ்வையகத்திற்கு சொல்லியுள்ளார்கள்.

ஈழத் திருநாட்டில் – கைதடித் திருவூரில் அன்பர்களால் பேணப்படுகின்ற ஸ்ரீசச்சிதானந்தா ஆசிரமத்தில் அமையவிருக்கும் தியான நிலையம், இத்திருநாட்டிற்குக் கிடைக்க இருக்கின்ற வரப்பிரசாதம் ஆகும். ஞானிகள் நடமாடிய சிவபூமி மீண்டும் திருப் பொலிவு பெறுவதற்கு இத் தியான நிலையம் பெரிதும் உதவும். ஈழநாட்டில் திரிகால ஞானமுடைய எத்தனையோ அருட் செல்வர்கள் காலத்திற்கு காலம் நடமாடியுள்ளார்கள். அவர்களது பார்வைக்குள் அகப்பட்டவர்கள் இந்நாட்டின் ஆன்மீகப் பணிக்கு துணை செய்தவர்கள். இன்றும் அந்நிலை அகலத் தொடர வேண்டும். பாரததேசத்து மகாகவியாகிய பாரதியாருக்கு ஞான உபதேசம் செய்த சுவாமிகள் யாழ்பாணத்தைச் சேர்ந்தவர்கள். அதனாலேயே பாரதியார் அச்சுவாமிகளின் பெருமையினை

"கோவிந்த சாமி புகழ் சிறிது சொன்னேன்
குவலயத்தின் விழி போன்றான் யாழ்ப்பாணத்தான்"

எனப் புகழ்ந்து உரைத்துள்ளார்கள். ஆண்டவனை ஆலயங்களில் ஆடியும், பாடியும், அழுது அரற்றியும், தேடியும், கும்பிடுவார்கள். சில அடியவர்கள் ஐம்புலன்களை ஒடுக்கி அகத்துக்குள்ளே ஆண்டவனைப் பார்ப்பதற்கு அமைதியான இடத்தினையே தேடிக் கொள்வார்கள். அதற்குரிய தியான நிலையம்

இன்றைய சமூகத்திற்கு மிகவும் அத்தியாவசியமானது. அதனை கைதடி, சச்சிதானந்தா ஆசிரமத்து அன்பர்கள் நிறைவு செய்தமை போற்றுதலுக்குரியது.

தியானம் உயர்ந்த பயன்களைத் தரும் என்ற கருத்தினைக் கீழைத்தேசத்தவர்கள் மட்டுமன்றி, மேலைத்தேயத்தவர்களும் இன்று ஒப்புக் கொண்டுள்ளார்கள். சிந்தனை விருத்தியை வளர்க்கவும், தீராத நோய்களைத் தீர்க்கவும், மனிதனது உடல், உளப் பிரச்சனைகளை விடுவிக்கவும், தியானம் உயர்ந்த வழி என மெஞ்ஞானத்தோடு போட்டியிட்டு, இன்று விஞ்ஞானமும் கூறுகிறது. பிரபஞ்ச உண்மையை அறிந்து இன்பத்தையும், துன்பத்தையும் கடப்பதற்குத் தியானம் உறுதியான துணை செய்கின்றது. சுவாமி விவேகானந்தர் 1904ம் ஆண்டில் வாஷிங்டன் மண்டபத்தில் நிகழ்த்திய தியானம் பற்றிய உரையில் "நீங்கள் உலகவாழ்க்கையிலும், உயர்ந்தது ஒன்றை அடைந்தாக வேண்டுமானால் அது தியானத்தின் வழியிலேயே அடைய முடியும், தியானத்தின் மேன்மையானது தியானிப்பதால் பெறும் அனுபூதியாலேயே சொல்ல முடியும், சுவைக்க முடியும்" எனக் கூறுகிறார். தியானத்தைப் பற்றிப் போதிக்க முடியாது. அதைச் சாதித்துப் பார்ப்பதன் மூலமே விளங்கிக் கொள்ளலாம் எனக் கூறுகிறார். மேலும், அவர்கள் தன் உரையில் கூறியதாவது, "வாழ்க்கை துன்பமயமானது என்பதை இளைஞன் ஒருவன் ஏற்றுக் கொள்ள மாட்டான், வயோதிபன் ஒருவன் வாழ்வு இன்பகரமானது என்பதை ஏற்றுக்கொள்ள மாட்டான், வாழ்க்கையில் வயோதிபன் பெற்றுள்ள அனுபவத்தை இளைஞன் பெறாதவனாக இருக்கின்றான்" எனக் குறிப்பிட்டான். தியானம் இருக்கின்ற போது, எப்படித் தியானம் இருப்பது என்று பல சீடர்கள் தங்கள் குருவிடத்திலே வினாவிய போது, இதற்கு குரு சொன்ன பதில் 'சும்மா இரு' என்பதாகும். சும்மா இருப்பது என்பது மிகவும் கடினம் தான். எனினும் அதில் உள்ள சுகம் மிகப் பெரிது என்பதைப் பல பெரியோர்கள் விளக்கியுள்ளார்கள். அருணகிரிநாதர் சரணகம ஆலயத்தில் அரை நிமிட நேரமாவது தியானம் செய்ய அருள் செய்யுமாறு முருகனை வேண்டுகிறார். திருமந்திரத்தில் திருமூலர்

"வரும் ஆதி ஈர் எட்டு உள் வந்த தியானம்
பொருவாத புந்தி புலன் போக மேவல்
உருவாய சக்தி பரத்தியானம் உன்னும்
குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே"

- எனப் பதினாறு வகையான தியான வகைகளைக் குறிப்பிட்டுள்ளார். முன்வினைப் பாவங்களினாலும், அறியாமையினாலும் நன்மை எது, தீமை எது, என்று விளங்கிக்கொள்ள முடியாது. வீண் பொழுதைக் கழிப்பவர்கள் அவப் பொழுதை நீக்கித் தவப் பொழுதை மேற்கொள்ளத் தியானம் ஒரு நல்ல மார்க்கமாகும். மரண பயம் இல்லாத மனிதன் இல்லை. மரணம் எப்பொழுது வேண்டும் என்றாலும் வரலாம். ஒருபடி ஜெனனம், மறுபடி மரணம் வாழ்வில் நிச்சயம். எனவே மரண பயத்திலிருந்து விடுபட முனைவது ஒரு ஆத்ம சாதகனின் அரிய சாதனை ஆகும். மரண பயத்தை வெல்லத் தியானத்தின் மூலமாகப் பெறப்படுகின்ற வலு பெறுமதி மிக்கது. எனவே தியான வழிபாடு ஆத்மாவுக்குப் பேர் ஆறுதலைத் தருவது. 'தன்னை அறிந்தால் தனக்கு ஒரு கேடும் இல்லை' என்கிறார் தாயுமானவர். நம்மைப் பற்றி முழுவதும் அறிந்து கொண்டால் நமக்கு ஏற்படுகின்ற துன்பங்கள், துயரங்கள் முடிவு ஏற்படுகின்றது. ஆகவே தன்னை அறியும் அறிவே தலையாய அறிவு என்கின்றனர் பெரியோர். தன்னை அறிந்தவன் மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்துவான். மனிதர்கள் தனது ஆத்மாவைப் பற்றிச் சிந்திக்காது பிறரது வேண்டாத விடயங்களில் தலையிட்டு வேதனைகளைச் சம்பாதித்துத் துன்பப்படுவர்.

"ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண் கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு"

என்றார் வள்ளுவப் பெருந்தகை.

பிறரிடம் குற்றம் குறைகளைக் கண்டவர்கள் தங்களிடம் உள்ள குற்றம் குறைகளைக் கண்டு வருவார்களானால் பிறரைக் குறித்து குறை கூறவோ இகழவோ மாட்டார். எனவே இந்துக்களின் உயர் மார்க்கமாகக் காணப்படும் தியானத்தை ஒவ்வொரு இந்துக்களும் நெறிப்படுத்த முனைய வேண்டும். வாழ்க்கையில் வெற்றிகள், தோல்விகள், தடுமாற்றங்கள், ஏமாற்றங்கள், நட்புக்கள், உறவுகள், முறிவுகள் வந்து கொண்டேயிருக்கும். மனிதன் உலக அரங்கைத் தனக்கு உரியதாக்கிக் கொள்வதற்குப் பக்தி மார்க்கமே பயன் தரும்.

இன்றைய சமுதாயத்தில் இளைய சந்ததி முதல் முதியோர் வரை இறைவழிபாட்டை மேற்கொண்டு இடர்களைக் களைய வேண்டும். எனவே கைதடி ஆச்சிரமத்தில் அமைக்கப்பட்டிருக்கும் தியான நிலையம் எவ் வேளையிலும் அடையா வாயிலாக அகலத் திறந்திருக்கட்டும். ஞானிகளின் பெயரால் மெய்ப்பொருள் காண்பதற்கு இப்புவி மாந்தர் இதனைப் பயன்படுத்துவர். பல நூற்றுக்கணக்கான இளையவர்கள் இன்றைய சூழலினால் மனதை இழந்து தவிக்கின்றனர். தெல்லிப்பளை மன நோயாளர் சிகிச்சை நிலயத்தில் மாதாந்தம் மொத்தம் 600 பேர் வரை மருந்து வாங்க வருவதாக அறிக்கைகள் கூறுகின்றன. இன்னும் பலர் இறைவனை எங்கே காண்பேன் என ஏங்கித் தவிக்கின்றனர். இன்னும் சிலர் இங்கேயும் வாழ்வதா! இதுவும் ஒரு வாழ்க்கையா! என அலுத்துக் கொண்டு இவ்விடம் விட்டு அகன்று கொண்டிருக்கின்றனர். எனவே இன்றைய இடர்பாடுகளும் இடர்பாடுகளினால் இடரப்பட்டவர்களுக்கும், மனத் தளர்வுகளினால் தடுமாறுபவர்களுக்கும், உறுநோய்களினால் வாடுபவர்களுக்கும் இத்தியான நிலையம் பயன் தர வேண்டும். எனவே கைதடியில் அமைதியாக அமைந்திருக்கும் தியான நிலையம் ஆன்மாவுக்கு ஆறுதல் தரும். இத் தியான நிலையம் பற்றிய செய்தி அகலப் பரவட்டும். இப் பணியில் முன்னின்று உழைத்த அத்தனை பெரியவர்களுடைய திருவடிகளையும் தியானித்து நிறைவு செய்கின்றேன்.

திரு. ஆறுதிருமுருகன் B.A.
ஸ்கந்தவரோதயா கல்லூரி
சுன்னாகம்

# மனித வாழ்வும் ஞான நெறியும்

"ஞான தாகமுடையவர்களே!"

முத்தி நிலையடைய வேண்டும் எனும் விருப்பம் உள்ளவர்கள் அடிப்படையான சில உண்மைகளை அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது.

ஆன்மா இறைவனுடன் கலந்து ஏகமாதலே முத்தி நிலையாகும். அந் நிலையில் தான் பிறவி மொழியும் இறைவனுடன் இணைந்த நிலையில் பேரின்பம் பிறக்குமென ஞானிகளும், ஞானநூல்களும் உணர்த்துவது காண்க. கேவலம் அழியக் கூடிய உலகப் பதவிகளுக்குப் போட்டியிட்டு எவ்வளவோ முயற்சி செய்து எத்தனையோ தொல்லையெய்தி அப் பதவி பெற்றவர் மகிழ்ச்சியை என்னவென்பது? அப்படியாயின் பிறவி யொழிந்த அழியாப்பதவி-பேரின்பம் கிட்டும் பெரிய பதவி. உயர்வுற உயர் நலமுடைய பதவியாம் முத்திப் பேறு கிடைக்கும் போது ஏற்படும் இன்பம் அளவிலடங்காததன்றோ.?

எனவே ஞானவழி~முத்திநெறி என்பது,

"பிறப்ப தொழிந்து பிரம்ம சொரூபத்தில் கலந்து
பேரின்ப மடைதலே யாகும். இவ்வுண்மையை
நாம் நன்குணர்தல் வேண்டும்"

இவ் வழியில் செல்ல விரும்பும் ஞானப்பியாசிகள் இல்வாழ்வை விட்டு வெளியேற வேண்டுமென்பதில்லை. குடும்பத்தில்~தொழிலில் இருந்து கொண்டேயோகம்~ஞானம் பயின்று பயன் பெறலாம். அகத் துறவு அடைந்திருத்தாலே போதும்.

"நலல விவேகி இநத ஞானயோகததை அநுசாிப்பானாயின அவன அவசியம சித்தியடைவான. இதில சமசயமிலலை" எனும் பூரணானந்தயோகின் அருள் மொழியே சான்றாகும்.

இல்லற வாழ்விலுள்ள ஞானாப்பியாச சாதனையாளர்களுக்கு முதன் முதலாக இருக்க வேண்டிய அடிப்படை உணர்ச்சி "இம் மனிதப் பிறவி கிடைத்தற்கரியது" எனும் உணர்வேயாகும்.

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவியே
யாதினும் அரிதரிது காண்"

என மெய்ஞானச் செல்வர் தாயுமானவர் அருளியபடி மானிட சென்மம் மிகமிக உயர்வானதாகும்.

"அரிது அரிது மானுடராதலரிது! மானுடராயினும்
கூன்குருடு செவி பேடு நீங்கிப் பிறத்தலரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையில் ஞானமுங் கல்வியு நயத்தலரிது
ஞானமுங் கல்வியும் நயந்த காலையில்
தானமும் தவமும் தான் செயலரிது
தானமும் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே"

எனும் ஔவையாரின் அருளுரையை அறிந்துணர்க. இவ்வுண்மையை அறிவுறுத்தாத ஞான நூல்களும் இல்லை எனலாம். எனினும் இவ்வுண்மை வெறும் வாய்ப்பேச்சளவில் திண்ணை வேதாந்தமாக இருக்கிறது.

"எத்திற வேதுவாலோ எய்திய மானுடத் தேகம்
அத்திலும் ஆரணார்த்தம் அறிவதற்கேதுவாக
ஒத்தவாண்மையை யடைந்தும் உண்மையாம் முத்தி சேர
எத்தனஞ் செய்யா மூடன் என்று மான்மாவைக் கொன்றோன்"

ஆத்ம ஞான மடையாதோன் ஆன்மாவைக் கொன்றவனாவான் ஆதாலால் தேகமே நழுவி யானுமே

நழுவின் பின்னையுய்யும் வகையுள்ளதோ? எப்பிறவி வாய்க்குமோ? எனத் தீவிரமாக ஆராச்சியிலிறங்கி மனிதப் பிறப்பின் அருமையை நன்கு உணர்ந்து, இளமை கழிவதன் முன்னம் ~ சரீர சக்தி தளரும் முன்னம்~ நரை திரை மூப்பு நாடும் முன்னம் ~ தேகம் பிணம் ஆகும் முன்னம் வாழ்க்கையை ஞானவழியில் செலுத்தி முத்திப் பேறு அடைய முயற்சிக்க வேண்டும்.

"நாளை நாளை என்பீராயின் நம்முடை முறை நாளாவது
மறியீர் – நமனுடை முறைநாள் ஆவதுமறியீர்
எப்போ தாயினும் கூற்றுவன் வருவான்" ~ கபிலர்

பிறவி அலையாற்றில் புகுதாதே!
பிரகிருதி மார்க்க முற்றுழலாதே ~ திருப்புகழ்

ஆத்மஞான நிறவெய்தி அவாவின்மையாலும்
பற்றற்ற மனத்தனாம் மகாத்மாவுக்கு
எவரே இணையாவார் ~ கீதை 3~12

அடுத்தபடியாக ஞான வாழ்க்கை என்பது உலகில் கிடைக்கும் உயரிய பேறுகள், மற்ற முயற்சிகள் அனைத்தையும்விட மிகவும் மேலான வழியாகும். தவமும் தவமுடையார்க்காகுமன்றோ...

"தவம் செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவம் செய்வா ராசையுட்பட்டு" ~ திருக்குறள்

கிடைத்தற்கரிய பெருமை வாய்ந்த மேலான ஞானத்தைப் பெற விரும்புவோர் மற்ற எல்லாவற்றிலுமுள்ள பற்றுதலைவிடத் துணிய வேண்டும். ஒரே பற்றுதலைப் பற்ற வேண்டும். அதுவே மெய்ஞான விருப்பம் ஞான வாழ்க்கையில் உண்மையாகப் புகுமுன் சோகமும், தளர்ச்சியும், சோம்பலும், துயரமும், இடர்களும் அவ்வப்போது என்றேனும் வந்தே தீரும். அவற்றிற்கு இடங்கொடாது கருமமே கண்ணாக இருந்து முன்வைத்த காலைப் பின்வைக்காது உறுதியுடன் முயற்சி செய்து ஞான வழியில் உற்சாகமாக முன்னேற வேண்டும்.

"ஞானமே தெனக் கேட்டிடில் தத்துவநானென உணர்ந்திந்த
ஊனை நானென வுரைத்ததை யகன்றுபின் னொழிவரத்தனைக் கண்டு
மானம் வெட்கமும் துக்கமுங் கவலையும் வஞ்சனை தான் போக்கி
யீனமற்று நான் சிவமெனத் துணிந்து மிழந்தது முடிவாமே" ~ சிவானந்தபோதம்

மேலும் ஞானம் என்பது அறிவு. ஞானம் ஒன்றினாலே தான், அறிவு வளர்ச்சியாலே தான், பிறவியை~ பிறவித் துன்பத்தை ~ அகற்ற முடியும். அறிவே சிவம். பிரக்ஞானம், பிரம்மம் எனக் கூறுகிறது வேதம். பிறப்பொழிதலே முத்தி.

"பல்லாயிரம் மனிதர்களில் ஒருவன் முத்திபெற
முயல்கிறான் அம் முமுட்சுக்கள் பலரில் ஒருவனே
கடவுளை உள்ளபடி அறிகிறான்" ~ கீதை 7~3

இ. குழந்தைவடிவேலு
தலைவர், ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம்
கைதடி

# தியானம்

இன்று நாடு பூராவும் மனிதனிடையே காணப்படுவது (ரென்சன்) எனும் மன இறுக்கமாகும். ஏன் எதற்கு ஒன்று இல்லாமல் மனது பதட்டமான நிலையில் சிக்கி தவிக்கிறது. இவற்றில் இருந்து மனிதன் விடுபட விரும்பினால், தியானம் அவசியம். தியானம் என்றால் என்ன? தியானம் என்று சொன்னாலே மெய், மொழி, எண்ணம் ஆகியவற்றால் ஆழ்ந்து சிந்தித்தல் என்று பொருள். மனதை சற்றும் சலனமடைய விடாது ஒரே நிலையில்,ஒரே நோக்கில், பிடிப்புடன் ஒன்றை ஒரு பொருளைப் பற்றிநிற்றல் என்று பொதுவாக தியானத்துக்கு பொருள் கொள்ளலாம்.

தியானம் என்பது முற்றிலும் ஆத்மீகவாதிகளுக்கு சொந்தமானது என நினைத்து விடக்கூடாது. இவ்வுலகிலே வாழ்க்கையிலே நிம்மதியான, மகிழ்ச்சிகரமான சூழலை அமைத்து கொள்வதற்குதான் மதமும் மற்ற ஆன்மீக நெறிகளும் பயன்படுகின்றன. தியானம் என்பது தெய்வ வழிபாட்டின் ஒரு முக்கியமான அம்சமாக திகழ்கின்றது ஆன்மீக நோக்கத்துடன் மட்டுமே தியானத்தை பயன்படுத்த முடியும், பயன் படுத்த வேண்டும் என்று எண்ணிவிடலாகாது. தெய்வ நம்பிக்கை இல்லாதவர்கள் கூட தியான முறையினை பயன்படுத்தலாம்.

தியானம் அற்புதமான மனோத்தத்துவமாகும். இந்து மதத்தின் தத்துவங்கள் அனைத்தும் ஆழ்ந்து சிந்தித்து பார்க்கும் போது அதன் அற்புத சக்தியை புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். எமது வாழ்க்கையில் ஏற்படுகின்ற தோல்விகள், குழப்பங்கள் இவற்றைப் போக்கி முன்னேற்ற பாதையில் அமைத்து தருவது தியானம். மனதை சிதறவிடாமல், தனக்கென உயர்வான இலட்சியத்தை நிர்ணயித்துக் கொண்டு அந்த இலட்சியத்தை ஒரு நிலைப்பட்ட மனத்துடன் சிந்தித்துக் கொண்டு இருந்தால் அந்த இலட்சியம் நிட்சயமாக கைகூடிவிடும் என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்

“சிதறிச் சீரழியும் மனித மனத்தை ஒழுங்குபடுத்தி, அதன் பேராற்றலை ஒன்று திரட்டி, ஒருமுகப்படுத்தி, சரியான இலக்கு நோக்கி செலுத்தி, மகத்தான வெற்றி பெறப் பயன்படும் சாதந்தான் தியானம்” என கூறினார் மகாத்மாகாந்தி. “மனிதனை விலங்குகளின்றும் பிரித்தும் பெருமையளிப்பது உயர்வளிப்பது, அவனிடம் அமைந்திருக்கும் மனிதத் தன்மைதான். மனிதத் தன்மை என்பது மனிதனின் ஆளுமையைக் குறிக்கும். இவ்வாறு மனம் பிரமிப்பூட்டும் வல்லமையினைப் பெறுவதற்குத் தியானம் பயன்படுகின்றது” என்று மொழிந்தார் விவேகானந்தர்.

சித்தத்தை ஒரு முனைப்படுத்துவதற்கு உள்ள ஒரே சிறந்த வழி தியானம் மட்டுமே எனக் கூறினார் ஆச்சாரிய வினோபாபாவே.

இப்படி எல்லோரும் வியந்து கூறும் தியானம் எங்கே இருக்கு? இங்கேதான், எமக்குள்ளேதான். இந்து மதத்தின் அடிப்படை நோக்கமே தனிமனித மனத்திலே நிரந்தரமான அமைதிப் பண்பினைத் தோற்றுவிப்பதன் மூலம், சமூக அமைதியை உருவாக்கலாம்.

மனத்தை ஒருமுகப்படுத்த இறைவனை முற்றிலுமாக சரணைந்துவிடும் பக்தி நெறி, மனஅமைதி பெறுவதற்கான ஓர் உயர்ந்த பக்குவ நெறியாகும். எனவே தான் இறைவனை சிந்தையிலே நிறுத்துவதற்கான ஓர் அடிப்படைப் பயிற்சியாக தியான நெறியை இந்துமதம் அறிமுகப் படுத்துகிறது. உலகியல் சிந்தையில் திளைத்து தறிகெட்டு ஓடும் மனது, அந்த மனத்தை தியானத்தின் மூலம் ஒருமுனைப் படுத்தி இறைவனை மட்டும் சிந்தையில் கொள்ளச் செய்யலாம். ஒருமைப்பட்ட மனது, உலகியல் இன்ப துன்பங்களை வெறும் பார்வையாக பார்க்க கற்று கொள்வதால், மனித மனம் சலனமடையாமல் உயரிய வழியை நோக்கி செல்கிறது.

இந்து சமய நெறிகள் தத்துவங்கள் வழிகாட்டி முறைகள் அனைத்துமே மனத்தின் சஞ்சலத் தன்மையினை அகற்றி எண்ணங்களுக்கு வலிமையூட்ட பயன்படும் சாதனங்களாகத்தான் அமைந்துள்ளன. இவற்றை நாம் அறிந்து கொள்ளும் போது தியானத்தின் அடிப்படை இயல்பு எளிதில் புரிந்து கொள்ளலாம். எமது மனித வாழ்வின் இலட்சியம் இறைவனை உணர்த்தல், அடைதல் என எமது சாத்திரங்கள் கூறுகின்றன. இந்த இலட்சியத்தை அடைய பயன்படும் ஒரு சாதனந்தான் தியானம் என்பதாகும். தியானம் என்பது சாமனியமான தெய்வ வழிபாட்டின் தீவரமான ஓர் உயர்நிலையாகும். புலன்களால், கருவிகளால் காணமுடியாத பரம் பொருளை ஆழ்ந்த தியானம் ஒன்றின் மூலம்தான் இறைவனை அடையாளம் கண்டு கொள்ள முடியும். அவனை நெருங்கி, இறுதியாக இறைவனோடு ஐக்கியமாக முடியும். இவ்வாறு இந்து சாத்திரங்கள் விடையளிக்கின்றன.

எங்காவது ஓர் இடத்தில் அமர்ந்து சில மணி நேரம், கடவுளை நினைத்து தியானம் செய்தவுடனே கடவுள் வந்து தரிசனம் கொடுப்பார் என கருதி விடல் ஆகாது.

ஏகாந்தத்தை (ஒரு முனைப்பட்ட) மனநிலை அடைய சிறிது சிறிதாக பயில வேண்டும்.

இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும். முதலில் எமது நட்பங்களை கவனிக்க வேண்டும். மனதின் தன்மை என்பதன் அடிப்படையாகத்தான் "மனிதத் தன்மை" என்றும் வழக்கம் உருவாயிற்று என விவேகானந்தர் கூறுவர். ஐம்புலங்களும் ஐந்து விதங்களிலும் மனதைப்பிடித்து இழுத்து அலைக்கழித்து பலவீனப்படுத்துகின்றன. ஒன்றில் இருந்து ஒன்றில் தாவியபடியே, கடந்த காலத்தையும் எதிர் காலத்தையும் அசைபோட்ட வண்ணம் இருக்கும்.

சிதறி ஓடும் மனதை நாமே அவதானித்து திசை திருப்பி, உயரிய சிந்தனையில் அடியெடுத்து வைக்கும் போது பல பிரச்சனை எம்மை விட்டு ஓடுகின்றன. ஒருமுறை ஞான பொற்கோஜாவைக் கேட்டார்கள் நீங்கள் என்ன செய்து கொண்டு இருக்கின்றீர்கள்? "நான் சாதாரண வாழ்க்கை வாழ்கின்றேன் என் கொள்கை இதுதான், பசி எடுத்தால் சாப்பிடுவது, தூக்கம் வந்தால் தூங்குவது அவ்வளவுதான்" என்றார் ஞானி. இவ்வளவு பெரிய ஞானி இவ்வளவு சாதாரணமாகச் சொல்கிறாரே உண்மை இது தானா? அல்லது எதையாவது மூடி மறைக்கிறாரா? என்று கேள்வி கேட்டவர் நினைத்தார். அதனால் நீங்கள் செய்யும் காரியங்களில் எந்தத் தனித்தன்மையும் காணப்படவில்லையே என்றார். ஆமாம் எந்தத் தனித்தன்மையும் கிடையாது அதுதான் முக்கியம் என்றார் ஞானி. பசித்தால் புசிப்பது, உறக்கம் வந்தால்



தமது பெற்றோர் நினைவாக தண்ணீர் தாங்கி
அமைக்கும் பொறுப்பை ஏற்ற சுவிஸ்சில் உள்ள
திரு இ. சிவஞானம் தம்பதிகள்.



யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறைத்தலைவர்
பேராசிரியர் அ. சண்முகதாஸ் நூல் வெளியீட்டில்
ஆய்வுரை செய்கின்றார்கள்.

உறங்குவது, இதை எல்லாரும் தானே செய்கின்றார்கள் என்றார் கேள்வி கேட்டவர் விடாமல், ஞானி சிரித்தார்.

அப்படியல்ல அவர்களுக்கும் எனக்கும் வேறுபாடு உண்டு. நீங்கள் சாப்பிடும் போது உங்கள் மனம் சாப்பாட்டில் இருக்காது. அலைபாயும் அங்கும் இங்குமாக எதை எதையோ நினைத்துக்கொண்டு பேசிக்கொண்டு சாப்பிடுவீர்கள் அல்லது கனவு காண்பீர்கள். நான் அப்படியில்லை நான் சாப்பிடும் பொழுது சாப்பிட மட்டும் செய்கின்றேன், வேறு சிந்தனையே எனக்குக் கிடையாது.

நீங்கள் சாப்பிடும்போது நீங்கள் அங்கே இருப்பதில்லை. நான் அங்கே இருக்கிறேன். தூங்கும்போது நீங்கள் தூக்கத்தில் இல்லை. கவலையில், சிந்தனைகளில், குழப்பத்தில், கனவுகளில் அலைகிறீர்கள். ஆனால் தூக்கத்தின்போது நான் தூங்கமட்டும் செய்கிறேன். சாப்பிடும்போது நான் சாப்பாடாகி விடுகிறேன். நடக்கும் போது நான் நடத்தல் மட்டுமே, பொக்கோஜு அங்கு இல்லை எதைச்செய்கிறேனோ அதுவாகி விடுவது என் இயல்பு. இதுதான் மற்றவர்களுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம், என்றார் குரு.

செய்வதை சரியாக செய்வதே யோகம் என்று கீதை சொல்கிறது. செய்யும் தொழிலில் ஒன்றாகிவிடும் போது அது தியானமாகி விடுவதோடு செய்யப்படுவதும் முழுமையாகி விடுகிறது. அத்துடன் செய்யும் தொழிலின் பாரம், துன்பம் எதுவும் இல்லாமல் போய்விடுகிறது.

இதையே தாயுமானவர்

சிந்தனை போய் நான் எனல் போய் தேக்க
இன்ப மா மழையே வந்து பொழிந்தனை நீ வாழி பராபரமே.

சிந்னையின் ஒருமைப்பாடே தியானத்தற்கு அடிப்படையாகும்

சுவாமி விவேகானந்தர் கூறுகிறார் மனதை சிதறடித்து மலைக்குகையில் தியானம் செய்யும் ஒரு ஞானியை விட மரத்தடியில் இருந்து மனதை சிதறடிக்காது செருப்பு தைக்கும் சக்கிலியன் மேல் என்கிறார்

எனவே, தியானம் என்பது எம்மோடு எம்முள் இருப்பது. முதலில் மனதை ஒருமுகப்படுத்த எல்லாமே கைகூடும் என்பதில் ஐயமில்லை.

திருமதி. சகுந்தலாதேவி ஐயாத்துரைக் குருக்கள்
கைதடி வடக்கு
கைதடி

**அமரனாக ஆக...**

பணிவு என்ற பண்பு உன் வாழ்க்கையின் உயிர்நாடி. பணிவு இன்றி வாழ்பவனுடைய வாழ்க்கைத்தரம் நிச்சயமாக உயர்ச்சியடையாது. அடக்கமே உன்னை அமரனாகச் செய்யும்.

~வாரியார் ஸ்வாமிகள்

# ஆனந்தக் கோட்டையின் திறவுகோல் தியானமே

## பெ. சு. இராஜேந்திரன்
*ஆன்மீக மருத்துவ எழுத்தாளர்*

தியானம் என்றால் என்ன? குறித்த ஒரு பொருளின் மீது மனத்தினை நிறுத்தி வைத்தலே தாரணை. அந்த நிலையில் சிறிது நேரம் நிலைத்து இருந்தால் தியானம். தியானத்தை நீடித்து, அப்பொருளில் ஊடுருவி இருக்கும் உருவமற்ற பிரமத்தைக் கண்டு, அதனுடன் ஐக்கியமாகி இருக்கிற நிலையை அடைந்தால் அத்தியானம் சமாதி எனப்படும். தாரணை, தியானம், சமாதி இம் மூன்றும் ஒருங்கு கூடி இருப்பது சம்யமம். "ஒருவன் சம்யத்தில் சித்தி பெற்றால் எல்லா ஆற்றல்களும் அவனுக்குக் கிட்டும்" என்கிறார் பதஞ்சலி முனிவர்.

தியானத்தால் பரம்பொருளின் நிலையை உணருவது மட்டுமன்று, பரம் பொருளுடன் ஒன்றிவிடலாம் என்கிறார் பகவான் பிரும்மேந்திரர்.

தியானத்தால் நோய் நொடிகள் அகலுகின்றன; சிந்தனைத் திறன் பெருகுகின்றது; உறக்கத்தின் ஓய்வு கிட்டுகிறது; மனம் அமைதி நிலையை எய்துகின்றது; சீரான இரத்தோட்டமும் ஏற்படுகின்றது.

சுவாமி விவேகானந்தர் தியானத்தை நன்கு பயின்று உலகுக்கு ஆன்மீக ஒளியைத் தட்டியெழுப்பியவர். "இயற்கைக்கு அடிமையாயிருப்பதை எதிர்க்க உதவும் சக்தியே தியானம்" என்கிறார்.

இயற்கையின் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெற முயன்று பார்க்க வேண்டும். இயற்கையினால் ஏற்படும் தளைகளை நிச்சயமாக தியானித்தால் மாற்றிவிடக்கூடும். இந்த ஆற்றல் நம்மிடம் இருந்தால், அதுவே சுவர்க்கம் ~ அதுவே விடுதலை அல்லவா? அதுவே தியானத்தால் பெறும் ஆற்றல். இந்த ஆற்றலை எவ்வாறு பெறுவது? இதைப் பல்வேறு முறைகளில் பெறமுடியும். பலரும் பலவாறு கூறியுள்ளனர். ஒவ்வொருவர் மனமும் ஒவ்வொரு வழியில் செல்லும், ஆயினும் பொதுவான நியதி ஒன்றுதான். மனத்தின் எண்ண அலைகளை அடக்க வேண்டும். மனம் நீர் பெருகிய ஓர் ஏரி போன்றது. அதில் விழும் ஒவ்வொரு கல்லும் அலைகளை எழுப்புகிறது. இந்த அலைகளால் நமது பிம்பம் ஏரியின் நீரில் தெரிவதில்லை. பூரணச் சந்திர ன் நீரில் பிரதிபலிக்கின்றான். ஆனால் நீர்ப்பரப்பு கலக்கப்பட்டு இருப்பதால் பிம்பம் தெளிவாகத் தெரிவதில்லை. நீர்ப்பரப்பு அமைதி பெறட்டும். அலைகளை எழுப்பும்படி இயற்கையைத் தூண்ட வேண்டாம், சிறிது நேரம் அமைதியாய் இருங்கள். இப்போது இயற்கை ஒடுங்குவதால் நீங்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்கிறீர்கள்.

இறைவன் ஒரு சர்வவியாபி, எங்கும் நீக்கமற நிறைந்துள்ளார். ஆனால் அவரை மனம் பற்றவில்லையே. அது எண்ண அலைகளால் குழப்பம் அடைந்து, புலன்களின் வழியில் எப்பொழுதும் சென்று கொண்டு இருக்கின்றது. எண்ண அலைகள் சுழன்று கொண்டுதான் இருக்கின்றன. இந்த எண்ண அலைகளத் தியானத்தால் தான், அதன் ஆற்றலினால் தான் நிறுத்த முடியும். தியானத்தை மெல்ல மெல்லப் படிப்படியாக நாம் பயிற்சி பெற வேண்டும். ஒரு நாளல்ல, பல வருடங்கள் ஏன் பல பிறவிகள்

கூட எடுக்க வேண்டியிருக்கலாம். தன்னிச்சையாக இந்தப் பயிற்சியில் ஈடுபடப் பழக வேண்டும். சிறிது சிறிதாக முன்னேற்றம் அடைந்து வெற்றி பெறலாம். அப்போது ஒரு பெரிய நிலையைப் பெற்றதாக உணர்வீர்கள். இதை ஒருவரும் உங்களிடமிருந்து எடுத்துச் செல்ல இயலாது; ஒருவரும் இதை அழிக்க முடியாது; இந்த இன்பத்தை எந்தத் துன்பமும் பாதிக்க முடியாது.

ஆகையால் தினமும் காலையிலும் மாலையிலும் ஒரு பதினைந்து நிமிட நேரமாவது உலகை மறந்து, புலன்களை அடக்கி எண்ண அலைகளை நிறுத்தி, இறைவனிடம் மனத்தை ஒருமுகப்படுத்தித் தியானம் பயின்றால், உடலின் ஆற்றலும் உள்ளத்தின் ஆற்றலும் ஒருங்கே பெருகுமென்பதில் ஐயமில்லை.

சுருங்கக் கூறின் ஆனந்தக் கோட்டையின் வாசலைத் திறந்து பேரின்பம் அளிக்க உதவும் திறவுகோல் தியானம் எனலாம்.

# சித்தர்களின் சமாதி ஆலயங்கள்

| | | |
|---|---|---|
| சிதம்பரம் | ~ | திருமூலர் |
| திருப்பதி | ~ | கொங்கணர் |
| பழனி | ~ | யோகர் |
| சீர்காழி | ~ | சட்டைமுனி |
| திருப்பரங்குன்றம் | ~ | மச்சமுனி |
| தஞ்சைப் பெருங்கோயில் | ~ | கருவூரார் |
| அழகர் மலை | ~ | இராமதேவர் |
| திருவண்ணாமலை | ~ | இடைக்காடர் |
| திருவாரூர் | ~ | கமலமுனி |
| திருக்கடவூர் | ~ | பாம்பாட்டிச்சித்தர் |
| நாங்கணாச்சேரி | ~ | புண்ணாக்கீசர் |
| பொய்யூர் | ~ | கோரக்கர் |
| நாகபட்டினம் | ~ | அழுகண்ணிச்சித்தர் |
| மாயவரம் | ~ | குதம்பைச்சித்தர் |
| காஞ்சிபுரம் | ~ | கடுவெளிச்சித்தர் |
| காசி | ~ | நந்திதேவர் |
| எட்டுக்குடி | ~ | வான்மீகி |
| இராமேஸ்வரம் | ~ | பதஞ்சலி முனிவர் |
| வைத்தீஸ்வரர் கோயில் | ~ | தன்வந்திரி பகவான் |
| கும்பகோணம் | ~ | கும்பமுனி |



# இந்நூலிலுள்ள வடசொற் பொருட்கள்

1. சாதன சதுட்டயம் ~ ஞானம் சித்தியாதற்பொருட்டு மேற்கொள்ளப்படும் நான்கு வழிகள்
2. அபரோட்சம் ~ சீவனையும் சிவத்தையும் ஒன்றுபடுத்தும் ஞானம்
3. பரோட்ச ஞானம் ~ இறைவனொன்றுண்டு என்று அறிதல்
4. பிரக்மம் ~ பூரண சிவம்
5. உபாசனை ~ தியானம்
6. சர்விகற்ப சமாதி ~ பல தோற்றங்களோடும் சிவ தரிசனத்தில் நிலைப்பது
7. நிருவிகற்ப சமாதி ~ எவ்வித சிந்தனையுமின்றிய பூரண சிவத்தின் அனுபவம்
8. அநாயாசம் ~ அலைவில்லாதது. இலகுவானது.
9. சத்தியம் ~ உண்மை
10. தத்துவ மசி மகாவாக்கியம் ~ தத்பதம் ~ இயற்கைவடிவான ஈசன்
    துவம்பதம் ~ சமுசாரியான சிவன்
    அசிபதம் ~ பூரண சிவன்
11. நிருவிகாரம் ~ மாறுபாடற்ற தன்மை ~ சுயம்பு.
12. இகம் ~ நாம ரூபங்களோடு கூடிய விஷய போக உலகம்
13. ரஸஸ் வாதம் ~ உருவகதியானத்தில் அல்லது உருவமின்றிய சிவ தியானத்தில் தடைசெய்யும் விஷயங்கள்
14. அத்தியந்தம் ~ எவ்வித தோற்றமும் இல்லாமை (முற்றன்மை)
15. கவசம் ~ பாதுகாப்பு
16. ஊறு ~ இடர், துன்பம், தீபம்
17. பிரார்த்த கன்மம் ~ தனக்கென அமைந்த விவகாரம் ~ நித்திய கன்மம் ~ நிகழ்காலத்தில் முன் முன் செய்யப்பட்ட வினைகள்
18. பஞ்சீகரித்தல் ~ பஞ்ச பூதம் ஒன்றுடனொன்று கூடி பல உருவங்களை உண்டுபண்ணல்
19. ஆங்கமலநீர்போல்~ தாமரையில் நீர்
20. துகில் ~ வெள்ளை வஸ்திரம் ~ வெள்ளைஆடை
21. ஸ்மிருதி ~ பழைய எண்ணங்கள்~வாசனை
22. வஸ்து ~ பிரக்கம் ~ பூரணசிவம்
23. பிரக்மம் ~ தன்னாலே தான் நிறைவுடையது. அந்நியமின்மை
24. தாதாத்மியம் ~ ஒன்றுபட்டும் வேறாயும் இருப்பது
25. அன்னியோன்னியம் ~ ஒன்றுடனொன்று இருக்கின்ற சம்பந்தம்

# ஆசிரம நிர்வாக சபை

திரு இ. குழந்தைவடிவேலு (தலைவர்)

திரு வ. சுப்பையா

திரு ஆறுமுகம் கந்தையா JP

திரு சு. செல்வராசா GS

திரு பொ. கந்தசாமி

Dr. S. சிவயோகநாதன்

Dr. V. சின்னப்பு

Dr. V. கணேசலிங்கம்

செல்வி ச. ராதிகா

திரு க. ச. கணபதிப்பிள்ளை

திரு S.S. இராசையா

திரு சி. சுப்பிரமணியம்

திரு அ. லோகநாதன் B. Sc.

திரு வே. பாண்டியர்

திரு இ. விஜிதரன்

திரு ந. ஜெயரூபன்

திரு ச. வீரசிங்கம்

திருமதி சி. சின்னத்தம்பி

திரு சு. ஜெயவிக்னேஸ்வரன்

திரு க. குகதாசன்

திரு வே. நடராஜா

# எமது அஞ்சலிக்குரியோர்

❀ அம்மையாரின் தவவாழ்வில் ஒரு மெய்த் தொண்டராக இருந்து தம்மால் இயன்ற அரும்பணிகளைச் செய்த...

கைதடி சுப்பிரமணியம் சுவாமி அவர்கள்

❀ ஆசிரம நிர்வாக சபையில் ஆரம்ப உறுப்பினராக இருந்து சிந்தனைகளை உள்ளடக்கி எம்மையெல்லாம் வழிகாட்டிக் கொண்டிருக்கும் நிலையில் அமரரான...

திரு சி. சு. சின்னத்தம்பி அவர்கள்

❀ எமது ஆசிரம நிர்வாகத்தை ஒருங்கமைத்துப் பல சமய நிகழ்ச்சிகளைத் தானே முன்னின்று நடாத்தி அமரரான...

சட்டத்தரணி நா. குணபாலசிங்கம் அவர்கள்

❀ ஆசிரமப் பணிகள் ஒவ்வொன்றிலும் தனது பங்களிப்பும் இடம் பெற வேண்டுமென்ற ஆவலோடு நிதி உதவி அளித்த பெருந்தகை...

திரு ச. சிவசம்பு அவர்கள்

❀ ஆசிரமம் அமைப்பதற்கு காணியை ஆசிரமத்தின் பெயரில் தருமசாதனஞ்செய்து, தன்னால் இயன்ற பணிகளையும் செய்து, தியான மண்டப அத்திவாரத்திற்கு மூக்கு அணி போட்டு மகிழ்ந்த வள்ளல்...

திருமதி சோமசுந்தரம் தங்கம்மா அவர்கள்

**மேற்கூறிய யாவரும் பெம்மான் பெருநிழலில் பேரின்பம் துய்க்க அவனருளை வேண்டி அன்னவர் திருவடிகளை அஞ்சலிக்கின்றோம்.**

# எமது நன்றிக்குரியோர்

❀ ஆசிரம வளர்ச்சிக்கு அருந்துணையாக உதவிபுரிந்த நிறுவனங்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது சச்சிதானந்த குருமூர்த்தியின் ஞானஒளி அநுதினமும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

❀ சுவாமிகள் வாழ்ந்த தவக்குடிசையைத் தியான நிலையமாக அமைப்பதற்குச் சபையினர் தீர்மானஞ்செய்து கொண்டதை மிக்க அன்போடு ஆமோதித்து ஆரம்ப நிதி தந்து எம்மை வாழ்த்தி ஆசீர்வதித்த துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

❀ சுவாமிகளின் தியான நிலையக் கட்டிட வேலை நடைபெற இருப்பதை அறிந்து யாழ் நகரில் நிதி சேகரித்து வழங்கிய தொண்டர் திரு. கு. கங்கைவேணியன்; அவர்கள்.

❀ தியான நிலைய கட்டிட வேலைகளுக்கு யாழ்நகரில் வழங்கிய வர்த்தக நிறுவனங்கள்,

- ❑ வேணி களஞ்சியம்
- ❑ அம்பிகை களஞ்சியம்
- ❑ ஆதவன் ஸ்ரோர்ஸ்
- ❑ E.S. பேரம்பலம் அன் கோ
- ❑ K.K-A.K அன் கோ

❀ தியான நிலைய கட்டிட வேலைகளுக்கு சாவகச்சேரியில் நிதி வழங்கிய வர்த்தக நிறுவனங்கள்,

- ❑ ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்
- ❑ இராசம் வர்த்தக நிலையம்
- ❑ சன்றைஸ் ரேடர்ஸ்
- ❑ பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
- ❑ முருகன் அரிசி ஆலை

❀ தியான நிலையக் கட்டிடப்பணிகள், சுவாமி அம்மாவின் பணிகள், அடியார்கள் பணிகள் ஆகியவற்றில் தம்மை அர்ப்பணித்து உதவிவரும் திரு க. குகதாசன், திருமதி கு. அன்னபூரணி ஆகியோர்;



மாம்பழம் சுவாமியின் தலைமையில் இணுவிலில் அமைந்த சுவாமிகளின் சமாதிக்கு திரு. சு. விக்கினேஸ்வரன் அவர்களால் பூசை செய்யப்படுகின்றது.



1994ம் ஆண்டு ஆசிரம சரஸ்வதி பூசையில் இடம் பெற்ற கலை நிகழ்ச்சி.

❀ தியான நிலையக் கட்டிட வேலைகளுக்கு கைதடியில் நிதி வழங்கிய வர்த்தக நிறுவனங்கள்,

- ❑ ஸ்ரீ கணேசா ஸ்ரோர்ஸ்
- ❑ ஆரிய பவான்
- ❑ நியூ லீலாவதி களஞ்சியம்
- ❑ ஸ்ரீ சச்சிதானந்த என்ரபிறைஸ்

❀ தியான நிலையக் கட்டிட வேலைகளுக்கு வெளி நாட்டில் இருந்து நிதி உதவியோர்,

- ❑ திரு. இ. குகதாஸ் குடும்பம் ~ லண்டன்
- ❑ திரு. இ. நவநீதன் குடும்பம் ~ லண்டன்
- ❑ திரு. சி. சிவபாதசுந்தரம் குடும்பம் ~ கனடா
- ❑ திரு. இ. சிவஞானந்தம் குடும்பம் ~ சுவிஸ்
- ❑ திருமதி. புஸ்பமலர் சிவதாசன் ~ ஜேர்மனி
- ❑ திரு. கோ. தேவராசா குடும்பம் ~ ஜேர்மனி

❀ மற்றும் தியான நிலைய கட்டிட வேலைகளுக்கு நிதி உதவி வழங்கிய அன்பர்கள்...

| | | |
|---|---|---|
| 1) | துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P. | தெல்லிப்பழை |
| 2) | ஆறுமுகம் கந்தையா J.P. | கைதடி |
| 3) | அமரர் திருமதி தங்கம்மா சோமசுந்தரம் | கைதடி |
| 4) | திருமதி இ. தெய்வானைப்பிள்ளை | கைதடி |
| 5) | திரு S.T. இரவீந்திரன் ~ ஆசிரியர் | கைதடி |
| 6) | திரு சீ. அரசு | கைதடி |
| 7) | திரு மு. வாமதேவன் | ஊரெழு |
| 8) | திரு வே. விசுவநாதர் | கைதடி |
| 9) | திரு சி. இராமலிங்கம் | கைதடி |
| 10) | திரு சி. செல்வநாயகம் | கைதடி |
| 11) | திரு க. இராசரத்தினம் | யாழ்ப்பாணம் |
| 12) | திரு ப. சிவராமலிங்கம் | கைதடி |
| 13) | திரு சி. சுப்பிரமணியம் | கைதடி |
| 14) | திரு சி. இரட்ணசிங்கம் | நல்லூர் |
| 15) | திருமதி R. துரைரட்ணம் | கைதடி |
| 16) | திரு ச. சண்முகராசா | கைதடி |
| 17) | திரு T. சற்குணம் | கைதடி |
| 18) | திரு வே. முத்தத்தம்பி மாஸ்ரர் | கைதடி |
| 19) | திரு சு. செல்வராசா ~G.S. | கைதடி |

20) திரு க. டபிளேஸ்வரன் கைதடி
21) திரு சு. சிவலிங்கம் கைதடி
22) திரு க. குகதாசன் கைதடி
23) வைத்திய கலாநிதி வ. சின்னப்பு சாவகச்சேரி
24) திரு V.S. இரத்தினம் கைதடி
25) திரு சி. சரவணமுத்து ~ மாஸ்டர் கைதடி
26) திரு நா. சிவலிங்கராசா கைதடி

❁ தியான நிலையச் சிறப்பு மலருக்கு ஆசியுரைகள், வாழ்த்துரைகள், கட்டுரைகள் வழங்கிச் சிறப்பித்த ஆத்மீக ஞானிகள், அறிஞர் பெருமக்கள்.

❁ எமது வைபவங்களுக்குப் புகைப்படம், ஒளி ஒலிப்பதிவு எடுத்துதவிய புகைப்படக் கலைஞர் செல்வன் செ. ரங்கநாதன் அவர்கள்.

❁ கொழும்புக்கு இம்மலரை கொண்டுசென்று அச்சிடுவதற்கு உதவிபுரிந்த திரு த. குமாரகுலசிங்கம் அவர்கள்.

❁ மற்றும் கொழும்பிலிருந்து இம்மலரை அச்சிடுவதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளும் செய்துதவிய குலபதி ஆறுமுகம் கந்தையா J.P. அவர்கள்.

❁ இன்னும் நன்றிகூற எம் நினைவிற்கெட்டாது யாரேனும் தவறியிருப்பின், அவ்வுதவியாளர்கள்.

❁ இந்தளவிற்கு யாம் எடுக்குங்கருமங்களை நிறைவாக முற்றுப்பெறத் தோன்றாத் துணையாக இருந்து எம்மையெல்லாம் ஆட்டுவிக்கும் திருவருளுக்கும், குருவருளுக்கும் நிறைவான நன்றி. வணக்கம்.

ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம் ஆசிரம நிர்வாக சபை
கைதடி. 09 ~ 02 ~ 1998

*Published By*
ASHTRALUXUMI
320, Sea Street, Colombo 11. Tel : 334004

*Typesetted By*
Skyline Computer Systems
54, Ginthupitiya Street, Colombo 13. Tel : 075-334419

# சச்சிதானந்தம்



ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள், கைதடி.

வெளியீடு:- ஸ்ரீசச்சிதானந்த ஆசிரமம், ஆனந்தநகர்-கைதடி. இலங்கை.